www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
June
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
மே 10–16,1998
ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 256

# ஆளும் அணிக்கு ஆபத்து



## குண்டு மர்மம்

## திடீர் தொடர்

வல்வையிலிருந்து அமெரிக்கா வரை

## கடற் பயண அனுபவங்கள்





## சங்கீதாவுக்கு மிரட்டல்

## லவ் டானிக்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## பொதியல்ல — பொறி!

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

இந்தியாவின் முன்னாள் தூதர்
நாகேந்திரநாத் ஜா
கூறிய சில கருத்துக்கள்
சர்ச்சையைக் கிளப்பியுள்ளன.

இத்தனைக்கும் அவர்
அரசைக் கண்டித்தும் பேசவில்லை!
புலிகளை ஆதரித்தும்
கருத்து வெளியிடவில்லை!

வடக்கு-கிழக்கு இணைந்த
தீர்வு ஒன்றுதான்
நியாயமானதாக இருக்கும்
என்றுதான் கூறியிருந்தார்!

இது அவர்
நாட்டைப் பிரிக்கக்
கூறிய கருத்தல்ல!
பற்றி எரியும் பிரச்சனையை
தணிக்கக் கூறிய அபிப்பிராயம்!

அக் கூற்று
இலங்கை அரசுக்கும்
பேரினவாதச் சக்திகளுக்கும்
செவியில் ஈயத்தை
உருக்கி ஊற்றினாற்போல
ஆகியிருப்பது ஏன்?

வெளிநாட்டமைச்சர்
உத்தியோகபூர்வமாக
ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகைகளில்
காரசாரமான கண்டனங்கள்!

பேரினவாதிகள் அனைவரும்
சீறி எழுந்திருக்கின்றார்கள்!

இது ஒன்றும் புதுமையல்ல
இதில் ஒரு புதிருமில்லை.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு
உலக அனுதாபம்
ஏற்பட்டுவிடக் கூடாது
என்பதில் பேரினவாதிகள்
அக்கறையாக இருக்கிறார்கள்!

எப்போதெல்லாம்
சர்வதேச அரங்கில்
இலங்கை இனப்பிரச்சனை
விடயத்தில்
நியாயமான கருத்துக்கள்
பக்கச் சார்பின்றி
ஒலித்தனவோ- அப்போதெல்லாம்
பேரினவாதிகளின் குரல்கள்
அவற்றுக்கு எதிராக ஒலித்தன!

இலங்கைத் தமிழருக்கு
ஆதரவாக
சில நாடுகளில் மாநாடுகள்
நடைபெற்றபோதுகூட
அந்த நாட்டு தூதரகங்களுக்கு
இங்கு மிரட்டல்கள் எழுந்தன!

பேரினவாத நிலைப்பாட்டுக்கு
சாதகமான கருத்துக்களை
வெளிநாட்டு இராஜதந்திரிகள்
வெளியிடும்போது மட்டும்,
அது தலையீடாக
அவர்களுக்குத் தெரிவதில்லை!

அமெரிக்கப் பிரதிநிதி
முதற்கொண்டு,
மாலைதீவு ஜனாதிபதிவரை
இனப்பிரச்சனை பற்றி
கருத்துக் கூறியுள்ளனர்!

அவர்கள் எல்லாம்
தமிழ் பேசும் தாயகத்தை
கூறுபோடும்
'தீர்வுப் பொதி'க்கு
ஆதரவாகவல்லவா
ஓதிவிட்டுப் போகிறார்கள்!

ஆகவே- அவையெல்லாம்
இரசிக்கக்கூடிய
தலையீடுகளாகிவிடுகின்றன!

மொத்தத்தில் 'ஜா'வின்
கூற்றுக்கு ஏற்பட்ட எதிர்ப்பு
ஒரு வகையில் நன்மையே!

வடக்கு-கிழக்கு பிரிப்பில்
பேரினவாதிகளுக்கு உள்ள
அக்கறைக்கு
சற்றும் குறைந்ததல்ல
அரசின் அக்கறை
என்பது தெளிவாகிவிட்டது!

ஆக, முன்வைக்கப்பட்டிருப்பது
தீர்வுப் பொதியல்ல;
பொறி என்பது
உள்ளங்கை நெல்லிக்கனி!

மூன்றாம் தரப்பு
மத்தியஸ்தத்தை அரசு
நிராகரிப்பதன் அர்த்தமும்
வெள்ளிடைமலையாகிவிட்டது!

தமக்குத் தோதான
சர்வதேச அபிப்பிராயத்துடன்
தமக்குத் தோதான
தீர்வொன்றை தமிழ்த் தரப்பின்
தலையில் கட்ட முடியும்வரை
யுத்தம்! யுத்தம்! யுத்தம்!

இனிமேலும்
பொதிக்குள் விஷயம்
உண்டு என்றும்;
பொதிக்கு திருத்தம்
கொடுத்துள்ளோம் என்றும்,
தமிழ்க் கட்சிகள் கூறுமானால்
அவை தங்களையும் ஏமாற்றி;
தமிழ் மக்களையும் ஏமாற்றுகின்றன
என்பதே அர்த்தமாகும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## அகங்காரத்தில் ஆண்டவனைக் காணமுடியாது

# ஆன்மீகம்



மழைத்தண்ணீர் மேட்டு நிலத்தில் தங்கி நிற்பதில்லை. பள்ளமான இடத்திற்கு அது ஓடி வந்துவிடுகிறது.

அதுபோலவே இறைவனின் கிருபையானது தற்பெருமையும் கர்வமும், இழிவுக் குணமும் கொண்டவர்களுடைய உள்ளத்தில் தங்கி நிற்பதில்லை. பணிவுள்ளவர்களின் உள்ளத்திலேதான் தங்கி நிற்கும்.

"இறைவா எல்லாவற்றிற்கும் நீதான் கர்த்தா. எல்லாவற்றையும் செய்பவனும் நீ. நான் ஒரு கருவி. நீ எதைச் சொல்கிறாயோ, அதையேதான் நான் செய்கிறேன். இவையெல்லாம் உனது புகழ். நீ கட்டளையிடுகிறபடி உழைக்க மட்டுமே நான் கடமைப்பட்டவன்" என ஒருவன் உணர்ந்து 'நான்' எனும் மமதை களையும் போதுதான், தெய்வீகத்தில் ஐக்கியமாக முடியும்!

செல்வி. சுப்ரமணியம் வாணீஸ்வரி, அப்பர் கலஹா.

## கல்வி கற்காத உம்மி நபி

ரசூலுல்லாஹி (ஸல்) இளம் பருவத்தில்- பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து சிந்தனையிலே ஆழ்ந்துவிடுவார்கள். மற்றைய பிள்ளைகளைப் போல், விளையாட்டுக்களிலே அவ்வளவாக நாட்டம் கொள்வதில்லை. ரசூலுல்லாஹி (ஸல்) இளம் பருவத் தோழர்கள் ஒரு சமயம் தங்களுடன் விளையாட வருமாறு அழைத்தார்கள்! "மனிதன் மேலான காரியங்களுக்காகப் படைக்கப்பட்டிருக்கின்றான்; இது தவிர, விளையாட்டுக் காரியங்களில் ஈடுபடுவதற்காகப் படைக்கப்படவில்லை." எனக்கூறி மறுத்துவிட்டார்கள்.

இளமையிலே அறிவுக்கூர்மையும், சிறந்த ஆராய்ச்சியும் மிளிர்வதற்கான அறிகுறிகள் ரசூலுல்லாஹி (ஸல்) அவர்களிடம் நிரம்பக் காணப்பட்டன. எந்தக் கல்விக் கூடத்திலோ, எந்தத் தனி ஆசிரியரிடத்திலோ ரசூலுல்லாஹி (ஸல்) கல்வி பயின்றதில்லை.

இதனாலேயே ரசூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு- 'உம்மி' (கல்வி கற்காதவர்) என்ற பெயர் உண்டாயிற்று.

கல்லொழுவை அபூ நிஸ்மினா.

## கவிதைப் போட்டி இல.253

பரிசுக்குரிய கவிதை

### நம்பிக்கை

தடைகளை மீறி
வாழ்க்கை எழுகிறது!
நாளை என்பது
எமக்கும் இருக்கிறது!
முற்றுகை வாழ்விலும்
நம்பிக்கை முறியவில்லை!

மு. ராகவன்- முல்லைத்தீவு.



### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

**நிலா**

சமாதான நிலா
என்று நம்பியதால்;
எங்கள் வானத்து
நிலாவையும்
பறிகொடுத்தோம்!

எச்.ஏ. ஹுசைன்-
வெள்ளவத்தை.
கொழும்பு

**திரட்டு**

இருட்டினில்
நீதி மறையுமோ?
திருட்டினில்
சூரியன் தொலையுமோ?
இருட்டை உடைத்து
சூரியனை மீட்க
அறிவையும் திரட்டு!
துணிவையும் பெருக்கு!

து. கரன்- கண்டி.

**கல்வி**

இருளை விரட்ட
ஞான ஒளி
தேடுகிறாள்!

அ. திவ்யா-
மட்டக்களப்பு

**பணியோம்!**

துரத்தியே எம்மை
துவைத்திட்டபோதும்
தலை தாழ்த்தியே
பணிந்திடோம்!
நாவுக்கரசர் சொன்னது
நன் நூலிலே உள்ளது;
"நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்!"

சா. துவாரகா- வவுனியா.

## கவிதைப் போட்டி இல.256



(படப்பிடிப்பு:-கொட்டராமுலலை .'.பாருக்)

கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 16.05.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.256, தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

**அதுபோதும்**

ஆபிரகாம் லிங்கன் மட்டுமா-
நாங்களும் தான்!
ஜனாதிபதியாகிறோமோ
இல்லையோ,
சந்தேக நபராகாமல்
இருந்தால் போதும்!

இ. மார்ட்டின்-நீர்கொழும்பு.

**பற்றாக்குறை**

கட்டணம் மட்டும்
அறவிடுகிறார்கள்.
புத்தம் புது வரியுடன்!
'பவர்'மட்டும்
பற்றாக்குறை!

எஸ். சிவரஞ்சனி- யாழ்ப்பாணம்.

**வன்னியில்**

குப்பி விளக்கெரிய
பசியிலே,
சிறிய வயிறும் எரிய
'கொப்பி' புரட்டுகிறாள்
கல்விக் கண்கள் பெற!

அ. பெஞ்சமின்-பண்டாரவளை.

**நாளை**

பொருளாதாரத் தடை
போரினாலே வதை
வீசும் குண்டுகளின்
மத்தியிலும்
நாளைய தலைமுறை
நாளைக்காக தயாராகிறது!

மு. ஹம்சுதீன்-ஏறாவூர்



# வாசக(ர்)சாலை

இடி அமீன் அசத்தலோ அசத்தல்! வித்தியாசமான வில்லன்தான். கூடவே புகைப்படங்களையும் பிரசுரிப்பது நன்றாக உள்ளது.

என். ஷாமிலா, கொழும்பு-06.

முரசே! அவசரகால சட்டம் போன்ற கறுப்புச் சட்டங்களின் இரும்புக் கரங்களை எதிர்த்து தமிழ்க் கட்சிகள் போராடாதவரை இக்கட்சிகளின் வீர முழக்கங்கள் எல்லாம், வெறும் புஸ்வாணங்களே.

கி. ரூபகுமார், மட்டக்களப்பு.

### பாவம் இவர்கள்

தமிழ்க் கட்சிகளுக்கு 'முரசு' என்றால் ஏன் இத்தனை கோபம்? இங்கு முரசை அதிகமானோர் வாங்கிப்படிப்பதால் சில தமிழ்க் கட்சிகளின் 'வால்'களுக்கு பொறுக்கவில்லை. இவர்கள் எல்லாம் தங்கள் கட்சிகள் தவறானவை என்று தானே விலகி வந்தனர். அதை முரசின் 'அரசியல் தொடர்' சுட்டிக் காட்டும்போது மட்டும் ஏன் பொறுக்காமல் கூச்சலிடுகிறார்கள்? இவர்கள் நிலை பரிதாபமாக இருக்கிறது.

வே. ஆனந்தராஜ், சுவிற்ஸலாந்து.

### முரசும் — ஜாவும்

வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வையே பாரதிய ஜனதா கட்சி விரும்புகிறது என்று 'முரசு' செய்தி வெளியிட்டிருந்தது. பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற்ற உடனேயே அதனை கூறியிருந்தீர்கள். கொழும்பு வந்த நாகேந்திரநாத் ஜா வடக்கு-கிழக்கு இணைந்திருப்பதை வலியுறுத்தியபோது, முரசின் தகவல் உறுதியானது. சபாஷ் முரசே!

வெ. வித்தியாதரன்,
ஆரையம்பதி.

### தாரைவார்க்கலாமா?

அன்பு முரசுக்கு;

இன்று தமிழ்க் கட்சிகள் எடுத்துள்ள நிலைப்பாடு எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும். சோழனும், சேரனும், பாண்டியனும் இடைக்கிடையே தங்களுக்குள் யுத்தம் நடத்தியது உண்டு. ஆனால் தமக்குள் மோதி தம்மினத்தின் உரிமைகளை தாரை வார்த்தார்களா? கிடையாது. இங்கு தமிழ்க் கட்சிகள் தாங்கள் விடுகின்ற பிழைகளுக்கு எல்லாம் புலிகள்மீது பழிபோடுகின்றனர். ஆயினும் தாங்களும் உரமானவர்கள்தான் என்பதை மக்களுக்கு தெரியத்தக்க போராட்டங்கள் மூலம் நிரூபிக்க முன்வந்தது கிடையாது. 'ஆடத்தெரியாதவள் மேடை சரியில்லை' என்றாளாம். இத் தமிழ்க் - கட்சிகளும் அப்படித்தான்.

வீ. திவாகரன், மன்னார்.

### அனுபவித்தோம்

முரசே! இன்றைய அரசாங்கத்தின் குணநலன் பற்றியெல்லாம் இராஜதந்திரி சிறப்பாக எடுத்துக் காட்டியிருந்தார். அவரது அலசல் வந்த சூட்டோடு சூடாக கொழும்பில் நடந்தன அள்ளல்கள். அதாவது கைதுகள். 'புதிய பேரினவாதம்' எப்படிப்பட்டது என்பதை அனுபவித்து உணர்ந்து கொண்டோம்.

கா. பத்மாவதி, கொழும்பு-11.

அமெரிக்காவை 'முரசு' சாடியதில் நியாயம் இருக்கிறது என்பதை பில் ரிட்சாட்சனின் பேட்டியே நிரூபித்துவிட்டது! தவளையும் தன் வாயால் கெடும். அமெரிக்காவும் அப்படித்தான் தன் உள் நோக்கத்தை கூறிவிட்டது.

ஆர். மாணிக்கராஜா, திருமலை.

### துரத்தினால் மகிழ்ச்சி

விடுதலைப் புலிகள் ஏனைய தமிழ்க் கட்சிகளை ஏன் உதாசீனம் செய்கிறார்கள்? என்று நானும் நினைத்தது உண்டு. ஆனால் இங்கே செங்கலடியில் ஏனைய இயக்கங்கள் செய்யும் அட்டூழியங்களையும், நிதிப் பறிப்பையும் பார்த்தபின்னர், இவர்களைப் புலிகள் மட்டுமல்ல, படையினர் தாக்கித் துரத்தினால்கூட சந்தோசப்படுவோம்.

சி. கிரிதரன், மட்டக்களப்பு.

இராஜகுமாரனின் 'திருமறை தரும் பொதுநெறி' சிறப்பாக வருகிறது. ஒவ்வொரு அங்கமாக சேர்த்து வருகிறோம். 'முரசை' கத்தரிப்பதுதான் வேதனையாக இருக்கிறது. அதனால் வீட்டில் எனக்கும் தம்பிக்கும் இடையே சண்டையும் வருகிறது. (கத்தரிப்பது நான்தான்.)

செல்வி கோ. பிலோமினா, வத்தளை.

### நூல்நிலைய பிரசாரம்

அன்பின் முரசே!

அண்மையில் யாழ் பொது நூல் நிலையம் திறப்பு என ஒரு பிரசார நாடகத்தை அரசு அரங்கேற்றியது. பல ஆயிரம் கோடி ரூபா நிதியை இராணுவ நடவடிக்கைக்கு சத்தமின்றி செலவு செய்யும் அரசு சில கோடி ரூபாவில் அமைக்க வேண்டிய நூல் நிலையத்திற்கு ஏன் இவ்வளவு பிரசாரம் செய்கின்றது? இதன் பின்னணி என்ன?

உண்மையாக மக்களிற்கு சேவை செய்வதானால், அழிந்து போன நூல் நிலையம் அமைப்பதற்கு முன்னர், அழியாமல் இருக்கும் சாவகச்சேரி பொது நூல் நிலையத்தை ஏன் பொலிஸ் நிலையமாக மாற்றியுள்ளனர்?

நூல் நிலைய கட்டடத்தை நூல் நிலையத்திற்கு வழங்கிவிட்டு, காவல் துறையினருக்கு வேறு இடத்தைப் பெற்றுக் கொடுக்கலாம் தானே? மொத்தத்தில் நோக்கம் பிரசாரம் என்பதற்கு இதைவிட ஆதாரம் தேவைதானா?

தி. சிவகுகன், கொடிகாமம்.

பூலான் தேவிக்கு பின்னர் அடுத்தது என்ன என்று எதிர்பார்த்த எமக்கு, இடி அமீனின் உண்மைக்கதை ரசிகனின் பாணியில் திகட்டாத விருந்து. ரசிகனுக்கு பாராட்டு.

மா. ராஜேஸ்வரன், வவுனியா.

### அடுத்த தேர்தலும் அம்பாறையும்

அம்பாறையை ஏனைய தமிழ்க் கட்சிகள் விட்டுக்கொடுத்துவிட்டன. தாம் மட்டுமே விட்டுக் கொடுக்கவில்லை. என்று 'ரெலோ' இயக்கத்தினர் கூறுகின்றனர். அடுத்த தேர்தலுக்கு அம்பாறை மக்களது வாக்குகளை கவர இப்போதே தயாரிக்கப்பட்டுள்ள வாய்வீச்சே இதுவாகும். விட்டுக்கொடுக்க மாட்டோம். என்று கூறிக்கொண்டேதான் முன்னாள் தலைவர்களும் கிழக்கு பறிபோவதைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

அரசு பிரிப்பிலும், பறிப்பிலும் உறுதியாக இருக்கிறது. வெள்ளம் தலைக்குமேல் வர முன்னர் பிரிப்புக்கும், பறிப்புக்கும் எதிரான மக்கள் போராட்டங்களை நடத்த ரெலோ தயாரா?

கா.கிருஷ்ணன், காரைதீவு.

கார்லோஸ் உலகைக் கலக்கினான். இடி அமீன் உகண்டாவையே சாப்பிட்டு விடுவான் போலிருக்கிறது. அட்டகாசம் அபாரம்.

வீ. வசந்தி, கொழும்பு-09.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# இன ஒழிப்புப் போரில் தீவிரம்

## படை திரட்டல் குறித்து புலிகள் தெரிவிப்பு

இலங்கைப் படையினருக்கு 15 ஆயிரம் பேரை உடனடியாகத் திரட்டுவதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்துள்ளது.

பாடசாலை மாணவ, மாணவிகளிடம் உற்சாகமூட்டும் பிரசாரங்களை மேற்கொண்டு அவர்களை படையில் சேர்க்கும் திட்டமும் ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

இன்றைய அரசாங்கத்திற்கு அரசியல் தீர்வில் நாட்டம் இல்லை என்பதுடன், நீண்டகால இராணுவ மேலாதிக்கம் ஒன்றுக்கான தயாரிப்புக்களிலேயே அக்கறை செலுத்த தொடங்கியுள்ளது. என்பது வெளிப்படையாகிவிட்டது என்று அரசியல் நோக்கர்கள் கூறியுள்ளனர்.

அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்கள் மத்தியில், ஆரவாரமான போர் எழுச்சிப் பிரசாரங்கள் தென்னிலங்கை பாடசாலைகளில் நடைபெறப் போகின்றன.

தமிழ் மாணவர்கள் நிச்சயமாக சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். அதற்கான சூழல் இல்லை. சிங்கள மாணவ, மாணவிகளே சேர்த்துக் கொள்ளப்படுவர். எனவே, இன்றைய யுத்தம் இன யுத்தம் என்ற முழுமையான வடிவத்தை பெறுவதற்கும்,பல தலைமுறைகளுக்கு இன விரோதம் நீடிக்கவுமே தற்போதைய ஆள்சேர்ப்பு உதவப்போகிறது என்று சமூகவியலாளர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

### புலிகள் கருத்து

அரசின் ஆள் சேர்ப்பு திட்டம் தொடர்பாக வன்னியில் புலிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்:

'இன ஒழிப்புப் போரில் சந்திரிக்கா அரசாங்கம் தீவிரம் காட்டி வருகிறது. அதில் ஒரு கட்டமே சிங்கள பாடசாலை மாணவ மாணவியர்களை போரில் ஈடுபடுத்தும் திட்டமாகும்.

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சனைக்கு அரசியல்தீர்வு காண்பதற்கு முன்வராத சந்திரிக்கா அரசாங்கம், இன ஒழிப்புப் போருக்கு முழுச் சிங்கள மக்களையும் பங்காளிகளாக மாற்ற முனைகிறது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றின் ஊடாக தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு சந்திரிக்கா அரசாங்கம் தொடர்ந்து மறுத்துவருவதும், இன ஒழிப்புப் போரில் வெற்றி பெற்று, சிங்கள மக்களின் இரட்சகராக தன்னை காட்டிக் கொள்ளும் அரசியல் நோக்கத்துடனேயே ஆகும்' என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

### இராணுவமயம்

சமாதானத்துக்கு எதிரிகள் அல்லாத தமிழ் மக்களிடம் சமாதானம் பற்றிப் போதிக்கும் சர்வதேச சமூகம் சிறீலங்கா அரசின் போர் சன்னதம் குறித்து பாராமுகமாய் இருப்பது ஏன்?

ஒடுக்கப்படும் தேசிய இனம் தன்னை தற்காத்துக்கொள்ள ஆயுதம் ஏந்திப் போராடுவது சட்டரீதியான ஜனநாயக உரிமையாகும்.

இன ஒழிப்புப் போரில் ஈடுபட சிங்கள மக்களை இராணுவ மயப்படுத்த சந்திரிக்கா அரசு முனைப்பு காட்டி நிற்கிறது. இக்கால கட்டத்தில் ஆயுதங்களை கைவிடுமாறு புலிகளிடம் கோருவது, தமிழ் தேசிய இனத்தை நிராயுதபாணியாக்கி, பேரினவாதப் பூதம் முன்னால் பலிகொடுப்பதற்கு ஒப்பானதாகும் என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். ■

## யாழ் குடாநாட்டில் மேதினம்—மக்கள் ஆர்வம் இல்லை

யாழ் குடாநாட்டில் நடைபெற்ற மேதினக் கூட்டங்கள் எதிலும் தமிழ்க் கட்சிப் பிரமுகர்களது உரைகளைக் கேட்பதில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை.

அதனால் கூட்டங்களுக்கு மக்கள் வரவு குறைவாகவே காணப்பட்டது. கடந்த காலங்களில் யாழ் நகரில் மேதினக் கூட்டங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரளுவது வழக்கமாகும்.

கூட்டணி, ஈழமாணவர் பொதுமன்றம், புலிகள் இயக்கத்தினர் ஆகியோரால் நடத்தப்பட்ட மேதின கூட்டங்களுக்கே கடந்த காலத்தில் மிகப் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொள்வது வழக்கமாக இருந்தது.

தற்போது மக்களைக் கவரும் அளவுக்கு தமிழ்க் கட்சிகளது அரசியல் செயற்பாடுகள் அமையாமையால், கூட்டங்களுக்கு செல்வோர் எண்ணிக்கையும் குறைந்து விட்டது.

புளொட் அமைப்பினர் யாழ் குருநகரில் நடத்திய மேதினக் கூட்டத்தில் ஐயாயிரம் பேர்வரையான மக்கள் கலந்து கொண்டனர். இசை நிகழ்ச்சியைக் காண்பதற்கே பலர் வந்திருந்தனர்.

இசை நிகழ்ச்சி இன்றி நடைபெற்ற கட்சிக் கூட்டங்களில் கலந்து கொண்டோர் எண்ணிக்கை முன்னூறைத் தாண்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ■

## ஊரடங்கில் கொள்ளை!

திருமலை மாவட்டத்தில் உள்ள பல தமிழ்க் கிராமங்களில் பொலிசாரும், படையினரும் தாம் நினைத்தவாறு புதுப்புது விதிகளை அமுல் நடத்தி வருகின்றனர்.

திருமலை அன்புவழிபுரம் கிராமத்தில் இரவு 8 மணிக்கு பின்னர் ஊரடங்கு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஊரடங்கைப் பயன்படுத்தி தமிழ் வீடுகளில் கொள்ளைகள் நடைபெற்றுள்ளன. 30.04.98ல் வீடொன்றுக்குள் புகுந்து நகை, பணம் ஆகியவற்றை கொள்ளையிட்டுச் சென்றனராம்.

இதுபோல பல வீடுகளில் நடைபெற்றபோதும், 'முறையீடு செய்தால் ஆபத்து நேரும்' என்ற பயத்தில் பலர் வெளியே கூறாமல் இருப்பதாகத் தெரிகிறது.

3.05.98 அன்று இரவும் வீடொன்றில் கொள்ளையிட முயற்சிக்கப்பட்டதாம். வீட்டில் உள்ளவர்கள் கூச்சலிட்டதால் அயலவர்களும் இணைந்து குரல் கொடுத்தனர். அதனால் கொள்ளையர்கள் தப்பி ஓடியுள்ளனர்.

இக் கொள்ளைகள் தொடர்பாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையாம்.

## ஆயுதக் களஞ்சிய வெடிப்பு

### விபத்தா? சதியா? சந்தேகம்!

(நமது நிருபர்)

வவுனியா ஆயுதக் களஞ்சியம் பற்றி எரிந்து வெடிபொருட்களும், ஆயுத உபகரணங்களும், பல்லாயிரக்கணக்கான மோட்டார் ஷெல்களும் நாசமாயின. அங்கிருந்த வாகனங்களும் எரிந்து போயுள்ளன.

மின் ஒழுக்கே இதற்குக் காரணம் என்று உடனடியாக கூறியபோதும், உள்ளே தீவிர விசாரணை நடைபெற்றுவருகிறது.

இதற்கிடையே இந்த வெடிப்பு சம்பவம் இடம்பெற முன்னர் வவுனியாவில் ஒரு தகவல் வேகமாகப் பரவியது. "மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் கரும்புலி நகருக்குள் பிரவேசித்துள்ளார்!" என்றே தகவல் பரவியது. அதனையடுத்து கடுமையான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் இந்த வெடிப்பு தொடர்பாக புலிகள் உரிமை கோரவில்லை. பூடகமான செய்தி எதுவும்கூட தெரிவிக்கவில்லை.

சாதாரண மின் ஒழுக்கால் விபத்து ஏற்படும் அளவுக்கு ஆயுதக் களஞ்சியப் பகுதி வைக்கப்பட்டிருந்ததா? இல்லையெனில் உள்ளிருந்து நடத்தப்பட்ட சதிச் செயலா? என்று ஆராயப்பட்டு வருகிறது.

மிகப் பாதுகாப்பான ஆயுதக் களஞ்சியப் பகுதி என்பதால் தாக்குதலுக்கு உள்ளானால் கூட வெடிக்க முடியாதளவுக்கு ஏற்பாடுகள் இருந்திருக்கும். அப்படியிருக்க மின் ஒழுக்கு காரணமாக பெரும் விபத்து ஏற்படுவது சாத்தியமில்லை என்று தொழில்நுட்பவியலாளர் ஒருவர் கூறுகிறார்.

அரசுமீது அதிருப்தி உள்ள எவராவது உள்ளிருந்தே கைவரிசையைக் காட்டினாரா? என்றும் சந்தேகம் நிலவுகிறது.

முன்னர் வவுனியாவில் இருந்து லொறிகளில் பொருட்கள் கொண்டு செல்வதில் படையினர் பலருடன் புலிகளது ஆதரவாளர்களுக்குப் பரிச்சயம் இருந்தது.

பணம் பெற்றுக் கொண்டு புலிகளுக்கு பொருட்கள் அனுப்ப உதவியதாகக் கூறி இராணுவத்தினர் பலர் கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

முன்னர் தமக்குப் பரிச்சயமான யாராவது ஒருவருக்கு பணம் கொடுத்துக்கூட புலிகள் இவ்வாறான காரியங்களைச் செய்யக்கூடும் என்றும் சந்தேகம் எழுந்துள்ளது. அவ்வாறு செய்தால் புலிகள் உரிமை கோரமாட்டார்கள்.

## மர்மக் குண்டுவெடிப்புக்கள்

### மக்களிடையே சந்தேகம்

யாழ்ப்பாணம் தென்மராட்சியில் உள்ள கொடிகாமம் மத்திய சந்தைப் பகுதியில் கைக்குண்டொன்று வெடித்தது. இதில் முதியவர் ஒருவர் பலியானார். ஐந்து பேர் காயமடைந்தனர்.

ஏற்கனவே யாழ்ப்பாண நகரிலும் பெரிய கடைப்பகுதியில் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது. புலிகளால் வீசப்பட்டது என்றே படையினரால் தெரிவிக்கப்பட்டது.

தற்போது கொடிகாமச் சந்தைப் பகுதியிலும் மர்மக் குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளது. தென்மராட்சிப் பகுதியில் புலிகளின் ஊடுருவல் அதிகம் என்று கருதி படையினர் அங்கு தேடுதல் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளனர். பரவலான கைதுகளும் நடக்கின்றன.

இந்நிலையில் கொடிகாமம் சந்தைப் பகுதியில் பொதுமக்களைப் பலிகொள்ளும் விதமாகக் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

எங்கு புலிகளின் ஊடுருவல் அதிகம் என்று சந்தேகிக்கப்படுகிறதோ– தகவல்கள் வெளியாகிறதோ, அப்பகுதிகளில் மர்மக் குண்டுகள் வெடிப்பது ஏன்? என்ற கேள்வியும் மக்களிடையே எழுந்துள்ளது.

இவை தொடர்பாக யாழ்பாணத்தில் உள்ள கட்சிகள் எதுவும் அக்கறைப்படவில்லை. தொடர்ந்து மௌனம் சாதித்து வருகின்றன.

## தினம் ஒரு சிப்பாய் பலி!

### புலிகள் தெரிவிப்பு

யாழ் குடாநாட்டில் தமது கெரில்லா தாக்குதல்களை புலிகள் தீவிரமாக்கி உள்ளனர்.

யாழ் குடாநாட்டில் தமது தாக்குதல் காரணமாக சராசரி தினம் ஒரு சிப்பாய் பலியாவதாக புலிகள் விடுத்த செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 25,27,28 ஆகிய தினங்களில் புலிகள் மேற்கொண்ட மூன்று வெவ்வேறு தாக்குதல்களில் யாழ் குடாநாட்டில் எட்டு இராணுவத்தினர் பலியாகினர்.

04.05.98 அன்று கோண்டாவில் கள்ளுத் தவறணை அருகில் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் இராணுவ ஜீப் சேதமடைந்தது. பொலிசார் ஒருவர் காயமடைந்தார். ●

## காயமடைந்த புலி-கைக்குண்டுத் தாக்குதல்

மட்டக்களப்பு- முறக்கொட்டான்சேனையில் சமீபத்தில் இடம்பெற்ற சம்பவமொன்றில் ஒரு புலியும் மூன்று படை அலுவலர்களும் பலியானார்கள். இச்சம்பவம் நடந்த விதம் பற்றிப் பொதுமக்கள் சிலர் தெரிவித்ததாவது: சம்பவதினமிரவு படையினரின் முகாம் சுற்றாடலிலுள்ள வீட்டில் அப்பகுதித் தமிழ் மாது ஒருவருக்குப் பிரசவவலி ஏற்பட்டிருக்கிறது. இங்கு இரவு வேளையில் பொது மக்கள் வெளியே செல்ல முடியாத நிலை; எனினும் படையினருக்கு அந்தப் பெண் பிரசவ வேதனையால் அவதியுறும் தகவல் எப்படியோ தெரியவந்தது.

உடனடியாக அப்பகுதியிலுள்ள கார் ஒன்றை ஏற்பாடு செய்து உதவும் வகையில் படை அலுவலர்கள் நால்வர் கார் இருக்கும் வீடுநோக்கிச் சென்றுள்ளனர்.

இதனிடையே எதிர்பாராத விதமாக ஏற்கனவே அங்கு வந்திருந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலர் படையினர் வருவதைக் கண்டதும் எதிர்ப்புக் காட்டாது வேறு வேறு பக்கம் கலைந்து சென்று விட்டனர்.

ஒரு புலி மாத்திரம் படையினரிடம் மாட்டிக் கொண்டார். ஓட எத்தனித்தபோது படையினர் அவரது காலில் சுட்டனர். அவர் கீழே விழுந்துவிட்டார்.

அவர் புலிதான் என அடையாளம் கண்ட படையினர் அவரை சிறிது தூரம் இழுத்து வந்து ஓரிடத்தில் போட்டுவிட்டு ஒரு படைவீரரை முகாமுக்குத் தகவல் சொல்ல அனுப்பிவிட்டு மற்றைய மூவரும் அவ்விடத்தில் நின்றனர்.

அப்போது காயப்பட்டுக் கீழே கிடந்த புலி தனது இடுப்பிலிருந்து கிரனேற்றை உடனடியாக வெடிக்க வைத்தார். அதனால் அவ்விடத்தில் நின்ற மூன்று படையினரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்கள். இவர்கள் அலுவலர்கள் தரத்திலுள்ளோர் என்று கூறப்படுகிறது. முகாமுக்குச் சென்ற படைவீரர் ஓடிவந்து உடனே வீழ்ந்து கிடந்த புலி உறுப்பினரைச் சுட்டுக் கொன்றார்.

ஏப்பிரல் 30ஆம் திகதி மட்டக்களப்பு-வந்தாறுமூலையில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில், அன்று பகல் 11.15 அளவில் வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினரில் மூவர் ஓரிடத்தில் நின்றிருந்த போது மறைவிலிருந்த புலிகள் இயக்கத்தினர் படையினரில் இருவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு, அவர்களது ஆயுதங்களையும் பறித்துச் செல்ல முற்பட்டனர். அப்பொழுது அத்தாக்குதலிலிருந்து தப்பிய படைவீரர் இரு புலி உறுப்பினர்களையும் சுட்டுக் கொன்றார்.பின்னர் T-56 துப்பாக்கி-1 மகஸின்கள்-3, தோட்டாக்கள்-59, சயனைட் வில்லை-1 என்பன கைப்பற்றப்பட்டன.

புலிகள் இயக்க உறுப்பினர்களின் சடலங்கள் ஐ.சி.ஆர்.சி. மூலம் புலிகளிடம் கையளிக்கப்பட்டன. ■

## களுத்துறை குண்டுவெடிப்பு!

### உட் சதியே காரணம்

(அலுவலக நிருபர்)

களுத்துறை தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலைய குண்டுவெடிப்புக்கும் புலிகளுக்கும் தொடர்பு இல்லை என்றே நம்பப்படுகிறது.

உட்சதியே இதற்கு காரணம் என்றும், வலுக்குறைந்த குண்டே பாவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. குண்டு வலுக் குறைந்ததாக இருந்தபோதும், குண்டு வைக்கப்பட்ட பகுதி முக்கியமான மையமாக இருந்தமையால் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

அஞ்சல் தொலைத்தொடர்பு வேலை நிறுத்தத்தை முறியடிக்க மேற்கொள்ளப்பட்ட சதி இது என்றும், புலிகளுக்கு எதிரான உணர்வைத் தூண்டி அஞ்சல் தொலைத் தொடர்பாளர்களை பணிக்கு திரும்பச் செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி என்றும் எதிர்க் கட்சி வட்டாரங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

ஜே.வி.பியும் ஐ.தே.கட்சியும் இணைந்து அரசைக் கவிழ்க்கும் சதி முயற்சிகளில் இறங்கியுள்ளதாக ஆளும் கட்சி வட்டாரங்கள் கடுமையாக குற்றம் சாட்டியுள்ளன.

ஜே.வி.பி. மீதே ஆளும் கட்சி வட்டாரங்கள் சந்தேகம் தெரிவிக்கின்றன. குண்டின் எடையும், அது வைக்கப்பட்டமுறையும் உள்ளே இருக்கும் பலமான கை ஒன்றின் உதவியுடன் செய்யப்பட்ட காரியம் போன்றே தெரிகிறது.

வேலை நிறுத்த நெருக்கடியில் அரசு சிக்கியுள்ள நிலையில், அரசை அதிலிருந்து தப்ப வைக்கக்கூடிய விதமாக தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் புலிகள் குண்டு வைத்திருக்க மாட்டார்கள் என்றும் கருதப்படுகிறது. ■

## மட்டக்களப்பில் மேதினம்

### மக்கள் தலைமறைவு

மட்டக்களப்பில் புளோட், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.பி.டி.பி. ஆகிய மூன்று தமிழ் இயக்கங்களும் இம்முறை மேதினத்தை கூட்டாக இணைந்து நடத்தின. தமிழ் இயக்கங்கள் கூட்டாக ஏற்பாடு செய்திருந்த மேதினமானதால் முன்னரைப்போன்று தற்பொழுது படையினருடன் இணைந்து ஆயுதங்களுடன் இயங்கும் இயக்கங்கள் இம்முறையும் ஆயுதமுனையில் ஆட்களைப்பிடித்துக் கூட்டங்களுக்கு அழைத்துச் சென்று விடுவர் என்று பயந்த மக்கள் வீண் தொல்லைகளில் மாட்டி விடக்கூடாதென்பதற்காக நகர்ப் பக்கமே தலைகாட்டவில்லை. அன்றைய தினம் மட்டக்களப்பு நகர் வழக்கத்திற்கு மாறாக வெறிச்சோடி இருந்தது.

நகரில் எங்கு என்ன நடக்குமோ என்ற பீதி காரணமாகவும் தாம் ஆயுத முனையில் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டு விடுவோம் என்பதனாலும் பெரும்பாலான பொதுமக்கள் வீட்டோடு அடங்கிவிட்டார்கள். ஊர்வலத்திற்காகவும் கூட்டத்திற்காகவும் மறுப்பு தெரிவிக்க முடியாத சுகாதாரத் தொழிலாளர், சுமையாள் (நாட்டாமை) தொழிலாளர், ஓட்டோ சாரதிகள், மீனவர் சிலர் போன்றோர் முன் கூட்டியே கட்டாயமாகக் கேட்டுக் கொள்ளப்பட்டதற்கிணங்க கூட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

புளோட் இயக்கத்தினர் செங்கலடியிலும் வேறு சில பகுதிகளிலும் கடைகளைப் பூட்டச் செய்து கட்டாயத்தின் பேரில் கடைத் தொழிலாளிகளையும் உரிமையாளர்களையும் அழைத்துச் சென்றனர். பின்னர் இதனையறிந்த ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புளோட் இயக்கத்தினரை அழைத்து பொலிஸாரினது சிவில் நிர்வாக எல்லைக்குள் புளோட் இயக்கத்தினர் தலையிட்டுக் கட்டாயத்தின் பேரில் ஆட்களை அழைத்துச் சென்றதைக் கண்டித்து எச்சரித்தார்.

சில பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்டது போன்று வரலாறு காணாத சனத்திரள் கூட்டத்திற்கு வந்திருக்கவுமில்லை. ஆயிரக் கணக்கானோர் ஊர்வலத்தில் கலந்து கொள்ளவுமில்லை. இயக்க உறுப்பினர்களையும் சேர்த்து ஆயிரம் பேர் வரையே கூட்டத்தில் முழுமையாக் கலந்து கொண்டனர். ●

## மாணவன் சுட்டுக் கொலை!

### ஓடவிட்டுச் சுட்டனராம்!

(நமது நிருபர்)

அம்பாறை மாவட்டம் கல்முனை நகரில் 02.05.98 அன்று உயர்தர வகுப்பு தமிழ் மாணவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

விசேஷ அதிரடிப்படையினர் ரோந்து சென்றபோது, புலிகளுக்கும் அவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாகவும், அதன் போதே இடையில் மாணவர் பலியானதாகவும் பாதுகாப்புத் தரப்பினர் கூறியுள்ளனர்.

ஆனால் முரசுக்குக் கிடைத்த தகவலின் படி, பொடி அப்புஹாமி ஜெயகாந்தன் (வயது 19) என்னும் மேற்படி மாணவன் கைது செய்யப்பட்ட பின்னரே சுட்டுக் கொல்லப்பட்டதாக அறியப்படுகிறது.

புலிகள் இயக்க உறுப்பினராக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் மாணவன் கைது செய்யப்பட்டார். பின்னர் கல்முனை அம்மன் கோவில் வீதியில் அவரை இறக்கிவிட்டு, ஓடிச் செல்லுமாறு கூறிவிட்டே சுட்டனராம்.

குறிப்பிட்ட நாளில் புலிகளுக்கும் அதிரடிப் படையினருக்கும் இடையே மோதல் எதுவும் நடக்கவும் இல்லை. அதனால் பாதுகாப்புத் தரப்பினரின் கூற்றில் மேலும் சந்தேகம் அதிகமாகியுள்ளது.

கடந்த மாதம் அம்பாறை மாவட்டம் காரைதீவிலும் தமிழ் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தில் விசேஷ அதிரடிப்படையினர் கூறிய காரணம் பற்றி சந்தேகம் எழுப்பப்பட்டது. புலிகள்தான் அந்த இளைஞரை சுட்டனர் என்று கூறியிருந்தனர்.

விசேஷ அதிரடிப்படையினரின் நடவடிக்கைகள் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்களை பீதிகொள்ள வைத்துள்ளன.

தமிழ் இளைஞர்களை கட்டாய வேலை வாங்கும் கொடுமை நடப்பதாக ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. கண்டனக் குரல் எழுப்பியிருந்தார்.

அம்பாறை மாவட்டத்தில் நடைபெறும் அத்துமீறல்கள் குறித்து தமிழ்க் கட்சிகள் மௌனம் சாதிப்பது தொடர்பாக அங்குள்ள மக்கள் பலத்த அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

## பாதைத் தகர்ப்பு—காரணம் யார்?

சமீபத்தில் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள தோப்பூர் பொலிஸ் நிலையம் புலி இயக்கத்தினரால் தகர்க்கப்பட்டபோது அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூதூர் பஸ் டிப்போவுக்குச் சொந்தமான பஸ் ஒன்றையும் புலி இயக்கத்தினர் கைப்பற்றி வந்து விட்டனர்.

அந்த பஸ் தற்சமயம் மட்டக்களப்பு-வாகரையில் புலி இயக்கத்தினரின் பாவனையிலுள்ளது. அதன் பின்னர் அப்பகுதியிலுள்ள படகுப் பாதை குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது.

இதைப் புலி இயக்கத்தினரே செய்தார்கள் என்று செய்தியறிக்கையில் சொல்லப்பட்டது. ஆனால் அங்கிருந்து கிடைக்கும் சார்பற்ற தகவல்களின்படி புலி இயக்கத்தினர் இதில் சம்பந்தப்படவில்லையென்றும் வாகரைப் பகுதியிலிருந்து திருமலைப் பகுதிக்கு புலி இயக்கத்தினர் அடிக்கடி ஊடறுப்புக்களை நடத்தி தாக்குதல் நடத்த வசதியாகிவிடும் என்பதாலேயே திட்டமிட்டு இப்படகுப் பாதை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

எது எப்படியிருப்பினும் மேற்படி பாதையூடான போக்குவரத்துச் சேவையை நம்பியிருந்த அப்பிரதேச வாசிகள் பயண ஏற்பாடுகள் எதுவுமின்றிப் பெரிதும் சிரமப்படுகிறார்கள். ■

## பெண் பொலிசை மடக்கி பணயம் வைத்தார்!

(காரைதீவு நிருபர்)

கல்முனைப் பொலிஸ் நிலையத்தில் கடந்த ஞாயிறன்று (3.5.98) ஒரு கள்வன் நடாத்திய இருமணிநேர திகிலூட்டும் பணய நாடகத்தில் 3 பொலிஸாரும் வாகனம் பதிய வந்த பொதுமகனும் பலியாகியுள்ளனர்.

பாண்டிருப்பு எல்லையிலுள்ள டாக்டர் தோமஸ் வீட்டில் களவெடுக்கச் சென்றபோது பிடிபட்ட மருதமுனையைச் சேர்ந்த எம்.எஸ்.எம். ஜாபீர் (26) (முன்னாள் தொண்டர்படை உறுப்பினர்) என்பவரை விசாரிக்க கல்முனைப் பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்தனர்.

அங்கு விசாரணையின்போது ஆத்திரங் கொண்ட ஜாபீர் பொலிஸின் துப்பாக்கியை எடுத்து சுட்டுத்தள்ளினான். ஒரு பெண் பொலிசை பிடித்து மடக்கிவைத்துக்கொண்டு சுமார் 1½ மணிநேரம் பொலிஸ் நிலையத்தை தனது கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தார்.

வெளியிலிருந்த பொலிஸாரோ "புலிகள் உள்நுழைந்து தாக்குதல் நடத்துகின்றனர்," என்று விட்டு செய்வதறியாது நின்றனர். உடனே தகவல் காரைதீவு அதிரடிப்படைக்கும் சம்மாந்துறை பொலிஸாருக்கும் பறந்தது. அதனிடையே ஜாபீரால் சரத், குசும்சிறி, குணவர்த்தனா என்ற 3 பொலிசாரும் வாகனம் பதிய வந்த எஸ்.எம்.மொகமட் ஹாரூன் என்ற கல்முனைக் குடிவாசியும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கூடவே விஜேசிங்க பசீல்,தமயந்தி,ஹேரத் ஆகிய பொலிஸார் பலத்த காயமடைந்தனர்.

அங்குவந்த காரைதீவு அதிரடிப்படையினர் பதுங்கிப் பதுங்கி வந்து ஜாபீர் நின்ற இடத்தை நோக்கி கிரனைட் ஒன்றை உருட்டிவிட்டனர். கிரனைட் வெடித்ததில் ஜாபீர் பலியானார். ●



படிப்பகம்

www.padippakam.com

# தமிழை மறந்த தமிழ் பேசும் அதிகாரிகள்!

## பேருந்துகளில் தமிழ் புறக்கணிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

எப்படித்தான் தொண்டை கிழியக் கத்தினாலும் தமிழ் மொழி அமுலாக்கம் உரிய முறையில் அமுல் செய்யப்படாது என்பது நடக்கும் நிகழ்வுகளைப் பார்த்தால் நன்கு புலப்படுகிறது.

தனித் தமிழையே மாத்திரம் பேசும் தமிழ்ப் பகுதிகளில் தமிழ் மொழியைச் சரியான முறையில் அமுலாக்கம் செய்வதற்குத் தமிழ் மொழி பேசும் அதிகாரிகள் தங்களது அடிமைப் புத்தி காரணமாகத் தயங்கும்போது, சிங்கள மொழிப் பிரதேசங்களில் தமிழ் சரிவர அமுலாக்கப்படவில்லையென்று கண்டிப்பது எவ்வாறு?

தமிழ் மொழியைப் பேசும் பிரதேசங்களில் தமிழை உரிய முறையில் அமுல் செய்ய முழுக்க முழுக்க சந்தர்ப்பமுள்ளதென்பது முற்றிலும் உண்மையான விடயம். ஆனால் அந்தச் சந்தர்ப்பங்களில் கூட தங்களது அடிமைப்புத்தி காரணமாக தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு தமிழ் பேசும் அதிகாரிகள் தயங்குகின்றனர்.

'வரையறுக்கப்பட்ட கிழக்கிலங்கை புதிய பேருந்து நிறுவனம்' என்பதை மட்டக்களப்பு, வாழைச்சேனை, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய சாலைகளைச் சேர்ந்த ஒவ்வொரு பேருந்திலும் தனி ஆங்கிலத்தில் மாத்திரம் எருதியிருப்பட்தோடு அந்தந்தச் சாலைகளுக்குரிய அறிவித்தல் பலகையில் மேற்படி ஆங்கில வசனங்களை அப்படியே 'நியூ ஈஸ்ட்டேர்ன் பஸ் கம்பனி லிமிடெட்' என்று தமிழில் எழுதியிருக்கிறார்கள். அதே வேளை அதனைச் சிங்களத்தில் மொழி பெயர்த்து எதுவும் பிசகாமல் மிக நேர்த்தியாக உரிய அந்தஸ்துக் கொடுத்து எழுதியிருக்கிறார்கள்.

இதுபற்றி ஓர் அதிகாரியிடம் கேட்டபோது "அவ்வாறு எழுதுவதென்றுதான் தீர்மானமெடுக்கப்பட்டது. எக்காரணம் கொண்டும் தீர்மானத்தை மாற்ற முடியாது!" என்றார்.

அப்படியானால் தமிழ்ப் பகுதிகளில் ஆங்கில மொழிபேசும் பயணிகளா உள்ளார்கள்? அவர்களுக்காகவா சகலதையும் ஆங்கிலத்தில் எழுதும் தீர்மானத்தை அதிகாரத்திலுள்ள இந்த 'டமிலர்கள்' எடுத்தார்கள், என்றும் கேள்வி எழுப்பப்படுகிறது.

"முழுக்க முழுக்கத் தமிழ்ப் பகுதிகளில் போக்குவரத்திலீடுபடும் பஸ்களிலும் சிங்கள மொழியைப் பிரதானமாகக் கொண்டு எழுதியிருக்கிறார்கள். அற்ப சொற்ப சலுகைகளுக்காக தங்களை அறியாமலேயே இந்த அதிகாரிகள் இவ்வாறு நடந்து கொள்வது கண்டனத்திற்குரியது!" என்று வருத்தம் தெரிவிக்கிறார்கள் உணர்வுள்ள தமிழ பேசும் மக்கள்.

# இராணுவ அதிகாரி கடத்தப்பட்டாரா?

## படை வட்டாரங்கள் சந்தேகம்

மேஜர் சண்டிமா குணரட்ணம், முன்னர் இலங்கை இராணுவம் ஒரேயொரு பட்டாலியனாக இருந்தபோது படைத்துறை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் குணரட்ணவின் மகனாவார். தந்தை வழியில் இராணுவ சேவையையே தேர்ந்தெடுத்த இவர், கடந்த ஏப்ரல் 20ம் திகதி வன்னியில் நடந்த மோதலில் காணாமற் போய்விட்டார். இவர் புலிகளால் கடத்தப்பட்டிருக்கிறார் என்றே பெரிதும் நம்பப்படுகிறது.

சிறிலங்கா இராணுவத்தின் தொழில் நுட்ப மற்றும் பொறியியல் பிரிவில் சேர்ந்து கடமை பார்த்து வந்த மேஜர் குணரட்ண, 20ம் திகதியன்று நடைபெற்ற மோதலில் இரு தாங்கிகளை புலிகள் செயலிழக்க வைத்தபோது, அவற்றைப் பழுது பார்க்க முன்னணிக்குச் சென்றுள்ளார். அப்போது புலிகளின் தாக்குதல்கள் அதிகரிக்கவே, காயமடைந்து தரையில் வீழ்ந்தார். புலிகளின் தாக்குதல் வேகம் அதிகரித்தமையினால் படைகள் பின்வாங்கிச் சென்றனர்.

மேஜர் குணரட்ணாவை எவரும் கவனிக்கவில்லை. ஓரளவு-தாக்குதல் தணிந்ததைத் தொடர்ந்து படையினர் முன்னே சென்று தேடியபோது காயம்பட்டு விழுந்து கிடந்த மேஜரைக் காணவில்லை. இதனால் புலிகளே அவரைத் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளனர் என்று சந்தேகம் எழுந்துள்ளது. ■

# சமாதானப்பாதை கடினமானது! உள்ளிருந்தே அது வளர வேண்டும்!

(மட்டக்களப்பு நிருபர்)

"தன்னையும் பிறரையும் முழுமனதுடன் ஏற்றுக்கொண்டாலேதான் சமாதானப் பாதையில் பயணம் செய்ய முடியும். தனக்குள் காணப்படும் நல்ல பண்புகளையும் கெட்ட பண்புகளையும் புரிந்து கொள்வதன் மூலமே இது சாத்தியப்படும்.

சமாதானம் ஒவ்வொருவரினதும் இதயத்திநுள்ளிருந்துதான் மலர வேண்டும். இது கடினமான பாதை. எதிர்கால சந்ததியினர் எந்த சாதி, சமய, கலாசாரங்களைத் தழுவுகின்றவர்களாக இருந்தபோதிலும் அவர்களை மனித நேயமுள்ளவர்களாக மிகக் கவனத்துடன் வளர்க்க வேண்டும். அதற்காகவே சிறார்களை உள்ளம் தெளிந்த நற்பிரஜைகளாக உருவாக்கும் இந்த நன்முயற்சிக்கு உதவ நாம் தாராளமாக முன்வந்தோம்.

நாம் உதவி வழங்கும் அனைத்துத் திட்டங்களிலும் சமூகங்களுக்கிடையில் மனித நேய இன ஐக்கியத்தை வளர்ப்பதிலேயே கவனமெடுத்துச் செயற்படுகிறோம். எடுத்ததெற்கெல்லாம் பிளவு பட்டுச் செல்லும் மனோநிலையை மாற்றும் பாலமாகவே எமது கனடிய நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

கிழக்கிலங்கையிலும், நாடு முழுவதிலும் ஐக்கியப்பட்ட சமூகத்தை உருவாக்க நாம் அமுல்படுத்தும் திட்டங்கள் நடைமுறையில் சாத்தியமாகியுள்ளன. கிழக்கிலங்கையின் தமிழ்-முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவச் சிறார்களின் நல்வாழ்வுக்காக, இந்தப் பெரிய பஸ்ஸை அன்பளிப்புச் செய்வதில் பெருமைப்படுகிறேன்!" இவ்வாறு மட்டக்களப்பு சிறுவர் சமாதானப் பூங்காவிற்கு வரும் சிறார்களின் தேவைக்காக ரூபா பத்து இலட்சம் பெறுமதியான பஸ் ஒன்றைக் கையளிக்கும் வைபவத்தில் உரையாற்றிய கனடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் (WUSC) திட்ட அதிகாரி திரு எஸ். மாமாங்கராஜா தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கனடிய உயர் ஸ்தானிகராலயத்தின் அபிவிருத்தி ஆலோசகர் திருமதி மார்ணி கேர்வின், வூஸ்க் (WUSC) நிறுவனத்தின் வெளிக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி ஜி. மொனிக், கனடாவிலுள்ள சுழற்சிப் பூங்கா கண்டுபிடிப்பாளரும் இயக்குநருமான போல் ஹோகன், சீடா (CIDA) நிறுவனத்தின் அபிவிருத்தி ஆலோசகர் திருமதி சர்வம் கைலாசபதி, உளநல உதவி நிலையத்தின் பணிப்பாளர் பிதா போல் சற்குணநாயகம் மற்றும் வண்ணத்துப்பூச்சி சிறுவர் பூங்கா வெளிக்கள இணைப்பாளர் ஏ.எச்.ஏ. ஹுசைன் ஆகியோரும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். ●


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் திரு.
S.A.K. கோவிந்த பிள்ளை
(J.P.)
முன்னாள் தொழிலதிபர்,
அரசாங்க
அங்கத்தவருமான
HOTEL AL-SALAM-HORIZON SPORTS CLUB உரிமையாளர்

இறைவன் திருவடியில்
22.04.1997
திதி
11.05.1998
நினைவு கூருதல்
13.05.1998

எம்மையெல்லாம் வாழவைத்து வழிகாட்டிய அன்புத் தெய்வமே! ஒளிவிளக்கே! ஆறுதல் சொல்ல யார் இருந்தென்ன உங்கள் ஆருயிர் அன்புக்கு ஈடாகுமோ....

தந்தையின், முகத்தைப் பார்த்து நிமிர்ந்து நின்று பேசும் முன்னே பாதி வழியில் விட்டு போனது ஏன் அப்பா? வாழ்வதென எதிர்பார்த்து வாசம் வீசிய பூவொன்று பாதியிலே உதிருமென்று யாருமே எண்ணவில்லை. விண்ணிலே வெள்ளிகளுக்கு உங்கள் வரவு மகிழ்ச்சியய்யா. மண்ணிலே நமக்கு மாபெரும் துயரம் அப்பா. இனி ஒரு நாளில் ஒரு பொழுதில் உங்கள் குரல் கேட்குமா? இறைவன் திருவடியில் உங்கள் ஆத்மா அமைதிபெற வேண்டுகின்றோம்.

மனைவி கௌசல்யாதேவி, மகன் கௌசல்யதாசன், மகள் வினோதினி, பிள்ளைகள், மற்றும் அம்மா, அப்பா, அக்கா, தங்கை, மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள், ஊழியர்கள்.


# இராணுவ வாகன உதிரிப்பாகங்கள் கொள்வனவில் மோசடி

படையினர் பயன்படுத்தும் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் கொள்முதல் செய்வதற்காக கடந்த 3 ஆண்டுகளில் 15 கோடி ரூபா வரை செலவிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இதில் ஏராளமான பணம் மோசடி செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாக இராணுவத் தலைமைப்பீடம் இதுவரை விசாரணைகளை மேற்கொண்டு வந்தது.

இப்பொழுது விசாரணைகள் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதில் இரு பிரிகேடியர்களும் வேறு சிலரும் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இராணுவத்துக்கான பண்டங்களை விநியோகிக்கும் ஒப்பந்தக்காரர், குறிப்பிட்ட அளவு பண்டங்களுக்கான அளவைக் குறைத்துக்கொடுத்துவிட்டு முழுமையாக வழங்கிவிட்டதாகக் கணக்குக்காட்டி ஏராளமான பணத்தைக் கையாடி வந்துள்ளமையும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இவருடைய திருட்டுத்தனத்துக்கு சில உயர்தர அதிகாரிகளும் ஒத்துழைத்து வந்துள்ளனராம். ஒப்பந்தக்காரரின் முறைகேடுகளுக்கு ஒத்துழைத்த அதிகாரிகள், அவரிடமிருந்து விலையுயர்ந்த பெறுமதிகளை சந்தோஷமாகப் பெற்று வந்துள்ளனராம்.

இவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் கைதாவார்கள் என்று கூறப்படுகிறது.

# உதவித் தொகை

## மாகாணசபை முயற்சி

எழுபது வயதுக்கு மேற்பட்ட ஆயுள்வேத வைத்தியர்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்கான நடவடிக்கைகளை வடக்கு-கிழக்கு மாகாண சபை எடுத்து வருகிறது.

இதற்கென ஆளுநரால் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் இயங்கும் இக்குழுவில் மாகாண ஆயுள்வேத ஆணையாளர், ஆயுள்வேதப் பாதுகாப்புச் சபைப் பிரதிநிதி, மாகாண நிதியமைச்சின் பிரதிநிதி ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள்.

இக் குழு, உதவித்தொகை பெறுவதற்குத் தகுதியான வைத்தியர்களைத் தெரிவு செய்யும் என உள்ளூராட்சி ஆணையாளர் க.சபாபதிப் பிள்ளை தெரிவித்துள்ளார். ■

# ஒரு புலி பலி

மட்டக்களப்பு-மாவடிவெம்பு இராணுவ முகாமுக்கு முன்னால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவரை படையினர் நிற்குமாறு பணித்தனர். அவர் நிற்காது போகவே படையினர் சுட்டதில் அவர் பலியானார். அவரிடமிருந்து ஒரு சுழல் துப்பாக்கி, இரு கைக்குண்டுகள் என்பன மீட்கப்பட்டன.

இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் அவர் சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சடலத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக புலிகள் இயக்கத்தினரிடம் ஒப்படைக்கப் படையினர் ஏற்பாடு செய்தனர். இச்சம்பவம் 24.04.98 அன்று காலை 10 மணிக்கு இடம் பெற்றது. ■

## ஏமாற்றத்தைத் தவிர்க்க்வும்

முரசில் பிறந்தநாள் வாழ்த்து வண்ண விளம்பரங்கள் 2 மாதங்களுக்கு முன்னரே வாடிக்கையாளர்களால் பதிவு செய்யப்பட்டு விடுகின்றன.

எனவே வண்ண, கறுப்பு-வெள்ளை விளம்பரங்களைத் தாமதமின்றிப் பதிவு செய்து ஏமாற்றத்தைத் தவிருங்கள். -விளம்பர நிர்வாகி


## வகுப்பு

Chinese Cookery,
Fabric Painting, indian Cutting - தையல்
Panclay & Costume Jewellerysets
General cookery கற்பிக்கப்படும்

Zulfikah Hameed
176, Weluvena Rd,
Dematagoda, Col-09.
Tel- 683005

## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 25ந் திகதி வரை

SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE,
WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067.

25ந் திகதி முதல் 30ந் திகதி வரை

SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218

கொழும்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதில் முன்னோடி....

## நாகூர் டிரவல்ஸ் & டுவர்ஸ்

★ குவைத் ★ டுபாய் ★ சவூதி அரேபியா ★ ஜோர்தான்
★ சிங்கப்பூர் நாடுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும்
ஏராளமான வேலைவாய்ப்புக்கள் - இன்றே நாடுங்கள்

NAGOOR Travels & Tours
அங்கீகார இல 1094
33 DIAS PLACE,
GUNASINGHEPURA,
COLOMBO - 12.
☎ 439392

- Royal - 071-35132

## மனோதத்துவ வைத்தியம்


கொழும்பு விலாசம் மட்டும் மாற்றப்பட்டுள்ளது
கொழும்பில் BEAUTY LODGE
67 A, Wolfendhal Street. Colombo - 13
T.P: 338165 - 338166
(5 லாம்புச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உள்ளது)
பிரபல மனோதத்துவ வைத்தியர் ஆறுமுகம் அவர்களைச் சந்திக்கும் இடங்கள்

கல்முனை
மே 9, 10, 11 ஆம் திகதிகளில்
T. M. M பாமசியில் T.P.: 065. 29329

வவுனியாவில்
மே 16, 17, 18 ஆம் திகதிகளில்
(2ஆம் குறுக்குத் தெரு) ஞானவைரவர் கோவில் ஒழுங்கை
VANNI INN இல் சந்திக்கலாம்
T.P. 024 - 22074 இல் முன்கூட்டியே பதிவு செய்யவும்
மற்றநாட்களில்
DR. P. ARUMUGAM. S.A.M.P
NO. 33, Tissa Weerasinghm Sq, Boundary Road,
BATTICALOA

## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

# CIT

Be a Software Professional!
Beat the Worldwide IT Skills Shortage
Learn
ORACLE DEVELOPER 2000, POWER BUILDER, VISUAL BASIC, WINDOWS NT

SECURE A FOREIGN IT JOB
Courses conducted by foreign lecturers

| Course | No. of Weeks | Total Hours | Course Fee Rs. |
|---|---|---|---|
| **Client Server Development Tools** | | | |
| 1. Microsoft Visual Basic V5 | 5 | 35 | 3,950 |
| 2. Oracle 7.1 with Developer 2000 | 10 | 80 | 5,900 |
| 3. Power Builder V5.0 | 7 | 48 | 5,250 |
| **Windows & Windows NT Support** | | | |
| 4. Supporting Windows 95 | 2 | 13 | 2,750 |
| 5. Supporting Microsoft Windows NT Ver.4.0 | 4 | 40 | 4,000 |
| **Databases** | | | |
| 6. Microsoft Access V2 Development | 10 | 72 | 3,750 |
| 7. MS SQL Server V6.5 | 5 | 42 | 5,950 |
| **Microsoft Office & Exchange** | | | |
| 8. Supporting Microsoft Word | 2 | 20 | 2,150 |
| 9. Supporting Microsoft Excel | 2 | 20 | 2,150 |
| 10. MS Office | 4 | 40 | 4,900 |

Preparing you for Foreign Job World
Week day, Evening & Weekend classes.

Call & Register Now
Colombo Institute of Technology
256, Galle Road, Colombo 6.
Phone : 502111 (5 lines) Fax: 502203
Email : cit@sri.lanka.net

Why choose CIT Training
- Leading Edge Courses
- Latest packages
- Limited class size
- Training to meet todays needs




படிப்பகம்

www.padippakam.com



**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# 'புலிவேட்டை'யும் 'படைவேட்டை'யும்

**வ**ன்னியை நோக்கி படைகளை அரசாங்கம் அனுப்பிக்கொண்டிருக்க, பிரபாகரன் தனது படையணிகளில் ஒரு பிரிவை திருமலை நோக்கி அனுப்பியிருக்கிறார்.

கடந்த ஏப்ரல் மாத நடுப்பகுதியில் திருமலை படைத் தலைமைக்கும் மூதூரில் இருந்து அத் தகவல் நம்பகமாக கிடைத்திருந்தது.

மூதூரில் புலிகள் இயக்கத்தில் இருந்து விலகி படையினருடன் இணைந்து கொண்டவர்கள் ஆறுபேர்.

அவர்களில் மூன்று பேரை புலிகள் தீர்த்துக்கட்டிவிட்டனர். மேலும் மூன்று பேர் இராணுவ முகாம்களுக்குள்ளேயே தூங்கி எழுந்து, அங்கேயே சீவியம் நடத்துவதால் உயிர் தப்பி வருகின்றனர்.

**இந்த மூன்று பேரையும் என்ன விலை கொடுத்தும் தீர்த்துக் கட்டுவது என்று புலிகளது திருமலை மாவட்ட தலைமை திடசங்கற்பம் பூண்டுள்ளதாம்.**

'இந்த மூன்றுபேரை தீர்த்துக்கட்ட தம்மில் ஆறுபேரை பலிகொடுத்தால்கூட பரவாயில்லை' என்று மூதூர் பிரதேச புலிகள் இயக்க பிரமுகர் ஒருவர் கூறினாராம்.

முன்னர் மூன்று பேரைத் தீர்த்துக் கட்டிய நடவடிக்கைகளின்போது ஆறு பேரை புலிகள் இழந்தனர் என்று தெரிகிறது.

தற்போது உயிர் தப்பியுள்ள மூன்று பேரும் மூதூரில் உள்ள தமது உறவினர்கள் மூலம் தகவல் பெற்று படையினருக்கு பலாப்பழம்போல கொடுத்து வருகின்றனர்.

அதற்கு பதிலாக படையினர் அவர்களது அடாவடித்தனங்களை கண்டும் காணாமல் இருக்கின்றனர்.

இவர்கள் மூலம்தான் மூதூரில் புலிகளது புதிய படையணிகள் வந்து இறங்கியுள்ள தகவல் படையினருக்கு எட்டியது.

**புதிய படையணிகளில் யாழ் மாவட்ட உறுப்பினர்களும் இருந்தனர். அதனால் தாக்குதல்களுக்காகவே அணிகள் வந்திருக்கின்றன என்பதை படையினர் ஊகித்து விட்டனர்.**

அதனையடுத்தே மூதூரில் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகள் நோக்கி 'புலி வேட்டை' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**பெரும் ஆரவாரமாக அறிவிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டபோதும், எவ்வித பலனையும் பெறமுடியாத நடவடிக்கையாகவே இது முடிந்தது.**

புலிகள் பாரிய மோட்டார் ஷெல் தாக்குதல்களை நடத்தியதாகவும், அதனால் கடும் மோதலில் ஈடுபட்டபடி படையினர் முன்னேறுவதாகவும் செய்திகள் வந்தன.

**ஆனால், 'புலிவேட்டை' நடவடிக்கை ஆரம்பமான தினத்தன்று முன்னேறிய துருப்புக்கள்மீது இரண்டே இரண்டு ஷெல்களை மட்டுமே புலிகள் ஏவினார்கள்.**

இரண்டு ஷெல்கள் வந்து விழுந்ததும் படையினர் தமது நிலைகளுக்கு திரும்பினார்கள். அதன்பின்னர் மூன்று நாட்கள் புலிவேட்டைக்கு ஓய்வு. தம்மை மேலும் பலப்படுத்திக்கொண்டு படையினர் முன்னேறினர். புலிகள் எதிர்ப்புக் காட்டவில்லை. ஆனால் படையினரின் முன்னேற்றத்தை வேவு பார்த்தபடி அப்பகுதிகளை அண்டியே பதுங்கி இருந்தனர்.

**உள்ளே சென்று படையினர் நிலை கொள்ளப் போவதில்லை. அப்படி நிலை கொண்டாலும் தாக்குதல் நடத்துவது சுலபம். எனவே முன்னேறிச் செல்ல அனுமதிப்பது என்பதே புலிகளின் தந்திரோபாயம்.**

படையினர் மூதூரில் புலிவேட்டை நடத்திக்கொண்டிருக்க, புலிகளின் அணி ஒன்று படை வேட்டைக்கு புறப்பட்டது.

திருமலை மாவட்ட பன்சன் கொடல என்னும் இடத்தில் இருந்த இராணுவ மினி முகாம்தான் புலிகளின் குறி.

புலிகளின் அதிரடிப் பாய்ச்சலில் முகாம் வீழ்ச்சியடைந்தது. மூன்று படையினர் பலியாகினர். ஏனையோர் பின்வாங்கினார்கள்.

**இம் முகாம்மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாலேயே வீழ்ச்சி அடைந்ததாக படைத்தரப்பு கூறியது. ஆனால் ஷெல் தாக்குதல் மட்டும் நடத்தப்படுமானால், படையினர் பதுங்கிக் கொள்ள காப்பரண்கள் இங்கே இருந்தன.**

ஷெல் தாக்குதல்களால் முகாம்களை தாக்கலாம், படையினர் பதுங்கு நிலை எடுக்க முன்னர் விழுந்து வெடிக்கும் ஷெல்களால் உயிர் சேதமும் ஏற்படுத்தலாம். ஆனால் பின்னர் படையினர் பதுங்கி காப்பரண்களிற்குள் சென்றுவிட்டால் பாதகம் எதுவும் ஏற்படமாட்டாது.

அதுதவிர காப்பரண்களில் இருந்தபடி படையினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய முடியும் என்பதால், புலிகள் முகாமை நெருங்குவது என்றால் அதிரடி தாக்குதலில்தான் ஈடுபட்டாக வேண்டும்.

பன்சன் கொடல முகாம்மீது அதிரடித் தாக்குதலே தொடுக்கப்பட்டது. சரியாக இரவு 9.50 க்கு தாக்குதல் ஆரம்பமானது.

**மினி முகாமில் 50ற்கு மேற்பட்ட இராணுவத்தினர் இருந்தனர். தாக்குதல் தொடுக்கப்பட்ட வேகத்திலேயே படையினர் பின்வாங்கினர். மூன்றுபேர் பலியாகினர். ஒன்பதுபேர் காயமடைந்தனர். பத்து நிமிடத்தில் முகாம் புலிகளின் கையில் வீழ்ந்தது.**

படையினரின் செய்தியில் இரண்டரை மணிநேரம் சண்டை நடந்ததாகக் கூறப்பட்டது.

முகாமுக்குள் படையினர் விட்டுச் சென்ற 81 மில்லிமீட்டர் மோட்டார்கள், 60 மில்லி மீட்டர் மோட்டார்கள் மற்றும் ஆர்.பி.ஜி.க்கள், இரண்டு அதி உயர் நவீன தொடர்பு சாதனங்கள், மற்றும் நவீன ஆயுதங்கள், தோட்டாக்கள், ஷெல்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

**இங்கு கைப்பற்றப்பட்ட 81 மில்லி மீட்டர் மோட்டார்கள் என்பனவும், 81 மில்லிமீட்டர் ஆட்டிலெறி பீரங்கி என்பதும் ஒன்றல்ல. இரண்டும் ஒன்று எனக் கருதி தவறான தகவல்கள் வெளிவந்திருந்தன.**

அம்பாறை மாவட்டத்தில் புலுக்குணாவ அதிரடிப்படை முகாமில் புலிகளால் கைப்பற்றப்பட்டதே 81 மில்லி மீட்டர் ஆட்டிலெறிப் பீரங்கியாகும்.

மில்லி மீட்டர்கள் சுடுகுழாய் விட்டத்தின் அளவைக் குறிப்பவை. மோட்டார்களிலும் 81 மில்லி மீட்டர், 100 மில்லி மீட்டர், 120 மில்லி மீட்டர் என்று பலவிதமாக உள்ளன.

81 மில்லி மீட்டர் மட்டுமன்றி 100 மற்றும் 120 மில்லி மீட்டர் கனரக மோட்டார்களும் புலிகளிடம் தாராளமாக உள்ளன. புலிகளின் சொந்த தயாரிப்பான பசிலான் மோட்டார் 100 மில்லி மீட்டர் சுடுகுழாய் கொண்டது.

ஆட்டிலெறிகளை மினி முகாம்களில் வைத்திருப்பதில்லை. பறிகொடுத்தால் ஆபத்தாகி விடும் என்று கருதியே, கனரக மோட்டார்களை மட்டுமே மினி முகாம்களில் வைத்திருக்கின்றனர்.

பன்சன் கொடல முகாமை முற்றாக அழித்துவிட்டு புலிகளின் அணி திரும்பிச் சென்றது.

எம்.ஐ.24. ஹெலிகொப்டரில் சென்று புலிகள்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், புலிகள் தரப்பில் பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாகவும் செய்திகள் கூறப்பட்டன.

**உண்மையில் நடந்தது யாதெனில், தாக்குதலை முடித்துக் கொண்டு, கைப்பற்றிய ஆயுதங்களுடன் புலிகளின் அணிகள் திரும்பிச் சென்ற பின்னர்தான் ஹெலி அப்பகுதிக்கு சென்றது.**

புலிகள் போய்விட்ட பின்னர் ஹெலியில் இருந்து சரமாரியாக வேட்டுக்கள் பொழியப்பட்டன.

படை வேட்டையை புலிகள் முடித்துக் கொண்டு திரும்பிய சூட்டோடு, தமது புலி வேட்டையை நிறுத்திக் கொண்டு படையினர் முன்னைய நிலைகளுக்கு திரும்பினர்.

திரும்பிச் சென்ற படையணிகள்மீது புலிகள் மோட்டார் ஷெல்களை ஏவினர். படையினரும் பதிலடியாக ஷெல் தாக்குதல் நடத்தினர். இவை வெறும் அடையாளத் தாக்குதல்கள்தான். இரு தரப்பிலும் உயிர் சேதங்கள் ஏற்றப்படவில்லை.

**திருமலை மாவட்டத்தில் முகாம்களை தாக்கும் புலிகளின் திட்டத்தை முறியடிக்க, புலிகளை பலவீனமாக்கும் நோக்கத்துடனேயே புலி வேட்டை ஆரம்பமானது.**

அந்த நோக்கம் எவ்வகையிலும் நிறைவேறவில்லை என்பதை பன்சன் கொடல மினி முகாம் தாக்குதல் வெளிப்படுத்தியது.

**மேலும் உறுதிப்படுத்துவதுபோல மே 3ம் திகதி மூதூரில் பாரிய அதிரடித் தாக்குதல் ஒன்றை புலிகள் நடத்தினர்.**

மூதூர் 64ம் கட்டையில் பொலிஸ் இராணுவ கூட்டு முகாம் இருக்கிறது.

கடந்த ஏப்ரல் 14ம் திகதியும் இம் முகாம் புலிகளால் தாக்கப்பட்டு, ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. முகாமும் முற்றாக அழிக்கப்பட்டது. மீண்டும் அங்கு முகாம் நிறுவப்பட்டது.

மே மாதம் 03ம் திகதி மாலை ஐந்து மணிக்கு புலிகளின் அணி ஒன்று நேராகச் சென்று முகாம் மீது தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தது.

இரவு நேரத்தில் பதுங்கிச் சென்று தாக்குதல் நடத்துவதே வழக்கம். ஆனால் ஐந்து மணிக்கு, நல்ல வெளிச்சத்தில், எங்கும் பதுங்கி இருந்து தாக்காமல் நேரடியாகவே சென்று முகாம்மீது தாக்குதல் தொடுத்தது இதுதான் முதற் தடவை.

சரமாரியான தாக்குதலால் பொலிசார் பத்துப்பேர் பலியானார்கள். ஒரு இராணுவ சிப்பாயும் பலியானார். அதனையடுத்து முகாம் புலிகளின் வசமானது.

**இந்த முகாமில் இருந்தும் 60 மில்லி மீற்றர் மோட்டார் ஒன்றும் அதற்கான ஷெல் களும் மற்றும் ஆயுத தளபாடங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.**

முகாம் தாக்கப்படும் தகவல் அறிந்து இராணுவ அணிகள் உதவிக்கு விரைந்தன. அதனால் முகாமை முன்புபோல முற்றாக அழிக்காமல் கைப்பற்றிய ஆயுதங்களோடு புலிகள் திரும்பிச் சென்றனர்.

இச் சண்டையில் புலிகளின் தரப்பில் எவ்வித உயிரிழப்பும் ஏற்படவில்லை என்பது, திருமலை மாவட்டத்தில் புலிகள் தாக்குதல் திறனில் பெற்றுவரும் வளர்ச்சியையே குறிக்கிறது.

**எனவே, திருமலை மாவட்டத்தில் மேலும் உத்வேகமான தாக்குதல்களுக்கு முன்னோட்டங்களாகவே இத் தாக்குதல்கள் அமைந்துள்ளன.**

64ம் கட்டை தாக்குதலை முடித்துவிட்டு திரும்பிய புலிகள், கட்டை பறிச்சான் பகுதி மக்களிடம், 'இராணுவத்தினர் வந்து விசாரித்தால் நாங்கள் எத்திசையில் சென்றோம் என்ற உண்மையைக் கூறுங்கள். நீங்கள் வீணாக அடிவாங்க வேண்டாம். அவர்கள் எங்களை தேடிவரட்டும், நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்." என்று கூறிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

## திருமலையில் விரியும் களம்

**"திருமலையில் திட்டமிட்ட குடியேற்றங்களை நடத்த சதித்திட்டம் தீட்டப்படுகிறது. அதனை முறியடிக்கவே திருமலையில் பலத்தை அதிகரிக்குமாறும், பதிலடி கொடுக்குமாறும் தலைவர் உத்தரவிட்டுள்ளார்" என்று மூதூர் பகுதி புலிகள் தங்களுக்கு நெருக்கமானவர்களிடம் கூறியுள்ளனர்.**

தற்போது மூதூர் பிரதேசம் இரண்டு பிரிவாக உள்ளது. ஒன்று இராணுவக் கட்டுப்பாடும், புலிகளின் கட்டுப்பாடும் கலந்த பிரதேசம்.

இரண்டாவது: புலிகளின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசம். இங்கு சகல நிர்வாகமும் புலிகளால்தான் மேற்கொள்ளப்படுகிறது.

புலிகளின் பொலிஸ், நீதிமன்றம் ஆகியவையும் இயங்குகின்றன. அரசாங்க உத்தியோகத்தர்களும் புலிகளின் பணிப்பாளர்களின்கீழேயே செயற்படுகின்றனர்.

**புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேச மக்களை பொருளாதார தடை,போக்குவரத்துத் தடைகள் மூலம் தனிமைப்படுத்தி வருகின்றனர் படையினர்.**

அவ்வாறு செய்தால் புலிகளுக்குள்ள ஆதரவு குறையும் என்று கணக்குப்போடுகின்றனர். ஆனால் நிலைமை நேர்மாறாக உள்ளது.

கட்டுப்பாடுகள் இறுக்கப்பட அரசின் மீதும், படைகள்மீதுமே மக்களின் அதிருப்தி பெருகிவருகிறது.

**"தக்க தீர்வையும் தருகிறார்கள் இல்லை, போராடவும் கூடாது என்றால் என்ன நியாயம்?" என்று மூதூரில் ஒரு வயதான பெண்மணி கேட்பதில் அங்குள்ள மக்களின் உணர்வு பிரதிபலிக்கிறது.**

திருமலையில் கெரில்லாக்கள் பலமடைந்து வருகின்றனர். கிழக்கில் தாக்குதல்களை விஸ்தரிப்பது, குறிப்பாக திருமலையில் பலத்தை அதிகரிப்பது என்பது மூன்றாம் கட்ட ஈழப் போரை ஆரம்பிக்கும்போதே பிரபாகரனது எண்ணமாக இருந்தது.

யாழ் குடாநாட்டு சமர், பரந்தன் கிளிநொச்சி சமர், பின்னர் 'ஜயசிக்குறுய்' சமர் என்பவற்றால் தாமதமாகி, மறுபடி கிழக்கில் புலிகளின் அணிகள் மையம் கொள்ளத் தொடங்கிவிட்டன.

அதன் அதிர்வுகள் கிழக்கில் குறிப்பாக திருமலையில் இனி அதிகமாகக் கேட்கக் கூடும் என்றே கிடைக்கும் தகவல்கள் அச்சுறுத்துகின்றன. ◘

## சினைப்பர் தாக்குதல்!



'சினைப்பர்' தாக்குதலில் நான்கு புலிகள் பலி என்று செய்திகள் பார்த்திருப்பீர்கள். அவ்வாறு பலியானால் அது சினைப்பர் தாக்குதலாக இருக்க முடியாது.

'சினைப்பர்' என்பது பதுங்கியிருந்து குறிதவறாது சுடுவதற்கு பயன்படுத்தும் துப்பாக்கியாகும். துல்லியமாக குறிபார்க்க முடியும். சாதாரண துப்பாக்கிகளைவிட பாரம் கூடியது. நீண்ட தூரம் சுடக்கூடியது. அதனால் ஊடுருவல் தாக்குதல் களுக்கு கொண்டு செல்வது சிரமம். ஒவ்வொரு தோட்டாவாகத் தான் சுட முடியும் என்பதால் மோதல்களிலும் பயன்படுத்தமுடியாது.

முகாம் தாக்குதல்களின்போது காவற் கோபுரத்தில் நிற்கும் எதிரியை குறிதவறாமல் சுட்டு வீழ்த்த சினைப்பர் பயன்படுத்துவது உண்டு.

துல்லியமாக குறிபார்த்துச் சுடக்கூடிய தேர்ச்சியான வீரர்களே சினைப்பர் தாக்குதலுக்கு தெரிவுசெய்யப்படுவர். புலிகள் இவர்களை 'பதுங்கிச் சுடும் விரர்' என அழைக்கின்றனர்.

சினைப்பருடன் புலிகள் படையினரின் பகுதிக்குள்ளோ அல்லது படையினர் புலிகளின் பகுதிக்குள்ளோ உட்பிரவேசிப்பது சாத்தியமில்லை. அவ்வாறு பிரவேசித்து நடத்தப்படுவது ஊடுருவல் தாக்குதல்களே தவிர, சினைப்பர் தாக்குதல்கள் அல்ல.

சினைப்பர் தாக்குதல் என்பது படை அரண்களும், புலி அரண்களும் எதிரெதிரே உள்ள பகுதிகளிலேயே அதிகமாக நடத்தப்படுகிறது.

பொறுமையாக காத்திருந்து, எதிரி அரணில் நடமாட்டம் தெரிந்தால், துல்லியமாக குறிபார்த்து சுடவேண்டும். ஒரே சூட்டில் எதிரி மடியவேண்டும். இரண்டாவது சூடு சாத்தியமில்லை. எதிரி உஷாராகி விடுவான்.

எதிரி முகாம்களின் காவல் அரண்களுக்கு எட்ட நின்றும் சினைப்பர் தாக்குதல் நடத்துவது உண்டு. காவலுக்கு நிற்கும் வீரரை குறிபார்த்து சுட்டுவிட்டு தப்பிச் சென்றுவிடுவதுதான் சினைப்பர் வீரனின் பணி. பலரைச் சுட முடியாது. ஒரு முறையில் ஒருதோட்டா ஒரு எதிரி. இது படையினருக்கும் பொருந்தும். புலிகளுக்கும் பொருந்தும்.

ஆனால், படையினர் தமது செய்திகளில் சினைப்பர் தாக்குதல்களில் நான்கு புலிகள் ஒரே தாக்குதலில் கொல்லப்பட்டனர் என்று கூறுவது புதுவிதமான சினைப்பர் தாக்குதலாக இருக்கிறது.


ஒருவர் அல்லது இருவருக்குமேல் சினைப்பர் தாக்குதலில் பங்குபற்றுவதும் இல்லை. அவ்வாறு பங்குபற்றக் கூடிய சூழ்நிலை இருந்தால் சினைப்பர் தாக்குதலில் சிரமம் எடுப்பானேன். ரவை பொழியும் இயந்திரத் துப்பாக்கிகளைப் பாவித்து தாக்கிவிட்டு வந்துவிடலாம்.

கிட்ட நெருங்கமுடியாததும், குழுவாக செல்ல முடியாததுமான அரணில் உள்ள எதிரியை எட்ட இருந்து தாக்கவே சினைப்பர் தாக்குதல் நடத்தப்படுகிறது.

'படையினர் குழுவாக ஊடுருவி சென்று சினைப்பர் தாக்குதல் நடத்தினர்' என்று செய்தி கூறினால் அது தமாஷ். ஏனெனில் குழுவாகவோ, தனியாகவோ ஊடுருவ முடிந்தால் சினைப்பரே தேவையில்லையே.

உருமறைக்கப்பட்ட துப்பாக்கியுடன் பதுங்கிச் சுடும் புலியையே படத்தில் காண்கிறீர்கள். ■

## அதிரடி அப்பாத்துரை



**யாழ்ப்பாணக் குடாநாட்டில்** ரெண்டு எழுத்தார் நடத்திய மேதினங்களுக்கு சனம் வெள்ளமெனத் திரளுமல்லோ! குட்டித் தேர்தல் வெற்றியால் "மக்கள் நம் பக்கம்" என்று எட்டி எட்டிக் கூத்தாடும் கூட்டான கட்சியின் கூட்டத்தில் கலந்துகொண்டோர் எண்ணிக்கை இரு நூறைத் தாண்டவில்லை. சனம் கும்பலில் கோவிந்தாவாக புள்ளடியும் போடும்! தேவைப்பட்டால் பொல்லடியும் போடும்.

**ஏ.ஈ. மனோகரனைப்** பார்க்க ஏகப்பட்ட கூட்டமாம். யாழ்ப்பாணம் குரு நகர் மைதானத்தில் கழக மேதினம் களைகட்டிப்போட்டுது. அவரும் அங்கே தனக்குப் பிரபலம் தேடிக் கொடுத்த பாட்டுக்களை பாடி பழைய விலாசத்தைப் புதுப்பித்துக் கொண்டார். தமிழ்க் கட்சித்தலைவர்களைவிட மனோகரனுக்கு மவுசு போல கிடக்கு!

**"ஆய் ஊய் மீனாட்சியின்** எலிகள் பட்டாளம், அங்கும் இங்கும் ஓடியோடி ஒரே கும்மாளம்" ஏ.ஈ. மனோகரன் பாடிய பாட்டுத்தான். யாழ்ப்பாணத்தில் துரையப்பா அரங்கத்திலே நீலக் கட்சியினரும் 40 பேர் சகிதம் ஊர்வலம், கூட்டம் என்று தமிழ்க் கட்சிகளுடன் மல்லுக் கட்டியிருக்கினம். பொருத்தமான இடத்தில் தான் கூட்டம் நடத்தியிருக்கினம். அந்த செய்திக்கும் நான் சொன்ன மனோகரன் பாடலுக்கும் என்ன சம்பந்தம்? யோசித்துப் பாருங்கோ!

**காலம் மாறியதால்** அதிகாரத்தரப்பாருக்கு கெட்ட நேரம் என்று யார் கணித்துச் சொன்னவர்! யாராக இருந்தாலும், தற்சமயம் தலைமறைவாகத்தான் இருக்கவேண்டும்? ஆள் மாட்டினால் 'கரிநாக்கு' என்று அதிகாரத்தரப்பு பிய்த்து உதறிப்போடும். அந்தளவுக்கு தொடர் சறுக்கல். போதாக்குறைக்கு களஞ்சியமும் பற்றி எரிஞ்சிருக்கு! காலமாவது ஒன்றாவது, தர்மம், நீதி என்று இருக்கல்லோ அவைதான் பொல்லாதன. பௌத்தர்களும் 'கர்மா'வை நம்புகிறார்கள்!

**கொழும்பில் ஜே.வி.பி.** நடத்திய மேதினம்தான் உண்மையான மேதினம். சும்மா சொல்லக்கூடாது, விழுந்தாலும் எழுகிற அமைப்பு. வலிமை, கட்டுக்கோப்பு பாராட்டப்பட வேண்டிய விஷயம்தான். ஆயுதம் தூக்கின காலங்களைவிட, ஆயுதம் தூக்காத காலங்களில்தான் ஜே.வி.பி. கட்டுக்கோப்பாக கலக்கி இருக்குது. பணபலம், ஆயுதபலம் எதுவும் இல்லாமல் அரசாங்கத்தின் பலத்த கண்காணிப்புக்கு மத்தியிலும் பிரமாண்டம் காட்டி அரசையே மிரள வைச்சுப்போட்டினம் பார்த்தியளோ!

**தேனக மேதினத்திலே** 'பொதி எங்கே, பொதி எங்கே?' என்று முக்கூட்டாக கோஷம் போட்டவை. இன்னும் ஏன் பொதியை காட்டச் சொல்லுகினம்? அதுதான் வெட்டிப் பிரிக்கும் கத்தி உள்ள பொதி என்று தெரிஞ்ச போச்சுதலோ? கண்டும் காணாத ஆட்கள் மாதிரி 'பொதி எங்கே' என்று கேட்டால் என்ன அர்த்தம் பாருங்கோ?

**மேதினத்திற்காக** யாழ் நகர்நோக்கி வாகனம் ஒன்றில் வந்தவர்களை வல்லை வெளியில் சீருடையினர் நீண்ட நேரம் தடுத்து வைத்திருந்தவை. "வடக்கு-கிழக்கை பிரிக்காதே" என்ற கோஷம் போட்டப் பட்டதாம். திடீரென்று ஒரு குறும்பர் இடையிலே புகுந்து எழுப்பிய கோஷம் வித்தியாச ரகம்- "பிரிக்காதே பிரிக்காதே எங்கள் காதலைப் பிரிக்காதே!" குறிப்பிட்ட தடை அரணுக்கும் அவரது காதல் தோல்விக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்க வேணும்!

**யாழ்ப்பாணத்திற்கான வானொலி** சேவை ஒன்று பலாலியில் இருந்து இயங்குகிறது. சுரேஸ் ஆனந்த் என்ற பெயரில் அறிவிக்கும் முகமட் அப்துல் ஜபீர், ஜோக்கிம் பெர்ணாண்டோ ஆகியோர்தான் பிரதான அறிவிப்பாளர்கள். அது ஒரு புறமிருக்க, பாடல் ஒன்றை விரும்பிக் கேட்பதாக பாடசாலை ஆசிரியர் ஒருவரது பெயரையும், மாணவி ஒருத்தரது பெயரையும் எழுதி யாரோ அனுப்பிவைக்க, வானொலி கேட்ட வாத்தியார் மனைவி, "என் புருஷன்தான் எனக்கு மட்டும்தான்!" என்று பொங்கி எழுந்துள்ளாராம்.

**நெடுந்தீவில்** நீல உடையினரும், காக்கி உடையினரும் அடையாளம் தெரியாமல் சுடுபட்டனராம். புலிவேட்டைக்கு போன இடத்தில் நடந்த சம்பவமாம். ஆனால் அவை போனது வேறு வேட்டைக்கு என்று ஒரு பட்சி சொல்லுது. ஒரே இடத்திற்கு இரு தரப்பாரும் போனபோது ஏற்பட்ட மோதல் என்கிறது பட்சி.

**இவ்வாரப் பொன்மொழி:**

**"அனுபவம் என்பது மனிதனுக்கு எப்படி ஏற்படுகிறது, என்பதல்ல முக்கியம். அதைக் கொண்டு அவன் என்ன செய்கிறான், என்பதே முக்கியம்!"**



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் — அற்புதன் எழுதுவது

## 180

வடக்கு-கிழக்கு மாகாண முதல்வர் வரதராஜப் பெருமாள், ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் பத்மநாபா ஆகியோரை விசேஷ விமானங்களில் அழைத்துச் செல்வதே பாதுகாப்பானது என்று இந்திய அரசு முடிவு செய்திருந்தது.

ஏனைய முக்கிய பிரமுகர்கள் அவர்களது குடும்பத்தினர் உட்பட ஆயிரத்தி முன்னூறு பேரை கப்பலில் கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது.

கப்பலுக்காக மூன்று நாட்கள்வரை அத்தனைபேரும் கடற்கரை முகாம் ஒன்றில் காத்திருந்தனர்.

**கப்பல் எப்போது வந்து நங்கூரமிடும் என்ற தகவல் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. புலிகள் தாக்கலாம் என்று கருதியே அவ்வாறான இரகசிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.**

கப்பல் திருமலை துறைமுகத்திற்கு

## கடல் நடுவே பரிதவிப்பு

வந்து சேர்ந்ததாக தகவல் கிட்டியதும், முகாமில் காத்திருந்த அனைவரும் ட்ரக் வண்டிகளில் ஏற்றப்பட்டு, வெளியே தெரியாமல் இறுகமூடப்பட்டு துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கப்பலில் ஏறியதும் சபாநாயகர் இராஜகாரியர் வி.ஐ.பிக்கள் அனைவரும் தனியாக வருமாறும், நல்ல வசதியான இடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அழைத்தார்.

**இயக்கரீதியாக, இயக்கத்தின் உறுப்பினர்களுடன் இணைந்து வளராத பலரை பத்மநாபா இயக்க முக்கியஸ்தர்களாக மாற்றினார். இயக்கத்தின் மேல் திணித்தார் என்றும் கூறலாம்.**

அத்தகையோர் கஷ்டம் வரும்போது உறுப்பினர்களை தவிக்கவிட்டுவிட்டு தங்கள் நலன்களில் நாட்டம் காட்டுவது தவிர்க்க முடியாதது. அதற்கு ஒரு உதாரணம்தான் இராஜகாரியரின் இன்ப நாட்ட ஆர்வம்.

சில உறுப்பினர்கள் கெட்ட வார்த்தைகளால் திட்டியதோடு, இராஜகாரியர் போன்றோரை தூக்கி கடலில் எறியலாம் என்றனர். சுபத்திரன் போன்றோர் தலையிட்டு தடுத்ததால்தான் கப்பலுக்குள் பிரச்சனை ஏற்படாமல் போனது.

நள்ளிரவில் கப்பல் புறப்பட்டு சென்னை நோக்கி சென்றது. இரகசியம் காக்கும் நோக்கத்தோடு கடைசி நேரத்தில்தான் தமிழக அரசுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது.

கப்பலில் வரும் போராளிகளை சென்னை துறைமுகத்தில் இறக்கி, தமிழ்நாட்டில் பாதுகாப்பான முகாமில் தங்க வைக்கலாம் என்று மத்திய அரசு தமிழக அரசுக்கு தகவல் அனுப்பியது.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு வந்ததே கோபம்.

**"முடியவே முடியாது. அவர்களை இங்கே தமிழ் நாட்டில் ஏற்கவே முடியாது" என்று ஒரேயடியாக அடித்துக் கூறிவிட்டார்.**

சென்னை துறைமுகத்தில் ஆயிரத்தி முன்னூறு பேருடன் கப்பல் தரித்து நின்றது.

### அந்தமான் தீவு

இந்திய அரசுக்கு கலைஞர் கருணாநிதி ஒரு யோசனையும் தெரிவித்தார்.

**'கப்பலில் உள்ள போராளிகள் அனைவரையும் அந்தமான் தீவுக்கு அனுப்பி வையுங்கள். அங்கு சென்றால் இயக்க மோதல்கள் இல்லாமல் இருந்து கொள்வார்கள்' என்று கூறினார் கருணாநிதி.**

இச் செய்தி கப்பலில் இருந்த போராளிகளுக்கு எட்டிவிட்டது. தமிழக அரசின் தடையையும்மீறி மாலைமலர் பத்திரிகை நிருபர் கப்பலில் இருந்த போராளிகளை சந்தித்திருந்தார்.

**'தங்கள் தலைவர்களும் தம்மோடு கப்பலில் இல்லை. தமிழக அரசும் தங்களை ஏற்க மறுக்கிறது. தாங்கள் அநாதைகளாகிவிட்டோமே' என்று கப்பலில் இருந்த பலர் வேதனையடைந்தனர்.**

அந்தமானுக்கு தங்களை அழைத்துச் சென்றால் கப்பலை கடத்தி திசை திருப்புவது என்றும் கப்பலுக்குள் இருந்த ஒரு சாரார் திட்டமிட்டனர்.

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் பிரிட்டிஷ்காரர்களது சிறையாக விளங்கிய இடம்தான் அந்தமான்தீவு.

'அங்கு போவதைவிட கடலில் குதித்து சாகலாம்' என்றனர் சிலர். கப்பலுக்குள் ஒரே குழப்பம்.

தமிழக அரசு விட்டுக்கொடுக்காது என்று தெரிந்ததால் இந்திய மத்திய அரசு, கப்பலை விசாகபட்டினம் துறைமுகத்திற்கு கொண்டு செல்லுமாறு கட்டளையிட்டது.

ஆந்திர மாநிலத்தில் இருப்பதுதான் விசாகப்பட்டினம். ஆந்திர மாநிலத்தில் அப்போதும் காங்கிரஸ் கட்சியே பதவியில் இருந்தது.

விசாகப்பட்டினத்தில் போராளிகள் தரையிறங்க ஆந்திர மாநில அரசு தடையேதும் கூறவில்லை. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே இந்தியப் படை அனுப்பப்பட்டது. எனவே ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரை தமது நண்பர்கள் போன்றே ஆந்திர மாநில காங்கிரஸ்காரர்கள் மதித்தனர்.

விசாகப்பட்டினத்தில் கப்பலில் இருந்து இறங்கியவர்களுக்கு குதூகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது. விருந்தும் தரப்பட்டது.

**அதற்கு முன்னர் கப்பல் விசாகப்பட்டினம் சொல்லும்போது கப்பலில் இருந்தவர்களுக்கு பலத்த சந்தேகம்.**

**'அந்தமானுக்குள்தான் தள்ளிவிட்டு வரப்போகிறார்களோ' என்பதுதான் சந்தேகம்.**

ஈ.பி.ஆர்.எல்.எஃப். படகோட்டிகள் சிலரும் கப்பலில் பயணம் செய்தனர். அவர்கள் கப்பல் செல்லும் திசையை அவதானித்து: 'அந்தமான் நோக்கிச் செல்லவில்லை' என்பதை உறுதிப்படுத்தினார்கள்.

விசாகப்பட்டினத்தில் சிறிது ஓய்வு எடுத்த பின்னர் அத்தனை பேரும் பஸ் வண்டிகளில் ஏற்றப்பட்டனர்.

பஸ் வண்டிகளில், ஆயிரத்தி முன்னூறு பேரும் எங்கு செல்கிறோம் என்பதே தெரியாமல் சோகமே வடிவாக அமர்ந்

## எண்ணிக்கை இன்றி மாண்ட உறுப்பினர்கள்

திருந்தனர்.

பஸ் வண்டிகள் போகின்றன. போகின்றன. போய்க்கொண்டே இருக்கின்றன.

ஆந்திர எல்லையை தாண்டி ஒரிசா மாநிலம் நோக்கி புழுதியைக் கிளப்பியபடி பஸ் வண்டித் தொடர் விரைந்தது.

### ஒரிசா மாநிலம்

இந்தியாவில் மிகப்பின்தங்கிய மாநிலங்களில் ஒன்று ஒரிசா மாநிலம்.

அங்குதான் ஆயிரத்தி முன்னூறு பேரையும் தங்கவைக்க மத்திய அரசு தீர்மானித்திருந்தது.

இத் தகவல் எப்படியோ ஒரிசாவில் உள்ள பொது அமைப்பு ஒன்றுக்கு எட்டிவிட்டது.

பஸ் செல்லும் பாதையில் குறுக்கே விழுந்து படுத்துவிட்டனர்.

"ஒரிசாவுக்குள் நுழைய விடோம்" என்று கோஷம் போட்டனர்.

பஸ்களில் இருந்தவர்களுக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது. சிலர் தங்களை தவிக்கவிட்டுவிட்டு விமானத்தில் தப்பியோடிய தலைவர்களை வசைபாடினார்கள்.

பின்னர் எப்படியோ குறுக்கே கிடந்தவர்களை சமாதானப்படுத்திவிட்டு அத்தனை பேரையும் ஒரிசாவுக்கு கொண்டு போய் சேர்த்தனர் ஒரிசா பொலிசார்.

### பெருமாள ஜோக

இந்தியப் படையினர் திருமலையில் இருந்து வெளியேற முன்னர் வரதராஜப் பெருமாள் குடும்பத்தினர் தனியான விமானத்தில் புறப்பட்டு சென்றனர்.

இன்னொரு விமானத்தில் பத்மநாபா ஒரிசாவுக்கு கொண்டு செல்லப்பட்டார்.

நாட்டைவிட்டு வெளியேறும் தருணத்தில் ஈழப் பிரகடனம் செய்தார் அல்லவா பெருமாள்.

அதுபோல, நாட்டை விட்டு வெளியேறுவதற்கு பெருமாள் கூறிய காரணமும் சுவையானது.

**"ஆயுதப் பயிற்சி பெறுவதற்காகவே செல்லுகிறேன். பெற்றுக்கொண்டதும் திரும்பி வருவேன்" என்றார்.**

அதுவும் பத்திரிகைகளில் வெளியாகி சிறந்த ஜோக்காக பலரை சிரிக்க வைத்தது.

அதே சமயம் இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரத்னாவும் ஜோக்கடித்தார்.

"வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் மிஸ்டர் பெருமாள் எங்கிருக்கிறார்?" என்று நிருபர் ஒருவர் கேட்டார்.

அதற்கு ரஞ்சன் சொன்ன பதில் இது: "இராஜஸ்தானில் சீனி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்."

### புலிகளின் கட்டுப்பாடும்

இந்தியப் படை முற்றாக விலக்கிக் கொள்ளப்பட்டதை அடுத்து வடக்கு-கிழக்கு முழுவதும் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்திய கூட்டங்களில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

இந்தியப் படை திருமலையில் நிலைகொண்டிருந்த காலத்தில் வவுனியா போன்ற பகுதிகளில் மக்கள் முன்னணி நடத்திய கூட்டங்களிலும் பல்லாயிரக்கணக்காக மக்கள் கலந்து கொண்டனர்.

ஏனைய இயக்கங்கள் கூட்டங்களை குழப்பலாம் என்று அச்சுறுத்தல் இருந்த போதும், புலிகளின் கூட்டங்களுக்கு தாமாகவே மக்கள் திரண்டனர்.

**மீண்டும் ஆயுதப் போராட்டம் தொடரும் என்பதை கூட்டங்களில் மறைமுகமாக புலிகள் உணர்த்தினார்கள்.**

இந்தியப் படையினர் வெளியேறிய பின்னர் திருமலையில் புலிகள் தேடுதல் வேட்டையில் இறங்கினார்கள்.

இந்தியப் படையினருடன் நின்ற இயக்கங்கள் புதைத்துவைத்துவிட்டுப் போன ஆயுதங்களை தேடியே வேட்டை நடந்தது.

மக்களும் புலிகளுக்கு தகவல் கொடுத்தனர். இரண்டு நாளில் மட்டும் ஏழு லொறிகள் நிரம்ப புலிகளால் ஆயுதங்கள் ஏற்றிச் செல்லப்பட்டன.

இதற்கிடையே பல நூற்றுக்கணக்கான ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் கடல் நடுவே வைத்து புலிகள் நடத்திய தாக்குதல்களில் பலியாகினர்.

'புலிகளுக்கு எதிரான யுத்தம்' என்று வாய்வீச்சுக்களுடன் தங்கள் உறுப்பினர்களை ஆயுதங்களுடன் இறக்கியவர்கள், அவர்கள் தப்பிச் செல்லக்கூட உரிய ஏற்பாடுகளை செய்யத் தவறினார்கள்.

குதிரை வலு (HORSE POWER)க்குறைந்த மோட்டார் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட படகுகளிலேயே சாதாரண உறுப்பினர்கள் ஏற்றப்பட்டனர்.

**குதிரைவலு கூடிய மோட்டார் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட படகுகளில், சுருட்டிய பணத்துடனும், நகைகளுடனும் முக்கிய பொறுப்பாளர்கள் தப்பிச் சென்றனர்.**

படகுகளில் ஏற்றப்பட முன்னர் எந்தப் படகில் யார் செல்கிறார்கள் என்ற பெயர் விபரத்தை குறித்துக் கொள்ளக்கூட பொறுப்பான ஆளில்லை.

புலிகள் தங்கள் இயக்க உறுப்பினர்களை கொன்று விட்டனர் என்று ஏனைய இயக்கத் தலைவர்கள் கண்ணீர் வடிப்பதையே சந்தேகக் கண்கொண்டு நோக்க வைக்கக்கூடிய சோகம் அன்று நிகழ்ந்தது.

தங்கள் பல நூற்றுக்கணக்கான தோழர்களை, எப்படியாவது தப்பி வந்து சேருங்கள் என்று விட்டுவிட்டு விமானத்தில் பறந்து தப்பிப் போனார்கள் இயக்கத் தலைவர்கள்.

கப்பல்கூட தாக்கப்படலாம் என்று இந்திய படையினர் எத்தனை முன்னெச்சரிக்கையாக நடந்து கொண்டனரோ, அதில் ஒரு பங்கு முன்னெச்சரிக்கைகூட இயக்கத் தலைவர்களுக்கு இருக்கவில்லை.

கடலில் புலிகள் தாக்குவார்கள். ஓடித் தப்ப முடியாத படகுகளில் செல்வது ஆபத்து என்பதைக்கூட ஊகிக்க முடியாத தலைமைகள்தான் ஏனைய இயக்கங்களுக்கு வாய்த்திருந்தன.

**தங்கள் உறுப்பினர்களை பலிகொடுத்தபடி வாய்வீச்சுக்கள் மூலம் தங்களை வளர்த்துக் கொண்டவர்கள் உயிர் தப்பிக் கொண்டனர்.**

### முகுந்தன்

ஆக, ஒரே ஒரு முக்கிய பொறுப்பாளர்தான் உறுப்பினர்களைப் போல தானும் வலுக்குறைந்த படகில் சென்றார்.

தமிழ்த் தேசிய இராணுவத் தளபதியாக இருந்த முகுந்தன்தான் அவ்வாறு உறுப்பினர்களுடன் சென்றார்.

முகுந்தன் சென்ற படகு நடுக்கடலில் வைத்து புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டது.

முகுந்தனும் அவருடன் சென்றவர்களும் கைது செய்யப்பட்டனர்.



முகுந்தன் இந்திய இராணுவத்திடமும் பயிற்சி பெற்றவர். பின்னர் லெபனான் சென்றும் பயிற்சி பெற்றவர். பேராதனை பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக இருந்தவர்.

1983ல் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தில் சேர்ந்தவர். ரமேஷ், சுபத்திரன் ஆகியோர் இவரை இந்தியப் பயிற்சி பெற தெரிவு செய்து அனுப்பி வைத்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த முகாம் ஒன்றுக்கு முகுந்தனை புலிகள் இயக்கத்தினர் அலைத்துச் சென்றனர்.

"நாம் தோற்றுவிட்டோம். எம் **தலைவர்கள் கைவிட்டு விட்டனர். இனி மேல் நீங்கள் உயிர்தப்ப வேண்டுமானால், உண்மை களை இவர்களுக்கு கூறுங்கள். ஆயுதங்கள் எங்காவது மறைத்து வைத்திருந்தால் எடுத்துக் கொடுத்து விடுங்கள்" என்று முகுந்தன் கூறினார்.**

அதன்பின்னர் முகுந்தனை யாரும் எங்கும் காணவில்லை.

படகுகளில் சென்றவர்கள் யார் அதிலே மாண்டவர்கள் யார்? போன்ற எந்த விபரங்களும் இயக்கங்களிடம் கிடையாது.

எவ்வித தடயமும் இல்லாமல் அந்த பல நூற்றுக்கணக்கான உறுப்பினர்களில் கதை முடிந்தது.

**இந்தியப் படையோடு சேர்ந்து நின்ற இயக்கங்கள் அதன்பின்னர் பல நினைவு தினங்களை அனுஷ்டித்து வந்துள்ளனர்.**

**அவற்றில் ஒன்றுகூட இந்தியப் படை காலத்தில் பலியான தோழர்களுக்கானவை அல்ல என்பது நன்கு கவனிக்கப்படவேண்டியதாகும்.**

இந்தியப் படையுடன் நின்று புலிகளுடன் போரிட்ட தங்கள் உறுப்பினர்களது உயிர்ப் பலிகளை நினைவு கூறுவது மக்களிடையே வரவேற்பு பெறமாட்டாது, என்று நினைக்கிறார்கள்.

இந்தியப் படை காலத்திய தங்கள் அத்துமீறல்களை மீண்டும் நினைவு கூரச்செய்து, தேர்தல்களில் வாக்குகள் கிடைக்காமல் செய்துவிடும் என்று தலைமைகள் தயங்குகின்றன.

### வெளியே

புலிகளின் தலைவர் பிரபாகரன் விரைவில் மக்கள்முன் தோன்றுவார் என்று புலிகள் அறிவித்தனர்.

வதந்திகளின் பின்னர் பிரபாகரன் முதன் முதலில் வெளியே வரும் செய்தி பரபரப்பாக பேசப்பட்டது.

பத்திரிகைக் காரியாலயங்களுக்கு ஒரு தகவல் புலிகளால் அனுப்பப்பட்டது.

பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடைபெற இருக்கிறது என்பதுதான் செய்தி.

செய்தி இனித்தது. திகதியைப் பார்த்தவர்களுக்கு ஏமாற்றமாகிவிட்டது ஏப்ரல் முதலாம் திகதி.

ஆனால் ஏப்ரல் முதலாம் திகதி பத்திரிகையாளர் மாநாடு நடைபெற்றது. பத்திரிகையாளர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

இனிவரும் வாரங்களில்தான் முதலாம் ஈழப்போருக்கான திருப்பங்களும் காத்திருக்கின்றன. (தொடர்ந்து வரும்)

### இது அவர் அல்ல




**பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார் என்று வரதராஜப் பெருமாளும், இந்திய உளவு நிறுவனங்களும் பிரசாரம் செய்தபோது, தமிழக நக்கீரன் சஞ்சிகை வெளியிட்ட அட்டைப்படம்தான் இது. பிரபாகரன் கொல்லப்பட்டதாக செய்தி வெளியிட்ட தினமலர் பத்திரிகையை பிரபாகரன் படித்துக்கொண்டிருக்கிறார்.**

**இப்படத்தில் தலைமட்டும்தான் பிரபாகரனுடையது. பிரபாகரன் உயிருடன் இருப்பது உறுதியான பின்னர் நக்கீரன் உண்மையை வெளியிட்டது. இதுபற்றி இத் தொடரில் ஏற்கனவே விபரித்திருந்தோம். இப்போதுதான் அந்த அட்டைப்படம் கைக்கு கிடைத்தது. வெளியிட்டுள்ளோம்.**

www.padippakam.com

# அலசுவது- இராஜதந்திரி

# பொதுஜன முன்னணி-தமிழ்க் கட்சிகள் கூட்டு அரசாங்கம்

**பொது**ஜன முன்னணி ஆட்சியின் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் ஊசலாட ஆரம்பித்துள்ளது.

பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கட்சிகளின் கைகளில்தான் இன்றைய பாராளுமன்றத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது.

**இன்றைய காலகட்டத்தில் மிக முக்கியமான பாத்திரம் ஒன்றை பாராளுமன்றத்தில் தாம் வகிப்பதைவிட்டு எந்தவொரு தமிழ்க் கட்சியும் வெளியே மூச்சுக் காட்டவில்லை.**

1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் தமிழ்க் கட்சி ஒன்று பிரதான எதிர்க் கட்சியாகும் சந்தர்ப்பமும், தமிழர் ஒருவர் எதிர்க் கட்சித் தலைவராகும் சந்தர்ப்பமும் கிட்டியிருந்தன.

'தமிழ் ஈழ முதல்வர்' என்று அழைக்கப்பட்ட அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி முதல்வராக பாராளுமன்றத்தில் வீற்றிருந்தார்.

அத்தகைய வாய்ப்பு கிடைத்தது போராட்டத்திற்கு கிடைத்த வரப்பிரசாதம் எனவும், அதனை பயன்படுத்தி தமிழ்பேசும் தரப்பின் பலத்தை உயர்த்தப் போவதாகவும் கூட்டணியினர் விளக்கமளித்து வந்தனர்.

எதிர்க் கட்சி முதல்வராக செயற்படக் கிடைத்ததை பெருமையாகவும், தமிழ் பேசும் மக்கள் அனைவரும் மகிழ்வு கொள்ளத்தக்க நிகழ்வாகவும் கூட்டணியினர் சித்தரித்தும் இருந்தனர்.

எனினும் அன்று எதிர்க்கட்சித் தலைவராக ஒரு தமிழர் பதவி வகிக்கிறார். என்பதைத்தவிர, பாரளுமன்றத்தின் கதியைத் தீர்மானிக்கக்கூடிய பலம் கூட்டணியினரிடம் இருக்கவில்லை.

கூட்டணி, இ.தொ.கா. ஆகிய இரண்டு கட்சிகளுமே அன்று பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த தமிழ்க் கட்சிகளாகும். அவை இரண்டும் ஒன்றாக நின்றிருந்தால்கூட பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருந்த பலத்தை கிட்டவும் நெருங்கியிருக்க முடியாது.

ஆனால், இன்றுள்ள சூழ்நிலையில் தமிழ்க் கட்சிகளுக்கு கிடைத்துள்ளது அரியதொரு வாய்ப்பேயாகும்.

**பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு நிற்குமானால், பொதுஜன முன்னணியின் பாராளுமன்றத்தின் கதியைத் தீர்மானிப்பதை தங்கள் கையில் எடுத்துக்கொள்ளலாம்.**

இந்த அரிய வாய்ப்பு தமக்கு கிட்டியிருப்பது குறித்தோ, இன்றைய பாராளுமன்றத்தை தாங்கி நிற்பதில் தாம் தீர்க்கமான பங்கு வகிப்பது தொடர்பாகவோ தமிழ் மக்களிடம் கூறினால் தங்களுக்கு பெருமையைவிட சிறுமைதான் சேரும் என்பதாலேயே தமிழ் கட்சிகள் மூச்சுக் காட்டாமல் இருந்து வருகின்றன.

**இன்றைய ஆட்சியாளர்கள் தொடர்பாக தமிழ் மக்களிடையே பாரிய அதிருப்திகளே ஏற்பட்டுள்ளன. இந்நிலையில் இன்றைய ஆட்சியாளர்களை தாங்கிப் பிடிக்கின்றவர்களாக தாங்கள் இனம் காணப்பட்டுவிடக்கூடாது என்பதே தமிழ் கட்சிகளின் எண்ணமாக அமைந்துள்ளது.**

அவ்வாறு இனம் காணப்பட்டதால் இன்றைய ஆட்சியாளரின் இராணுவரீதியான இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு தாமும் உடந்தையாக இருப்பது அம்பலமாகிவிடும் என்றே தமிழ்க் கட்சிகள் அஞ்சுகின்றன.

அதனால், இன்றைய பாராளுமன்றம் நீடித்திருப்பதற்கு தாம் ஒன்றும் முக்கிய காரணமல்ல, தாம் ஆதரவளிக்காவிட்டாலும் பாராளுமன்றம் நீடிக்கும் என்பதுபோல தமிழ் மக்களை நம்பவைக்க முயற்சிக்கின்றனர்.

யுத்தத்தை நிறுத்துமாறும், பேச்சுவார்த்தை நடத்துமாறும் அரசுக்கு இக்கட்சிகள் வேண்டுகோள் விடுப்பதெல்லாம் பத்திரிகைகள் மற்றும் செய்தி ஊடகங்கள் ஊடாக மக்களை ஏமாற்றும் பிரசாரத் தந்திரமாகவே விளங்குகின்றன.

**இராணுவத்தீர்வு ஒன்றையே இனப்பிரச்சனைக்கான தீர்வாகவும், இராணுவ வெற்றி ஒன்றையே அடுத்த தேர்தல் வெற்றிக்கான மூலதனமாகவும்**




**கொண்ட இன்றைய அரசாங்கத்தின் பாராளுமன்ற ஆயுள் நீடிக்க அதே தமிழ்க் கட்சிகள்தான் ஒட்சிசன் வழங்கி வருகின்றன.**

பாராளுமன்றத்தில் பொதுஜன முன்னணி ஒரே ஒரு மேலதிக வாக்கு மூலமே ஆட்சி அமைத்திருந்தது. மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரனின் வாக்கே அதுவாகும்.

பொதுஜன முன்னணிக்குள் இருக்கும் கட்சிகளும், அதனுடன் கூட்டாகப் போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரசும் பெற்ற மொத்த ஆசனங்கள் 112. சந்திரசேகரனின் ஆதரவு காரணமாக 113 ஆசனங்களுடன் ஆட்சி அமைக்க முடிந்தது.

**எதிர்க்கட்சி வரிசையில் 112 ஆசனங்கள் உள்ளன. எனினும் கூட்டணி, ஈபிடிபி., இ.தொ.கா, புளொட் ஆகிய கட்சிகள் எதிர்க்கட்சி வரிசையில் இருப்பது ஒரு பெயருக்குத்தான். இக் கட்சிகள் ஆளும் தரப்பு அணிகளாகவே முக்கிய வாக்கெடுப்புக்களில் அரசுக்கு ஆதரவாக வாக்களிக்கின்றன.**

இந்த நான்கு கட்சிகளுக்கும் மொத்தம் 26 ஆசனங்கள் உள்ளன. சந்திரசேகரனும் சேர்ந்தால் 27 ஆசனங்கள்.

இந்த 27 ஆசனங்களும்தான் பாராளுமன்ற ஆயுட்காலத்தை தீர்மானித்து வருகின்றன. அவ்வாறு இருந்தும் இக் கட்சிகளை ஆட்சியாளர்கள் அலட்சியமாகவே நோக்கி வருகின்றனர்.

இக் கட்சிகளால் தமிழ் பேசும் மக்களின் அன்றாட அவலங்கள் தொடர்பாக எடுத்துக் கூறப்படும் விடயங்கள்கூட ஆட்சியாளரால் செவிமடுக்கப்படுவதில்லை.

அரசியல் தீர்வின் முக்கிய அடிப்படையான வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்தில்கூட இக் கட்சிகளது கருத்தை ஏற்கமாட்டோம் என்று நீதியமைச்சர் பீரிஸ் பகிரங்கமாகவே அறிவித்திருந்தார்.

**பாராளுமன்றத்தில் தங்களுக்குள்ள ஆசனங்களது பலத்தைக்கூட உபயோகம் அற்ற ஒன்றாகவே இக்கட்சிகளின் செயற்பாடுகள் மாற்றியுள்ளன. அதனால்தான் இவர்களது கருத்துக்கள், யோசனைகள் என்பவற்றை எடுத்தெறிந்து பேசுகின்ற துணிச்சலை ஆட்சியாளர்கள் பெற்றுள்ளனர்.**

எக் கட்டத்திலும் இக் கட்சிகள் ஒன்றுபட்டு ஒரே நிலைப்பாட்டில் நிற்கப்போவதில்லை என்பதை ஜனாதிபதி சந்திரிக்கா

## வெளியே தெரியாத மாற்றம்

குமாரதுங்காவைவிட நன்கு அறிந்தவர்கள் வேறு யாருமில்லை.

**திரு. சந்திரசேகரன் தனது ஆதரவை விலக்கிக் கொள்வாரானால், திரு. தொண்டமான் முன்பிலும் தீவிரமாக அரசுக்கு முண்டு கொடுப்பதில் முன்னிற்பார்.**

திரு. தொண்டமான் தனது ஆதரவை விலக்கிக் கொண்டால் திரு. சந்திரசேகரன் தனது ஆதரவை உறுதியாக காண்பிக்க முன்வருவார்.

| பாராளுமன்றத்தில் தற்போதைய நிலவரம் | |
|---|---|
| பொ.ஜ.முன்னணி (முஸ்லிம் காங்கிரஸ், கம்யுனிஸ்ட் கட்சி, போன்றவை உட்பட) | 109 |
| ஐ.தே.கட்சி | 85 |
| இ.தொ.கா. | 09 |
| ஈ.பி.டி.பி | 09 |
| கூட்டணி | 05 |
| புளொட் | 03 |
| மலையக ம. முன்னணி | 01 |
| ஸ்ரீமணி அணி | 03 |
| சிறீலங்கா முற்போக்கு முன்னணி | 01 |
| மொத்தம் | 225 |

**அதேபோலவே வடக்கு-கிழக்கு தமிழ்க் கட்சிகளும் தங்கள் நிலைப்பாடுகளை மேற்கொள்ளும். கூட்டணியினர் மிக திட்டவட்டமாக ஜனாதிபதி சந்திரிக்காவிடம் தமது ஆதரவு நிரந்தமானது என்பதை தெரிவித்தே உள்ளனர்.**

டாக்டர் நீலன் திருச்செல்வம், திரு. இரா. சம்பந்தன் ஆகியோர் கூட்டணியில் முக்கிய பதவிகளை அலங்கரிக்கும்வரை, கூட்டணியின் நிலைப்பாடு பற்றிய சந்தேகம் எதுவும் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு ஏற்படப்போவதில்லை.

**அவசரகால சட்டத்தினை மட்டும்தான் தாம் எதிர்ப்போம் என்றும் அரசியல் எதிர்காலம் மற்றும் புலிகளின் அச்சுறுத்தல் கருதியே அத்தகைய அவசியம் நேர்ந்துள்ளதாகவும் கூட்டணியினர் ஜனாதிபதியிடம் உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.**

புளொட் அவசரகால சட்ட வாக்கெடுப்பில் நழுவிப்போகிறது. ஈபிடிபி. ஆதரவாக வாக்களிக்கிறது.

இவ்வாறான நிலைப்பாடுகள்தான் தமிழ்க் கட்சிகள் ஒரே முடிவுடன் ஒன்றாக இணைந்து செயற்படப்போவதில்லை என்ற நம்பிக்கையையும், இக் கட்சிகளை உதாசீனப்படுத்தும் துணிச்சலையும் ஆட்சியாளர்களிடம் தோற்றுவித்துள்ளது.

பாராளுமன்ற தமிழ் கட்சிகளையும் அவற்றின் பலம் பலவீனங்களையும் நன்கு எடைபோட்டு வைத்துள்ளதால், தனது கூட்டாளியாக இருந்த ஸ்ரீமணியின் கட்சியையும் துணிந்து விரோதித்துள்ளது பொதுஜன முன்னணி.

மறைந்த அமைச்சரும், தமிழ் மக்களால் வெறுக்கப்பட்டவருமான லலித் அத்துலத் முதலியின் பாரியாரான ஸ்ரீமணி தலைமையில் இயங்கி வருவதே ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியாகும்.

இக் கட்சியினர் கடந்த பொதுத் தேர்தலில் பொதுஜன முன்னணியுடன் இணைந்து அதன் கதிரைச் சின்னத்தில் போட்டியிட்டனர். அதன்மூலம் ஸ்ரீமணியின் கட்சியைச் சேர்ந்த ஆறுபேர் பாராளுமன்றத்துக்கு தெரிவானார்கள்.

**ஐக்கியதேசியக் கட்சியுடன் ஸ்ரீமணியின் கட்சி பின் கதவு வழியாக உறவு வைத்திருந்தது. கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களிலும் தென்னிலங்கையில் துணிந்து போட்டியிட்டு பொதுஜன முன்னணியின் வாக்குகளை சிதறடிக்க முயன்றிருந்தது.**

இவற்றின் பின்னணியிலேயே ஸ்ரீமணியின் அமைச்சர் பதவியும் பறிக்கப்பட்டது. அதேசமயம் ஸ்ரீமணி கட்சியில் இருந்து ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றுபேரை ஸ்ரீமணிக்கு எதிராக திருப்புவதில் ஜனாதிபதி சந்திரிக்கா வெற்றிபெற்றிருந்தார்.

**தற்போது ஸ்ரீமணியுடன் சேர்ந்து அவரது அணியில் மூன்று பா.உக்களே உள்ளனர். ஆனால் ஒரே ஒரு மேலதிக வாக்கில் தொங்கிக் கொண்டிருக்கும் பாராளுமன்றத்தை கவிழ்க்க அந்த மூன்றுபேரும் எதிர்த்து வாக்களித்தாலே போதுமானது.**

அப்படியிருந்தும் ஸ்ரீமணியின் கட்சியுடன் சமரசமே இல்லாதளவுக்கு ஜனாதிபதி சந்திரிக்கா முகத்தை திருப்பிக் கொண்டுள்ளார்.

**எதிர்க்கட்சி வரிசையில் உள்ள தமிழ்க் கட்சி பா. உக்கள் தாம் வலிந்து கேளாமலேயே விழுந்து விழுந்து ஆதரவு தருவார்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையிலேயே ஸ்ரீமணியை திரும்பியும் பார்க்காமல் இருந்து வருகிறார் ஜனாதிபதி சந்திரிக்கா.**

தாம் பிரிந்து நின்றாலும் அரசாங்கத்திற்கு எதிராக வாக்களிக்கமாட்டோம் என்று ஸ்ரீமணி கூறியுள்ளார்.

மக்களின் அனுதாபத்தை பெறத்தக்க கூற்றாகவே அதனைக் கூறியுள்ளார். தமிழ்க் கட்சிகளது ஆதரவு இருக்கும்வரை தாம் எதிர்ப்பதால் ஒன்றும் ஆகப்போவதில்லை என்று தெரிந்தே அவ்வாறு கூறியுள்ளார்.

**பாராளுமன்ற வாக்கெடுப்பில் அரசு தோல்வி காணக்கூடிய சூழல் ஏற்படுமானால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அரசுக்கு எரிராக வாக்களிக்க ஸ்ரீமணி அணியினர் பின்னிற்கமாட்டார்கள்.**

ஸ்ரீமணி அணியினர் பொதுஜன முன்னணியில் இருந்து பிரிந்துள்ளமையால், தற்போது பொதுஜன முன்னணியும், அதன் தேர்தல் கூட்டுக் கட்சியான முஸ்லிம் காங்கிரசும் இணைந்து 109 ஆசனங்களே உள்ளன. தேவையான பலத்தைவிட நான்கு ஆசனங்கள் குறைவாக உள்ளன. இப்போது சந்திரசேகரன் முன்னர்போல் ஆதரித்தால்கூட, ஏனைய தமிழ்க் கட்சிகள் அரசுக்கு ஆதரவளிக்காவிட்டால் ஆட்சி சரிந்துவிடும்.

ஆக, பாராளுமன்றத்தில் ஆபத்தான கட்டத்தில் உள்ளது ஆளும் அணி, அந்த ஆபத்தில் இருந்து தமிழ்க் கட்சிகளின் 27 வாக்குகளே ஆட்சியை காப்பாற்றிக் கொண்டிருக்கின்றன.

எனவே, தற்போது பாராளுமன்றத்தில் இருப்பது பொதுஜன முன்னணி மற்றும் தமிழ்க் கட்சிகளின் கூட்டு அரசாங்கம்தான்.

இவற்றில் பொதுஜன முன்னணிதான் தலைமைச் சக்தி. தம்மோடு உள்ள முஸ்லிம் காங்கிரசைக்கூட இடைக்கிடையே குட்டுப்போட்டு அடக்கவும் ஜனாதிபதி தயங்குவதில்லை. ஹஜ் விடுமுறை விடயத்தில்கூட அமைச்சர் அஷ்ரப்பின் கருத்தை ஜனாதிபதி நிராகரித்திருந்தார். என்பதும் குறிப்பிடத்தக்கது.

**எனவே, தமிழ்க் கட்சிகளுக்கும், முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையிலான முரண்பாடு, பாராளுமன்ற தமிழ்க் கட்சிகளுக்கிடையே உள்ள முரண்பாடு என்பவற்றை பயன்படுத்தி பிரித்தாளும் திறனிலும், இக்கட்சிகளின் பலவீனங்கள், சுயநல விருப்பங்கள் என்பவற்றை நம்பியுமே பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற ஆயுட்காலம் நீடித்து வருகிறது.**

தாம் தாங்கி பிடிக்கும் ஆட்சியாளர்கள் தம்மையே உதாசீனம் செய்யுமளவுக்கு இடம் கொடுத்துள்ளமையானது தமிழ் கட்சிகளின் மிகப் பரிதாபகரமான அரசியல் சாணக்கிய தோல்வியையே புலப்படுத்துகின்றது.

ஆட்சியில் தமிழ் கட்சிகள் பங்காளிகளாக இருந்தும்கூட, முன்னெப்போதையும்விட இன்றைய ஆட்சியில்தான் இராணுவத்தீர்வு என்னும் துப்பாக்கிக் குழாய் ஊடாக இன ஒடுக்குமுறை பீறிட்டுக் கொண்டிருக்கின்றது என்பது வரலாற்றில் மிக விசித்திரமான நிகழ்வேயாகும். ■

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

# கைவிடப்பட்ட 'ஜா' வாலைச் சுருட்டிய கட்சிகள்

**இ**ந்தியாவின் முன்னாள் தூதர் திரு நாகேந்திரநாத் ஜாவை தமிழ்க் கட்சிகள் விழுந்தடித்து சந்தித்தன.

'அவரைச் சந்தித்து, இலங்கை இனப் பிரச்சனை பற்றி சிந்திக்குமாறு கூறியதாக' பத்திரிகைகளுக்கும் வழக்கம் போல செய்திகளும் கொடுத்திருந்தன.

அதே நாகேந்திரநாத் ஜாமீது இலங்கை அரசும், பேரினவாதிகளும் தங்கள் கண்டனக் கணைகளை சரமாரியாகத் தொடுத்தபோது, தமிழ்க் கட்சிகள் எதுவும் உதவிக்குச் செல்லவில்லை. வாலைச் சுருட்டிக்கொண்டு பதுங்கிக்கொண்டன.

இனப்பிரச்சனைக்கு நீதியான தீர்வொன்றைப் பற்றிக் கருத்துக் கூறிய ஒரே காரணத்திற்காக திரு. ஜாமீது ஏராளமான சொல்லம்புகள் ஏவப்பட்டன.

இராஜதந்திர காரணங்களை முன்னிட்டு இந்திய அரசு அவருக்கு உதவ முடியாமல் நின்றது.

ஆனால் தமிழ்க் கட்சிகள் உதவிக்குச் சென்றிருக்கலாம். "அவர் கூறிய கருத்தோடு நூற்றுக்கு நூறு வீதம் எமக்கும் உடன்பாடு இருக்கிறது. நாமும் அதனையே வலியுறுத்தி வருகிறோம்!" என்று கருத்தாவது தெரிவித்திருக்கலாம்.

பாவம், 'ஜா' தனது நியாயமான கருத்துக்காக தனிமைப்பட்டு நிற்கவேண்டியதாகிவிட்டது. அதனால் வேறு வழியின்றி பொதுப் படையாக ஒரு சம்பிரதாய மறுப்பை வெளியிட்டாக வேண்டியும் ஏற்பட்டது.

இலங்கை அரசுக்கு 'ஜா'வின் கருத்துக்கள் பிடிக்கவில்லை என்று தெரிந்ததும், தமிழ்க் கட்சித் தலைவர்கள் வாயை மூடிக் கொண்டனர்.

'ஜா'வை கூட்டணி சார்பாக சந்தித்தவர்கள் நீலனும், சம்பந்தரும்; இரண்டு பேரும் அரசின் தீர்வுப் பொதிக்கு ஆலோசகர்கள்.

ஜாவின் கருத்தை ஆட்சேபித்தவர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர். அவருடன் மாதம் ஒரு தடவையாவது விருந்துண்டு கருத்துப் பரிமாறுமளவு நட்புக் கொண்டவர் திரு. சம்பந்தர். அப்படியிருக்கையில் ஜாவுக்கு ஆதரவாக எப்படி குரல் கொடுக்க முடியும்?

ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் அரசை முகம் சுளிக்க வைக்க விருப்பம் இல்லை. எனவே 'ஜா'வை எல்லோருமாகச் சேர்ந்து கைகழுவிவிட்டனர்.

பாருங்கள்; இலங்கைத் தமிழ்த் தரப்பின் இலட்சணத்தை. தங்களுக்காக குரல் கொடுக்கும் சக்திகளை பேரினவாதிகள் அச்சுறுத்தும்போது, நியாயத்தை எடுத்துக்கூறக்கூட தமிழ் அரசியல் கட்சிகள் தரப்பில் யாரும் இல்லை.

அமெரிக்க, அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர்கள் இலங்கை வந்தபோது, அரச ஆதரவு தமிழ்க் கட்சிகளும் அவர்களைச் சந்திக்க அரசு வாய்ப்பு எற்படுத்திக் கொடுத்திருந்தது.

"தீர்வுப் பொதியை ஏற்றுக்கொள்ளுங்கள். இது நல்ல பொதி. அம்சமான பொதி" என்றெல்லாம் அந்த வெளிநாட்டமைச்சர்கள் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளுக்கு உபதேசம் செய்தனர்.

அதுமட்டும் தலையீடு இல்லையா? 'ஜா' அபிப்பிராயம் மட்டும்தான் கூறினார். அதுகூட இந்திய அரசின் சார்பாகக் கூறப்பட்ட அபிப்பிராயம் அல்ல. ஆனால், அமெரிக்க, அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர்கள் தங்கள் அரசுகள் சார்பாக இங்குள்ள தமிழ்க் கட்சிகளிடம் பொதியை ஆதரிக்குமாறு வலியுறுத்தினார்கள்.

பத்திரிகையாளர் மாநாட்டிலும் பொதியை ஆதரித்து கருத்து வெளியிட்டிருந்தார்கள்.

ஜனாதிபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையே பிரிட்டிஷ் முன்னாள் அமைச்சர் பொக்ஸ் உடன்பாடு ஏற்படுத்தியதாகக் கூறப்பட்டது தலையீடு இல்லையா?

இன்று 'ஜா'வின் கருத்துக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ள இதே லக்ஷ்மன் கதிர்காமர்தான் பொக்ஸ்சை அழைத்துவந்து உடன்பாடு நாடகம் அரங்கேற்றியிருந்தார்.

**ஆக, தங்களுக்கு உலக அரங்கிலும், உள்நாட்டிலும் சாதகமான நிலையை ஏற்படுத்தக்கூடிய தலையீடுகளுக்கு பச்சைக் கொடி!**

**தமிழர்களுக்கு ஆதரவான உலக அனுதாபம் ஏற்பட்டால் மட்டும் சிகப்புக் கொடி!**

மிக அப்பட்டமாகத் தெரிகின்ற இந்த அணுகுமுறையை ஒரு தமிழ்க் கட்சிகூட சுட்டிக் காட்ட முன்வரவில்லை.

பேரினவாதிகளுக்கு போட்டியாக வரிந்து கட்டிக்கொண்டு தெருவில் இறங்கியிருக்க வேண்டும் என்று கூறவில்லை.

'ஜா'வின் கருத்தில் உள்ள நியாயத்தையும், அதேசமயம் தலையீடுகளைத் கண்டிக்கும் அரசினதும், பேரினவாதிகளதும் நிலைப்பாட்டில் உள்ள முரண்பாட்டையும், சுயநலத்தையும் அறிக்கை ஒன்றின் மூலமாவது சுட்டிக்காட்டி இருக்கலாம்.

ஆதாரபூர்வமாகவும், சுடச்சுடவும் அரசின் சுயரூபத்தை அம்பலமாக்கும் சந்தர்ப்பங்களை தமிழ்க் கட்சிகள் தவறவிட்டு வருகின்றன.

❑❑

**ஆ**யுதங்களை கைவிட்டு வருமாறு பிரிகேடியர் மெண்டிஸ் அழைப்பு விடுத்திருக்கிறார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இசைவிழா ஒன்றில்தான் அந்த அழைப்பை விடுத்துள்ளார்.

ஆயுதமே இல்லாமல் யாழ்ப்பாணத்திற்கு திரும்பிச்சென்ற அறுநூறுக்கு மேற்பட்டோரின் கதியை அவர் அறிந்து சொல்வாரா?

"வாருங்கள் உங்களுக்கு சகல வசதிகளும் செய்து தருகிறோம்" என்று அரசும், படையினரும் அழைத்த பின்னர்தான் இடம் பெயர்ந்த மக்கள் திரும்பிச் சென்றிருந்தனர். அதிலே அறுநூறுபேர்தான் கைதாகி காணாமல் போய்-காணாமலேயே போய்விட்டனர்.



இத்தனைக்கும் படையினருக்கு ஆத்திரமூட்டக்கூடிய தாக்குதல்களோ, அல்லது அச்சுறுத்தல்களோ இல்லாத காலகட்டத்தில்தான் கைது வேட்டை நடத்தப்பட்டது.

புலிகள் குண்டு வைத்தால் கைதுகள் நடக்கும்தானே என்றும், போரில் சேதங்கள் சகஜம்தானே என்றும், கைதுகளையும், அழிவுகளையும் தமிழ்க் கட்சித் தலைவர்கள் சிலர்கூட நியாயப்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் அறுநூறுபேர் கைதானபோது எந்தக் குண்டும் வெடிக்கவில்லை. அங்கே எங்கும் படையினருக்கு எதிரான துப்பாக்கிச் சூடு கூட அப்போது நடந்திருக்கவில்லை.

அழைப்புக்கள் விடுப்பதும், அறிவுரை கூறுவதும் சுலபம். ஆனால் நடைமுறையில் நம்பிக்கைகள் அனைத்தையும் நசித்துப்போடக் கூடிய சம்பவங்களே நடைபெறுகின்றன.

பிரிகேடியர் இந்த அழைப்பை விடுப்பதற்கு ஐந்து நாட்கள் முன்னர்தான் சாவகச்சேரி நகரில் ஐந்து பிள்ளைகளின் தாயான 44 வயது பெண்மணி சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

"நிற்கச் சொன்னோம். ஓடினார். சுட்டோம்" என்கிறார்கள் படையினர்.

ஊமைப் பெண்கூட பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகும் யாழ்ப்பாணத்தில் படையினர் அழைத்தால் பெண்கள் ஓடுவதற்கு காரணம் உண்டு. அதற்காக புலி என்று ஒரேய்டியாக முடிவு கட்டி தலையில்தான் சுடவேண்டுமா?

சண்டைக்கு வருபவரை எங்கு வேண்டுமானாலும் சுடலாம். ஓடிச் செல்பவரை காலுக்குகீழே சுட முடியாதா? முடியும். அப்படியானால் என்ன நடந்தது?

'ஓடினால் சுட்டது நியாயம்' என்பதுபோல யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சிகள்கூட மௌனம் அனுஷ்டித்த மர்மம் என்ன?

மேதினக் கூட்டங்கள், ஊர்வலங்கள், பாட்டுக் கச்சேரிகள் நடத்துவதும், முழக்கங்கள் விடுப்பதும் பழைய தந்திரங்கள்.

"அன்றாடப் பிரச்சனையை தீர்க்க உதவுகிறோம்" என்கின்றன தமிழ்க்கட்சிகள்.

அப்பாவிப் பெண்மணி சுடப்பட்டதும் அன்றாடப் பிரச்சனையில் ஒரு அங்கம்தானே!

நிவாரணம் பெற்றுக்கொடுப்பதும், குளம், குட்டைகள் சுத்தம் செய்வதும் மட்டும்தான் அன்றாடப் பிரச்சனை என்று, இக் கட்சிகளுக்கு யாரோ தப்பாகச் சொல்லிவிட்டனர்.


படிப்பகம்

www.padippakam.com

# இடி அமீன்

## உண்மைத் தொடர்
## அதிர் இடி 8

**இதுவரை**

**இடி அமீன் உகண்டா இராணுவத் தளபதியாக ஜனாதிபதி ஒபேடேயால் நியமிக்கப்படுகிறான். உகண்டாவில் இராணுவ சர்வாதிகாரத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறான் இடி அமீன். இனி...**

முன்னாள் ஜனாதிபதி கபாகாவுக்கு பிரிட்டன் அடைக்கலம் கொடுத்தது.

ஏற்கனவே வெள்ளையர்கள் என்றாலே இடி அமீனுக்கு பிடிக்கவே பிடிக்காது. கபாகாவுக்கு பிரிட்டன் அடைக்கலம் கொடுத்ததோடு இன்னமும் அவனது வெறுப்பு பன்மடங்காகியது.

**"பிரிட்டிஷ் தூதரகத்திற்குள் புகுந்து அங்குள்ள வெள்ளைக்காரக் கழுதைகளை பணயக் கைதிகளாகப் பிடித்து வர வேண்டும்," என்றான் அமீன்.**

"வேண்டாம்! அதனால் கெட்ட பெயர் தான் மிஞ்சும். பொறுமையாக இரு!" என்று விட்டார் ஒபேடே.

**"உகண்டா இராணுவம், உகண்டா இராணுவம் மாதிரியில்லை. வெள்ளைக்காரனுக்கு பூட்ஸ் துடைத்துவிட்டு வந்தவர்கள் எல்லாம் அதிகாரிகளாக இருக்கிறார்கள். இஸ்ரேலிய நாய்களிடம் பயிற்சி பெற்றவர்களும் இருக்கிறார்கள். இவர்களை நம்பினால் எங்கள் தலையைச் சாப்பிட்டு விடுவார்கள்," என்றான் அமீன்.**

ஜனாதிபதிக்கும் அவன் சொல்வதில் நியாயம் இருப்பதாகவே தோன்றியது. "என்ன செய்யலாம் என்கிறாய்?"

தன் தடித்த புருவத்தை கட்டை விரலால் வருடிக்கொண்டே, **"முந்திக்கொண்டு நாங்கள் அவர்கள் தலைகளைச் சாப்பிட்டு விடலாம். தலைக்கறி சுவையாக இருக்கும்!"** என்று அமீன் சிரித்த சிரிப்பை ஜனாதிபதி இரசிக்கவில்லை.

தன் முன்னால் இடி அமீன் அவ்வாறு உரத்துச் சிரிப்பதை மரியாதைக் குறைவாகவே அவர் நினைத்தார். சூழ்நிலை காரணமாக அதனை வெளியே காட்டிக்கொள்ளவில்லை.

"ம்... நீ தானே இராணுவத் தளபதி, உகண்டா இராணுவத்தை உகண்டா இராணுவமாக மாற்றும் பொறுப்பு உன்னுடையதுதான்!" என்றார்.

அதன்பின்னர் இராணுவத்தில் தன் வித்தையைக் காட்டத் தொடங்கினான் இடி அமீன்.

பிரிட்டனிலும், இஸ்ரேலிடமும் பயிற்சி பெற்ற அதிகாரிகள், சிப்பாய்கள் ஆகியோரின் பட்டியல் அமீனின் மேசையில் கிடந்தது.

**"அத்தனை பேரையும் படையில் இருந்து தூக்கிவீச வேண்டும், அதிகாரிகளை அவர்களுக்கு உரிய மரியாதையுடன் அனுப்பி வைக்க வேண்டும்!"** என்றான் அமீன்.

உப தளபதிக்கு அமீன் கூறியது விசித்திரமாக இருந்தது.

"அப்படி அனுப்பிவைத்தால் அவர்கள் எதிர்காலத்தில் இடையூறாக இருக்கமாட்டார்களா?" என்று பணிவாகக் கேட்டபோது, அமீன் பொட்டென்று சிரித்துவிட்டான்.

**"நீ எத்தனை வருடமாக இராணுவத்தில் இருக்கிறாய்?"**

"பத்து வருடமாக."

**"அதாவது எனக்கு சீனியர்! நான் உனக்கு ஜூனியர்! ஆனால் நான் தளபதி, நீ உபதளபதி!"** என்று அமீன் சிரித்த சிரிப்பில் உபதளபதி ஆடிப்போனான்.

இடி அமீன் திடீர் திடீர் என்று என்ன செய்வான் என யாரும் ஊகிக்க முடியாது.

அதனால் அமீன் சிரித்தாலே அவனுக்கு முன்னால் நிற்பவர்கள் அஞ்சி நடுங்கத் தொடங்கிவிடுவார்கள்.

உபதளபதியை நீண்டநேரம் நடுங்க வைக்கவில்லை! **"என் உத்தரவுகளுக்கு ஒவ்வொரு அர்த்தம் இருக்கும். அதை நீ முதலில் கற்றுக்கொள்ள வேண்டும்!"**

"கற்றுக்கொள்கிறேன்!"

**"உரிய மரியாதையுடன் அனுப்பிவை! என்றால், பெற வேண்டிய தகவல்களை பெற்றுவிட்டு, கொன்றுவிடு! என்று அர்த்தம்!"** என்று அமீன் கூறியபோது, உபதளபதியின் முகத்தில் ஒரு நொடி திகில் பரவி விலகியது.

**"நன்றாகக் கவனி! என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? அழுக்குத்துணியை துவைப்பதுபோல துவை, என்று அர்த்தம்!"**

இடி அமீன் ஒன்றும் தமாசாகக் கூறவில்லை என்பது அடுத்துவந்த நாட்களில் தெரிந்தது.

**"வெள்ளைக்காரர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்கும் வாலை ஆட்டும் நாய்கள் ஒழிக்கப்பட்டனர். இனிமேல் உகண்டா இராணுவம் உகண்டாவுக்கு மட்டும் உண்மையாகவும், விசுவாசமாகவும் இருக்கும்!"** என்று ஒபேடேயிடம் பெருமையுடன் கூறினான் அமீன்.

"எத்தனைபேர் கொல்லப்பட்டனர்?" என்ற கேள்விக்கு **"அதிகாரிகள் உட்பட 166பேர்,"** என்ற அமீனின் பதிலுக்கு ஒபேடே திக்கித்துப்போனார்.

"அதிகக் கொலை," என்று சின்னதாய் ஆட்சேபிக்க,

**"அதிகம் ஆனால் அவசியம்!"** என்றான் சுருக்கமாக அமீன்.

இராணுவத்தில் காலியான பதவிகளுக்கு தனது விசுவாசிகளை நியமித்தான் அமீன்.

ஸயர் கிளர்ச்சியாளர்கள், சூடான் நாட்டில் கிளர்ச்சி செய்துவிட்டு உகண்டாவில் குடியேறிய நுபிய இனத்தவர் ஆகியோரும் இராணுவத்தில் சேர்க்கப்பட்டனர்.

உகண்டாவின் உளவுப் பிரிவு, பொதுச் சேவைப் பிரிவு ஆகியவற்றிலும் களையெடுப்பு நடத்தி, தனக்குப் பிடித்தமான ஆட்களை நியமித்தான் அமீன்.

ஜனாதிபதி ஒபேடே பற்றிய இரகசியங்களையும் அமீன் உளவுப்பிரிவு மூலம் பெற்றுக்கொண்டான்.

தேவையானளவு செல்வத்தைத் திரட்டுவதிலேயே ஒபேடே குறியாக இருந்தார். அதனால் நாட்டின் நிர்வாகமும் கெட்டுக் குட்டிச் சுவரானது.

ஒபேடேமேல் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு நாளுக்கு நாள் வளர்ந்தது.

இடி அமீன் அவசரப்படவில்லை. ஜனாதிபதி ஒபேடேயைச் சுற்றி மிக நிதானமாக, சிலந்தி வலை பின்னுவதுபோல் இலாவகமாக வலை பின்னிக்கொண்டிருந்தான்.

மூன்று ஆண்டுகள் ஒபேடேயை ஜனாதிபதியாக வைத்துக்கொண்டு அவரைச் சுற்றி வலை பின்னி முடித்தான்.

1969 டிசம்பர் 19ம் திகதி உகண்டா மக்கள் காங்கிரசின் பொதுக் கூட்டம் ஒன்று கம்பாலா நகர மண்டபத்தில் நடைபெற்றது.



மண்டபத்தைச் சுற்றி இராணுவம் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தது.

கூட்டம் முடிந்தபோது இரவாகிவிட்டது.

ஜனாதிபதி ஒபேடே தனது அந்தரங்கச் செயலாளரான ஹென்றி கியம்பாவுடன் அளவளாவியபடி மண்டப வாயிலில் நிறுத்தப்பட்டிருந்த தனது காரை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

**....அந்த உடலின் விரல்களில் இரண்டு காணாமல் போயிருந்தன....**



மெண்டினா

'டுமீல்!'

திடீரென்று துப்பாக்கி வெடித்த ஓசை எழுந்தது.

சட்டென்று ஜனாதிபதியையும் இழுத்துக் கொண்டு தரையோடு தரையாகப் படுத்துவிட்டார் அந்தரங்கச் செயலாளர்.

தரையில் விழுவதற்கு இடையே துப்பாக்கிக்குண்டு ஒபேடேயின் கீழ்த் தாடையைத் துளைத்துவிட்டது.

கைக்குண்டு ஒன்றும் வீசப்பட்டு உருண்டு வந்தது.

கைக்குண்டு உருண்டு வந்ததைப் பார்த்ததும், பின்னால் வந்த காவலாகளும் பயத்தில் விழுந்து தரையோடு தரையாகப் படுத்துவிட்டார்கள்.

ஜனாதிபதி ஒபேடேவின் கதை முடிந்தது என்று நினைத்தார்கள்.

ஆனால் கைக்கண்டு வெடிக்கவில்லை.

சதித்திட்டம் போட்டவர்களை கைக்குண்டு ஏமாற்றிவிட்டது.

உடனடியாக ஜனாதிபதியை சிகிச்சைக்காகக் கொண்டு சென்றனர். அவரது கீழ் உதடு கிழிந்திருந்தது. இரண்டு பற்களும் அகற்றப்பட்டன.

அதேசமயம் இடி அமீனின் இரகசிய அலுவலகத்திலும், இடி அமீன் குத்திய குத்தில் ஒருவனுக்கு முன்வாய்ப் பற்கள் உடைந்து விழுந்தன.

ஜனாதிபதி ஒபேடேயை கொலை செய்யும் முயற்சியில் தோல்வி கண்டவன்தான் இடி அமீனின் குத்துவாங்கிக் குற்றுயிராகிக் கொண்டிருந்தான்.

**"கொடுத்த வேலையை ஒழுங்காக முடிக்கத் தெரியவில்லை. நீயெல்லாம் பூமிக்குப் பாரம். நீ உயிரோடு இருந்தால் எனக்கும் கெட்ட நேரம்."**

'டுமீல்!'

இடி அமீனின் பிஸ்டல் துப்பிய ரவை போட்ட துவாரத்தால் அவன் உயிர் வெளியேறியது.

இடி அமீனின் கட்டளைப்படி உடலை அப்புறப்படுத்திய படையினருக்கு அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது.

கொல்லப்பட்டவனின் கையில் இரண்டு விரல்கள் காணாமல் போயிருந்தன.

ஜனாதிபதி ஒபேடேயை பார்க்க ஓடோடிச் சென்றான் இடி அமீன்.

அவன் செல்வதற்கு இடையிலேயே ஜனாதிபதிக்கு இடி அமீன்மீது சந்தேகம் ஏற்பட்டிருந்தது.

சந்தேகம் எழுபடக் காரணம் இருந்தது. அன்று நடைபெற்ற கூட்டத்தில் இடி அமீனும் கலந்து கொள்வதாக இருந்தது. ஆனால் அமீன் கலந்து கொள்ளவில்லை.

**"பாதுகாப்பைப் பலப்படுத்த உத்தரவிட்டுள்ளேன். சதிகாரன் தப்பவே முடியாது. அவன் தலையை உங்கள் காலடியில் போடுகிறேன்!"** என்றான் அமீன்.

ஒபேடே எதுவும் பேசவில்லை. அவனை சந்தேகித்தது போன்றும் காட்டிக் கொள்ளவில்லை.

'இனிமேலும் அமீனை விட்டுவைக்கக் கூடாது' என்று மட்டும் தன் மனதுக்குள் திடமாக முடிவு செய்து கொண்டார்.

இச் சம்பவம் நடைபெற்ற ஒரு மாதத்தின் பின்னர், பிரிகேடியர் பியரினோ ஒகேயா என்பவர் அமீனை விமர்சித்தார்.

"ஜனாதிபதி ஒபேடேயை கொல்லச் சதி செய்தது இடி அமீன்தான்" என்று தன் வாயாலேயே பகிரங்கமாகக் கூறினார் பிரிகேடியர் பியரினோ.

1970 ஜனவரி 25ம் திகதி பிரிகேடியர் பியரினோவின் வீட்டுக் கதவு தட்டப்பட்டது.

"டொக்...டொக்."

'ஆபத்து தேடி வந்திருக்கிறது' என்று பிரிகேடியரின் உள்ளுணர்வு உணர்த்தி இருக்க வேண்டும்.

**தருவது — ரசிகன்**

பிஸ்டலை தயார் நிலையில் ஒரு கையில் வைத்துக்கொண்டு கதவைத் திறந்தார்.

வெளியே யாரும் இல்லை. சுற்று-முற்றும் பார்த்துவிட்டு, முன்னால் வந்தவர்மீது, மரம் ஒன்றின் பின்னால் நின்ற ஒருத்தன் குறிவைத்து ரவை மழை பொழிந்தான்.

அப்படியே தரையில் சாய்ந்தார் பிரிகேடியர். சத்தம்கேட்டு வெளியே ஓடிவந்த பிரிகேடியரின் மனைவியையும் துப்பாக்கி ரவைகள் ருசி பார்த்தன.

இரண்டுபேரும் பிணமாகச் சரிந்தனர்; இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்.

பிரிகேடியர் கொலையுண்டபோது இடி அமீன் நடன நிகழ்ச்சி ஒன்றை இரசித்துக் கொண்டிருந்தான்.

நடனமாடியவள் மெண்டினா. கறுப்பழகி-உயரமான, நீவிவிட்டதுபோல் கச்சிதமான உடம்பு. சுருள்முடி. காந்தக் கண்கள், ஈர உதடுகள்.

இடி அமீன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவளும் அமீனை அடிக்கடி ஓரக்கண்களால் கவனித்தபடி தன் தேக திரட்சிகளை இலாவகமாக அசைத்தாடினாள்.

இடி அமீனின் காதருகே குனிந்த அவனது உதவியாளர் சொன்னான்: "பிரிகேடியரை பத்திரமாக அனுப்பிவிட்டார்களாம்!"

**"பலே! பலே!"** என்று அமீன் போட்ட சத்தத்தில் மெண்டினாவின் ஆட்டம் நின்றது.

அமீன் உள்ளங்கைகளை தேய்த்து சூடாக்கியபடியே இருக்கையில் இருந்து எழுந்தான்.

அவளை நோக்கி நகர்ந்தான்.

(இடி தொடரும்)

# லவ் டானிக் வசூல் மழை

உலகெங்கும் டைட்டானிக் காய்ச்சல் பரவியிருக்கிறது. வைரஸ் காய்ச்சலைவிட வேகமாகப் பரவுகிறது. அதனால் யாருக்கும் நஷ்டம் இல்லை. இலாபம்தான். கோடி கோடியாக வசூல் அறுவடை.

'டைட்டானிக்' படத்தைப் பற்றித்தான் கூறுகிறோம். இப்படம் வெளியான சூட்டோடு சூடாக முதன் முதலில் முரசுதான் தகவல் வெளியிட்டது. அதன்பின்னர் இந்திய, இலங்கை பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.



கலவரும் காதல்.

1912ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ம் திகதி 2200 பயணிகளுடன் புறப்பட்டது டைட்டானிக் கப்பல். பிரிட்டனில் இருந்து நியூயோர்க் நோக்கிய பயணம். அதேநாள் நடுக்கடலில் விபத்தில் சிக்கியது.

90 மீட்டர் நீளமான உடைவு காரணமாக இரண்டரை மணிநேரத்தில் டைட்டானிக் கடலின் மடியில் மூழ்கிப்போனது. பலியானோர் தொகை, ஆயிரத்தி 517 என்று அமெரிக்க செனட் அறிவித்தது. கப்பலின் நீளம் 269 மீட்டர். எடை 46 ஆயிரத்தி 328 தொன்.

அந்த உலக மகா சோகம்தான் இப்போது 'டைட்டானிக்' என்று வெற்றிகரமான திரைப்படமாக உலகை கலக்குகிறது.

14 ஒஸ்கார் விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. வெளியாக 12 449.6 பில்லியன் டொலர்கள் (சுமார் கோடி ரூபாய்கள்) வசூலாக அறுவடை செய்து உலக சாதனை படைத்துள்ளது.

இப்படத்தின் வெற்றிக்கு டைட்டானிக் கப்பல்தான் காரணம் என்று கருதுவது 25 சதவீதம்தான்சரி. மீதி 75 வீதமும் டைட்டானிக் பிரமாண்டத்தைவிட பிரமாதமான காதல் கதைக்குத்தான். அதிலும் அந்த கிளைமாக்ஸ்தான் படத்தின் உயிர் நாடி. தங்கள் உள்ளம் கவர் காதலர்களை இயற்கையின் சதி பிரித்துவிடுமோ? என்ற தவிப்பில் நாற்காலியின் நுனிக்கு இரசிகர்களை கொண்டுவந்தது தான் படத்தின் வெற்றிக்கு மிக முக்கிய காரணம்.

டைட்டானிக் காதல் கதை அந்தளவுக்குக் கவரக் காரணம் என்ன? படத்தின் நாயகிதான் காரணம்.

20ம் நூற்றாண்டின் பிரபுத்துவ வம்சத்து அழகிபோலவே இருக்கிறார். காதலித்த இரண்டாவது நாளே அவளுக்காக உயிரைவிடவும் கதாநாயகன் தயாராவதை இரசிகர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

'இரண்டாவது நாள் என்ன, பார்த்த உடனேயே உயிரை கொடுக்கலாம், உலகத்தையே சொத்தாக எழுதிக் கொடுக்கலாம்' என்று இரசிகர்கள் உருகிப்போய், ஒன்றி விடுகிறார்கள்.

இரசிகர்களை சுண்டியிழுக்கும் நாயகியின் பெயர் கேட் வின்ஸ்லெட். நாயகன் லியனர்டோடி கேப்ரியோ.

இருவரும் இதற்கு முன்னர் சில படங்களில் நடித்துள்ளனர். ஆனால் இவர்களது திறமையை பட்டைதீட்டி காட்டியிருப்பது 'டைட்டானிக்' படம்தான்.

கதாநாயகனைவிட கதாநாயகி வின்ஸ்லெட்டுக்கு வயது அதிகம். ஆனால் படத்தில் அது தெரியவில்லை. ஜோடிப் பொருத்தம் கச்சிதமாக இருக்கிறது.

'முத்தக் காட்சிகளின்போது, சகோதரனை முத்தமிடுவதாக நினைத்துக் கொண்டே முத்தமிட்டேன்' என்று பேட்டியளித்துள்ளார் கதாநாயகி வின்ஸ்லெட். ஆனால் காட்சியில் அப்படித் தெரியவில்லை. அனுபவத் தேடலுக்கான வேகம் கொண்ட காதலர்கள் போலத்தான் ஆழமான முத்தம் கிறங்கடிக்கிறது.

டைட்டானிக் என்பதைவிட, லவ் டானிக் என்பதே பொருத்தமான பெயர்.

நம் நாட்டில் வீடியோவில் பார்க்கலாம். ஆனால் திரையில் பார்க்கும்போது ஏற்படும் சுவாரசிய அனுபவத்தில் பாதி தான் கிட்டும்.

# வழி தவறிய நட்சத்திரம்

'ஹோம் அலோன்' என்றொரு படம் வெளியாகி சக்கை போடு போட்டது. அதனால் மூன்று பாகமாக அப்படம் வெளியாகி விட்டது. தற்சமயம் 'ஹோம் அலோன்-3' ஹொலிவூட்டில் ஓடிக்கொண்டிருக்கிறது.




ஹோம் அலோன் இரண்டு படங்களிலும் கதாநாயகனாக நடித்த சுட்டிப் பையன் மெகாலே கால்கின் இந்த மூன்றாவது படத்தில் நடிக்கவில்லை. வளர்ந்து பருவப் பையனாகிவிட்டான்.

உலகிலேயே அதிக சம்பளம் வாங்கிய குழந்தை நடிகன் என்று சாதனை படைத்தவர் மெகாலே கால்கின்.

இவனது சொத்து மதிப்பு மட்டும் கிட்டத்தட்ட 20 கோடி. இப்போது 17 வயது. இவனது பெற்றோர்கள் சரியில்லை. அதனால் மெகாலே கெட்டுப் போனான்.

ஹொலிவூட் நடிகைகள் சிலருடன் வம்பு பண்ணினான். அவனது சொத்துக்கு ஆசைப்பட்டு சில பெரிய நடிகைகள் சின்னப் பையனை வளைத்துப்போட்டதும் உண்டு.

போதாக்குறைக்கு நண்பர்களுடன் சேர்ந்து குடித்து கும்மாளமிட்டான். பிஞ்சிலேயே பழுத்துவிட்ட மெகாலே கால்கின் தொழிலில் கவனம் செலுத்த தவறினான்.

அதனால், அவன் நடித்து வெளியான 'திபேஜ் மாஸ்டர்', 'ரிச்சி ரிச்', 'கெட்டிங் ஈவன் வித் டாட்' ஆகிய மூன்று படங்களும் படுதோல்வி அடைந்தன.

இப்போது ராக்கேல் மைனர் என்ற பெண்ணை காதலிக்கிறான். விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போகிறானாராம்.

திருமணத்தின் பின்னராவது திருந்துவானா என்று தெரியவில்லை.

# நள்ளிரவில் அறுவை



நடிகை எலிசபெத் டெய்லர் இப்போது தனிமையில் இருக்கிறார். நள்ளிரவில் தூக்கம் வராமல் தவிக்கிறார். அதனால் என்ன? நமக்கு ஒன்றுமில்லை. அவரது நண்பிகள் தான் தூக்கம் கெட்டுத் தவிக்கிறார்கள்.

நள்ளிரவில் ஃபோன் செய்து அறுக்கத் தொடங்கிவிடுகிறாராம். நீண்ட நேர அறுவையாம்.

துணைகளுடன் உள்ள நண்பிகள் புலம்புகிறார்கள். அவர்களது துணைவர்களும் சேர்ந்து புலம்புகிறார்கள். 'நேரம் கெட்ட நேரத்தில் புகுந்து 'மூட்' டைக் கெடுக்கிறாரே' என்கிறார்கள்.

# கால் அழகு



அமெரிக்கப் பெண்களுக்கு அரிய சிகிச்சை ஒன்றின் மூலமாக அழகு கொடுத்து வருகிறார் ஹட்சன்.


"தொடை பருத்துவிட்டது என்று கவலைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள். சதையை அறுத்து கொழுப்பை நீக்கி இரண்டே வாரத்தில் கச்சிதமான கால்களுடன் நடமாட வைக்கிறேன்" என்கிறார்.

இந்த அறுவைச் சிகிச்சைக்கு பயங்கர மவுசு. அமெரிக்கப் பெண்களுக்கு மெல்லிய கால்களில்தான் நாட்டம்.



படிப்பகம்

www.padippakam.com



## கண்ணை உரசும் காட்சி

புதுவகையான முக்குக் கண்ணாடியோ என்று நினையாதீர். ஜப்பானியர்களின் மற்றொரு கண்டுபிடிப்பு இது.

காதில் பொருத்திக் கொண்டு 'வோக் மென்'னில் பாட்டுக் கேட்கலாம். அதுபோல கண்ணில் பொருத்திக்கொண்டு ரி.வி. பார்த்தால் என்ன என்று யோசித்ததன் பயன்தான் இந்தக் கண்டுபிடிப்பு. இது நடமாடும் ரி.வி., வீடியோ 'டெக்'குடனும் இணைத்துக் கொள்ளலாம். சுமார் 62 அங்குல ஸ்கிரீனில் படம் பார்ப்பது உணர்வைத் தருமாம். இந்தக் கருவியில் 'ஸ்டீரியோ'வுடன் ஏர்ஃபோனும் உண்டு.

ஜப்பான் டோக்கியோவில் சமீபத்தில் இது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. கண்ணை உரசும் ரி.வி.


நாய்வாலைத்தான் நிமிர்த்த முடியாதே. இந்தக் குரங்காருக்கு ஏன் வீண் முயற்சி? இல்லை, வாலை பிடித்து நிமிர்த்தவில்லை, பிடித்து நிறுத்துகிறார்.

தாய்லாந்து, கம்போடியா எல்லைப் புறத்தில் சோங் சங்கம் என்ற சோதனை அரண் உள்ளது. இங்கே குரங்குகளை பழக்கி வைத்திருக்கிறார்கள். இந்தக் குரங்குகள் அத்துமீறி நடக்காது. ஆனாலும் சங்கிலியால் கால்கட்டு போட்டுத்தான் வைத்திருக்கிறார்கள்.

நாய் ஒன்று நைசாக எல்லையை தாண்டிச் செல்ல முற்பட்டபோது, பாய்ந்து அதன் வாலை பிடித்துக் கொண்டது குரங்கு.

சுமார் ஒரு மணி நேரம் நாய் போராடிப் பார்த்தது. பிடியென்றால், பிடி குரங்குப்பிடி. பின்னர் சோதனை அரணில் இருந்தவர்கள்தான் விடுவித்தனராம்.

## காவல்காரன்



## புதுசு புதுசாக....




புதுசு புதுசாக ஏதாவது செய்யாவிட்டால் ஜப்பான்காரர்களுக்கு தலையே வெடித்துவிடும். படத்தில் இருப்பதும் ஜப்பான்காரர்களின் கண்டுபிடிப்புத்தான். கம்பியூட்டர் யுகத்திற்கு ஏற்ப, கைக்கடிகாரத்துடன் இணைந்த கம்பியூட்டர் இது. சீக்கோ கம்பனி இதனைத் தயாரித்துள்ளது. எதிர்வரும் ஜூன் மாதம் சந்தையில் விற்பனைக்கு விடப்படும்.



## மலைக்க வைத்த மலைப்பாம்பு

சாதாரண மலைப்பாம்பைக் கண்டாலே பயத்தில் தேகமெல்லாம் வியர்க்கும்.

இது அசாதாரண மலைப்பாம்பு. மிகவும் நீளமானது. 5.5 மீட்டர். ஜெர்மனியில் நடைபெற்ற ஊர்வன பற்றிய கண்காட்சியில் இந்த மலைப்பாம்பை கண்டவர்கள் பயத்தில் மலைத்துப் போனார்கள்.

ஜெர்மனியில் ஹெர்போர்ட் மிருகக்காட்சி சாலையில் 600ற்கு மேற்பட்ட அதிசய மிருகங்களும், ஊர்வனவும் இருக்கின்றனவாம். அதில் ஒன்றுதான் இந்த நீளமான மலைப்பாம்பு.

அதிசயமான பன்றி இது. இரண்டு தலையுடன் பிறந்து, இன்றுவரை இறக்காமல் இருக்கிறது.


பன்றிகள் இரண்டு தலையுடன் பிறப்பது எப்போதாவது நிகழ்வது உண்டு. ஆனால் அப்படிப் பிறக்கும் பன்றிகள் உடனே இறந்துபோய்விடும்.

இந்தப் பன்றிக்கு மட்டும் ஆயுள் கெட்டி. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் திகதி பிறந்தது. தற்போது 70 கிலோ எடையுடன் உயிர் வாழ்கிறது. அமெரிக்காவில் அயோவா என்ற பகுதியில்தான் இந்த இரண்டு தலைப் பன்றி இருக்கிறது.

## தலை இரண்டு

தகவல் பெட்டி





## லபக் லபக்...

என்ன நோய் என்றாலும் உடனே 'எக்ஸ்ரே எடு', 'இரத்தம் எடு' என்றுதான் இப்போது டாக்டர்கள் கூறுகிறார்கள். அதுவும் கொழும்பில் தனியார் வைத்திய சாலைகளில் இரக்கமில்லாமல் பணம் கறந்து விடுகிறார்கள்.

படத்தில் இருப்பது உயிருள்ள பாம்பு ஒன்றின் எக்ஸ்ரே. இரண்டு பல்புகளை லபக் லபக்கென்று விழுங்கிவிட்டது இந்தப் பாம்பு. இரண்டு பல்புகளும் பத்திரமாக வயிற்றுக்குள் இருப்பது தெரிகிறதல்லவா. பின்னர் ஒருவிதமாக இரண்டு பல்புகளையும் மருத்துவர்கள் வெளியே எடுத்துவிட்டனர். அமெரிக்க ஃபுளோரிடா மிருகக்காட்சிச் சாலையில் இருக்கிறது இந்தப் பாம்பு.



படிப்பகம்

www.padippakam.com

## இளையராஜா மறுப்பு

சித்திரைப் புத்தாண்டை முன் விட்டு சென்னையில் மாபெரும் இசைவிழா ஒன்று நடைபெற்றது. மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன், இசைஞானி இளையராஜா ஆகியோர் இணைந்து நடத்தினார்கள்.

இந் நிகழ்ச்சியில் இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமானும் கலந்து கொண்டார். இளையராஜாவுக்கு தன் கையால் இரண்டு பவுனில் மோதிரம் அணிவித்தார்.

சிரித்தபடியே மோதிரத்தைக் கழற்றி திருப்பிக் கொடுத்துவிட்டார் இளைய ராஜா. இசைப்புயலுக்கு இதனால் சிறு வருத்தம்.

## சரத் ஜோடி ரோஜா

சரத்குமார்-ரோஜா இணைந்து நடிக்கும் படம் 'சின்னத்துரை'. இப் படத்தை கே.பி. பிலிம்ஸ் தயாரிக்கிறது. 'சின்னத்தம்பி', 'சேனாதிபதி' உட்பட பல படங்களைத் தயாரித்த நிறுவனம் இது.

'சின்னத்துரை' படத்திற்கு இசை: இளையராஜா. இயக்கம் ஆர். சந்திரா. இப்படத்தில் மணிவண்ணன், செந்தில், சித்தாரா ஆகியோரும் நடிக்கிறார்கள்.

## காதோடு சொல்லுகிறோம்

ரயில் 'ரா' நடிகையின் தங்கை நடிகை தனக்குப் பிடித்த நடிகர் வீட்டுக்கு சென்றுவிட்டார். 'ரா'வில் பெயர் தொடங்கும் மூன்றெழுத்து நடிகர் அவர். முறிந்ததுபோல இருந்த காதல் இப்போது சரணத்தில் ஆரம்பம்.

'கௌ' நடிகையுடன் மூன்றெழுத்து சிறப்பு நடிகருக்கு உள்ள ஈடுபாட்டை நடிகையின் வருங்கால கணவர் விரும்பவில்லையாம். நடிகையோ நடிகரை இடைக்கிடையே சந்திப்பதை தவிர்க்க முடியாமல் இருக்கிறார். அமெரிக்க மாப்பிள்ளையை நடிகை வேண்டாம் என்று உதறியதும் அங்குபோனால் நடிகரை சந்திக்கவே முடியாமல் போய்விடும் என்பதால்தானாம்.

ரம்ப நடிகையின் தொடையழகு இரசிகர்களுக்கு திகட்டத் தொடங்கி விட்டது. அதனால் 'சிம்ம' நடிகை அந்த இடத்தை பிடித்துவருகிறார். பொறுக்க முடியாத 'ரம்ப' நடிகை தயாரிப்பாளர்களை வளைத்துப்போட ஆரம்பித்துள்ளார்.

சங்க நடிகை மீண்டும் மூன்றெழுத்து இளம் நாயகனுடன் ராசியாகி விட்டார். நிலாவே வா என்று வரவேற்று ஆரத்தழுவிக் கொண்டாராம் நடிகர். இருவரும் மீண்டும் ஒரு படத்தில் இணைந்து தூள் கிளப்பப் போகிறார்கள். 'என்னாகுமோ?' என்ற தவிப்பில் இருக்கிறார் நடிகரின் தந்தையார்.

## எப்போது கல்யாணம்?

பார்த்திபனுடன் கிசுகிசுக்கப்பட்ட சங்கீதா, பின்னர் ராமராஜன் சுற்றிச் சுற்றி வந்தார். தற்போது கமராக்காரரான சரவணனுடன் சுற்றுகிறார் சங்கீதா. அதனையறிந்த பார்த்திபன் சங்கீதாவுக்கு மிரட்டல் விடுத்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால் சங்கீதாவோ அதையெல்லாம் சுத்தமாக நிராகரிக்கிறார். சங்கீதாவின் பேட்டி:

கே: நெருப்பில்லாமல் புகை வருமா

சங்கீதா: ஏன் வராது... பனி மூட்டம் பார்த்து புகை என்று தவறாக நினைக்கலாம் அல்லவா.

கே: பொதுவாக காதல் கிசுகிசு முதலில் மறுக்கப்படும். பின்னர் இரகசியத் திருமணம் செய்து கொண்டோம் என்று கொஞ்சக்காலம் கழித்து பேட்டி வரும். உங்கள் விஷயம் எப்படி?

ச: இல்லை. நிச்சயமாக இல்லை. இன்னும் ஐந்து வருடங்களுக்கு இல்லை.

கே: இன்னும் டீன் ஏஜ்லதான் இருக்கிறீங்களா?

ச: வயசு என்னன்னு நேராகவே கேட்டுடுங்களேன். எனக்கு இப்போ 19 வயசு. டீன் ஏஜில் கடைசி வருடம்.

## என்னால் முடியாது

'தமிழ்ப் பட உலகில் நிலைக்க வேண்டுமானால் ஹீரோக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் ஓரம் கட்டிவிடுவார்கள்!' என்கிறார் ரஞ்சிதா.

இதனை கவலட்சுமியிடம் கேட்டால்: "எனக்கு அப்படியொரு அவசியம் கிடையாது. ஹீரோக்களை திருப்தி செய்தால்தான் வாய்ப்புக் கிடைக்கும் என்றால் என் கைவசம் வேறு தொழில் இருக்கிறது. நான் சட்டம் படித்தவள்" என்கிறார். ஆனால் இவரும் கார்த்திக்குடன் கிசுகிசுக்கப்பட்டவர்.

## ஓஹோ

'ஆஹா' படத்தில் கதாநாயகனாக நடித்தவர். 'ஆஹா' என்று பாராட்டப்பட்டவர் ராஜீவ் கிருஷ்ணா. ... தொடர்ந்து 'ரேவதி' ... கொண்டிருப்பார்கள். ... இவரை ... மிகை ... நடிப்புத் திறமை ... போதிய வாய்ப்பு ... கவலை ...

நெப்போலியன் குஷ்பு சங்கீதா





ரம்பா

## எல்லாம் பொய்

சன் ரி.வியில் கலக்கித் திரிந்த இந்து, 'பாரதி கண்ணம்மா' படம் மூலமாக நல்ல நடிகை என்று பெயர் எடுத்தவர்.

'குரு பார்வை' படத்தில் 'தலைவாசல்' விஜய்யின் ஜோடியாக பெயர் சொல்லக்கூடிய பாத்திரத்தில் நடிக்கிறார்.

'பட வாய்ப்புப் பெறுவதற்காக இயக்குநர்கள் சிலருடன் நெருக்கமாக பழகியதாக கூறப்படும் கிசுகிசுக்கள் கலப்படமில்லாத பொய்' என்கிறார் கோபமாக.

## விஜய்யின் நாயகிகள்

இன்றைய முன்னணி நாயகனான விஜய் பல கதாநாயகிகளுடன் ஜமாய்த்திருக்கிறார். தனது கதாநாயகிகள் சிலர் பற்றி அடக்கமாக அபிப்பிராயம் சொல்கிறார். இதில் அவர் சொன்னது பாதி, சொல்லாதது மீதி.

சங்கவி: 'ரசிகன்', 'விஷ்ணு' ஆகிய படங்களில் சங்கவியுடன் சேர்ந்து நடித்தேன். இப்போது 'நிலாவே வா' படத்தில் மறுபடி இணைகிறோம். சரியான வால் என்று சொல்லலாம். எனக்கு கார்டு விளையாட கற்று கொடுத்தது சங்கவிதான்.

சிம்ரான்: 'ஒன்ஸ்மோர்' படத்தில் சேர்ந்து நடித்தேன். அப்போது அவருக்கு சுத்தமாக தமிழ் வராது. தமிழில் ஒட்டோ கிராஃப் போட கற்றுக் கொடுத்தேன். கேஷுவல் டைப். பேசாதவர்களைக் கூட பேச வைத்து விடுவார்.

அந்த...
இருப்பார்.
தேவ...
தித்தது உடு...
'நினைத்தே...
பிடிப்பில்.
ரான இவர் ...
இரசிப்பேன்.
ரம்பா: ...
தாய்' படத்...
முதலில் நடி...
நாயகியாக ...
லோருடனும் ...
வார்.

## இனி...

'ஜீன்ஸ்' ...
இனிய தமி...
வதில் கவி...
வும், இசைப்...
னும் கடு...
துள்ளனர்.
உதாரண...
'பூவுக்குள் ஒ...
கூட்டம் அதி...
பூச்சி உட...
அதிசயம்...,
பற்றிய பா...
அமைந்துள்...

## மினி சினி

கார்த்திக்குடன் 'அரிச்சந்திரா' படத்திலும், பிரபுவுடன் 'மனம் விரும்புதே உன்னை' படத்திலும் நடித்து வரும் மீனா, மலையாளத்தில் மம்முட்டி, முகேஷ் நடிக்கும் இரண்டு மலையாளப் படங்களில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

* செல்வா இயக்கி நடிக்கும் 'கோல்மால்' படத்தில் இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார் நடிக்கிறார் என்பது தெரிந்த செய்தி. இப்படத்தில் ரவிக்குமார் முதன்முறையாக இரட்டை வேடத்தில் நடிக்கிறார் என்பது புதிய செய்தி.

* கே. பாலச்சந்தர் இயக்கிய 'டூயட்' படத்திற்கு இசையமைத்தவர் ஏ.ஆர்.ரஹ்மான். அடுத்து பாலச்சந்தர் இயக்கும் படத்திற்கும் ஏ.ஆர். ரஹ்மான்தான் இசையமைக்கப் போகிறார்.

* 'புதுக்குடித்தனம்', 'திருவிழா', 'காதல் வந்திரிச்சு' உட்பட பல படங்களில் நடித்து வரும் விக்னேஷ் முதன் முறையாக 'நா முகுடு, நா பிள்ளா' என்ற தெலுங்குப் படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தில் விக்னேஷிற்கு ஜோடியாக சௌந்தர்யா நடிக்கிறார்.

* 'தர்மா' படத்தில் விஜயகாந்திற்கு தங்கையாக, நடிப்பவர் மலையாள நடிகை ஷில்பா. பல மலையாளப்படங்களில் நடித்திருக்கும் இவர் சமீபத்தில் வெளியான மலையாள மொழிமாற்றுப் படமான 'அசுரவம்சம்' படத்தில் மனோஜ் கே. ஜெயனுக்கு தங்கையாக நடித்துள்ளார்.

* சேரன் தற்போது இயக்கி வரும் 'தேசிய கீதம்' படத்தில் கதாநாயகியாக நடிக்க வைக்க முதலில் கௌசல்யாவைத்தான் அணுகினார். சேரன் சொன்ன நாட்களில் கௌசல்யா வேறு படத்தில் நடிப்பதால் அந்த வாய்ப்பு ரம்பாவுக்குக் கிட்டியது.

* ஷங்கரிடம் உதவியாளராக இருந்த காந்தி கிருஷ்ணா இயக்கத்தில் 'என்ஜினியர்' படத்தில் நடித்து வரும் அரவிந்தசாமி, அடுத்து மணிரத்னத்திடம் உதவியாளராக இருந்த பெருமாள் இயக்கும் 'முதன் முதலாக...' என்ற படத்தில் நடிக்கவுள்ளார்.

* ரகுமான்-ராஜஸ்ரீ-ரசிகா நடிக்கும் 'பிரார்த்தனா' படத்தின் பெயரை இப்போது 'உறவுக்கு மரியாதை' என்று மாற்றிவிட்டார்கள்.

* ஷாருக்கான் நடிக்கும் 'தில் சே' படத்தை இயக்கி வரும் மணிரத்னம் அடுத்து தமிழில் இயக்கும் படத்தில் பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். ஏற்கனவே, பிரசாந்த், மணிரத்னம் இயக்கிய 'திருடா திருடா' படத்தில் நடித்துள்ளார்.

* 'வாய்மையே வெல்லும்' படத்தில் பார்த்திபனின் சித்தியாக நடித்த 'வெண்ணிற ஆடை' நிர்மலா, அந்தப்படத்திற்கு பின் தற்போது 'என் சுவாசக்காற்றே' படத்தில் கதாநாயகி இஷா கோபிகருக்கு அம்மாவாக நடிக்கிறார்.



கார்த்திக்-ஹீரா
படம்: அரிச்சந்திரா

## ஒத்திவைத்த கதை பாரசீக ரோஜா

பொற்காலம் படத்தை அடுத்து 'பாரசீக ரோஜா' என்ற பெயரில் படம் இயக்க திட்டமிட்டிருந்தார் சேரன்.

அதற்காக வேகாத வெய்யிலில் துபாய் எல்லாம் போய் அலைந்து படப்பிடிப்பு நடத்த இடங்களும் பார்த்தார்.

இப்போது திடீரென்று அதனைக் கைவிட்டு 'தேசியகீதம்' என்ற பெயரில் இன்னொரு படத்தை இயக்கப் போகிறார். ஏன் மாற்றம்? காரணத்தை சேரன் சொல்லாவிட்டாலும், தகவல் கசிந்து விட்டது.

'பாரசீக ரோஜா' வில் கதாநாயகி தமிழ் நாட்டிலிருந்து துபாய் போகிறாள். அங்கே அரபு ஷேக் வீட்டில் பணிப்பெண்ணாக இருக்கிறாள்.

பயங்கரமான அழகியான அவளை அரபு ஷேக் அடைய விரும்புகிறார். கதாநாயகி உடன்பட மறுப்பதால் வீட்டுச் சிறையில் வைத்திருக்கிறார்.

வேலை தேடி துபாய் செல்லும் தமிழக இளைஞன் கதாநாயகியை மீட்கிறான். அதுதான் கதை.

தற்போதைய தமிழக சூழலில் அக்கதையை படமாக்குவது பிரச்சனை என்பதால்தான் கைவிட்டாராம்.

## காதல...
## சிரிப்பு...

நகைச்சு...
தவிர வேறு...
என்று சத்திய...
விட்டு எடுக்...
'காதலா காத...
மோகன்.
கல்கி சா...
வரையும் கா...
படுத்துகிறார்...
யாத நோயா...
பார். சாமியா...
எழுந்து சுக...
இம்மாதிரியா...
களை பரப்பு...
பாராட்டத்தா...
கமல், ச...



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 54

# 'மெழுகுவர்த்தியாய் வாழ்ந்து மடிந்தவள்'

## ஒரு நடிகையின் சோகக்கதை

'அதிஷ்ட ஜோடி' என்று இரசிகர்களால் முத்திரை குத்தப்பட்டு, அவளுடன் பல படங்களில் ஒருவன் இணைந்து நடிக்கிறான்.

தங்கள் மகள் புத்தி தடுமாறி எங்கே அவன் பக்கம் சாய்ந்து விடுவாளோ? என்று பெற்றோர் துப்பறியும் வேலையைத் தொடக்குகின்றனர்.

பாதுகாப்புக்காக அவள் பின்னால் ஒருவர் நியமிக்கப்படுகிறார். பாத்ரூம் போனாலும், படுக்கப்போனாலும் அவர் நிழலாய்த் தொடருகிறார்.

அவளோ அனைவர் காதிலும் பூச் சுற்றிவிட்டு ஒப்பனை அறையில் உள்ள ஃபோனிலோ, தோழி வீட்டுப் ஃபோனிலோ சங்கேத பாஷை பேசி, ஆசை நாயகனுடன் அளவளாவி மனதைப் பறிகொடுக்க ஆரம்பிக்கிறாள்.

வளரவேண்டிய கட்டத்தில் காதல் வசப்பட்டுவிட்ட இவ்விருவரின் நலம் விரும்பிகள், 'பெறப்போகும் பெரும் புகழுக்கு, விடலைக் காதல் இடையூறாகி, எதிர்காலத்தை இருட்டாக்கிவிடும்' என்று எச்சரிக்கின்றனர்.

ஒரு நாள் திடுமென்று ஹீரோவுக்கு அவரது வீட்டார் வெளியே பெண் பார்த்து நிச்சயித்து விடுகின்றனர்.

'உயிரும் நீதான், என் உடலும் நீதான்' என்றவன், தன் உடலையும், உயிரையும் வேறு ஒருத்திக்கு சாசுவதமாக்கி விடுகிறான்.

காதல் துரோகம் அவளை நிலைகுலைய வைக்கிறது. படப்பிடிப்பை இரத்துச் செய்து விட்டு, படுக்கையறைக்குள் தாளிட்டுக் கடந்த கால நினைவுகளைக் கண்ணீரில் கரைத்து விட்டு, மனதைக் கல்லாக மாற்றிக்கொள்கிறாள். பிறகு இயந்திரமாக எண்ணற்ற படங்களில் நடிக்கத் துவங்குகிறாள்.

எண்ண முடியாத பணம், பங்களாக்கள், நிலபுலன்கள், நகை நட்டுக்கள் எனச் சொத்துக்கள் குவிகின்றன.

### சகோதரனின் ஆசை

'தங்கச்சி கால்ஷீட் வேணும்னா, அவரோட தம்பியைச் சரிக்கட்டணும்' என்கிற தாரக மந்திரத்தை திரையுலகம் புரிந்து கொள்கிறது.

வீதி வீதியாக, வெறிநாயைப்போல காரை எடுத்துக்கொண்டு வேட்டையாட அலைகிற சகோதரனுக்கு வீடு தேடிச் சொர்க்கம் வருகிறது.

விரும்பிய மதுப்புட்டிகள், ஆசைப்பட்ட பதுமைகள்- அவன் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. தயாரிப்பாளரின் தேவையான கால்ஷீட் அதன்பின் பூர்த்தியாகிறது.

இரவு பகலாக இரத்தத்தை உறிஞ்சும் மின் ஒளியில் நடித்து ஓய்ந்து வீடு வந்து படுக்கையில் சாயும் அவளுக்கு, பக்கத்து அறையில் கிளுகிளுப்பும் கும்மாளமுமாய்ச் சகோதரனின் விளையாட்டுச் சத்தம் காதில் விழுகிறது.

தன் உணர்வுகளைக் கொன்றுவிடப் பழகுகிறாள். இல்லறத்தில் நடிகை ஈடுபடவேண்டிய தருணத்தில், தன் இல்லற சுகத்தை புதுப்பித்துக்கொள்ள அவள் அன்னை ஆசைப்படுகிறாள்.

இருக்கின்ற குடும்பத்தின் எண்ணிக்கை போதாது என்று புதிதாக தம்பி, தங்கைகளின் எண்ணிக்கையைப் பெருக்குகிறாள் அன்னை.

பிரியமாகப் பழகிய சகோதரி 'தானும் பிரபலமாக என்ன வழி?' என்று தேடி அலையத் தொடங்குகிறாள்.

அப்பாவுக்கு அறுபது நாழிகையும் மதுவில் நீந்தவும், கிளப்பில் தூங்கவுமே நேரம் சரியாகப் போய்விடுகிறது.

அவளது சுகத்தையோ, துக்கத்தையோ, அவளது தேவைகளையோ அன்புடன் விசாரிக்க அந்த வீட்டில் யாரும் இல்லை.

### திருமண ஆசை

காலச் சக்கரம் அவள் வனப்பில் வரிகளைப் போடுகிறது. இப்போது அவள் கௌரவமாக அனைவராலும் 'அம்மா' என்று அழைக்கப்படுகிறாள்.

ஆனால், அவள் உண்மையாகவே தாய் ஆக வேண்டும். அவளுக்கென்று ஒரு வாழ்க்கை வேண்டும் என்று அக்கறையுடன் முயற்சி செய்வோர் யாருமில்லை.

'மற்றவர்களுக்காக மெழுகுவர்த்தியாய் எரிந்து வீணானது போதும், நமக்கென்று ஒரு குடும்பம், நம்மீது பரிவு காட்ட ஒரு மனிதரை நாமே தேர்ந்து எடுத்துக் கொள்வோம்' என்ற முடிவுக்கு வருகிறாள்.

வாலிப வயதில் ஆண் தேடினால், அவன் அவளது சொத்தை மட்டுமே குறியாக வைத்து வருகிறான். சொத்து தனக்கு கிடைக்கவில்லையென்றால் மிரட்டுகிறான்.

தன் உள்ளத்தை புரிந்துகொண்டவர், தன்னோடு பல ஆண்டுகள் தொழில் புரிந்த ஒருவரை நாடுகிறாள். அவரோ அவளை மணக்க மறுக்கிறார்.

இடிந்துபோன அவள் தூக்க மாத்திரையில் சரண் புகுந்து நிரந்தர துயில் கொண்டு விடுகிறாள்.

இது ஒரு நடிகையின் கதையல்ல.... நீண்ட ஒரு சோக வரலாற்றின் உண்மைத் தொகுப்பு...

நடிகர் சிவகுமார் எழுதிய திரையுலக அனுபவம் பற்றிய நூலில்தான் மேற்கண்ட சோகக் கதையை வெளியிட்டிருந்தார்.

திரையுலகில் நடிகைகள் படும் அவலங்களை ஒரு நடிகனாக மட்டுமல்லாமல், சக மனிதனாக நின்று பரிவுடன் நோக்குபவர்களில் ஒருவர் சிவகுமார்.

அதனால்தான் உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டும் துணிச்சல் அவருக்கு இருக்கிறது.



அஜித்குமார்-சிம்ரான்
படம்: அவள் வருவாளா

## அரிவாள் குவிப்பு

நெப்போலியன் வீட்டில் ஏராளமான அரிவாள்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. வீச்சு அரிவாள், வெட்டரிவாள் திருப்பாச்சுழி அரிவாள் என்று பல தினுசுகளில் இருக்கின்றன.

நெப்போலியன் யாருடன் சண்டைபோட தயாராகிறார்? யாருடனும் அல்ல.

அத்தனை அரிவாள்களும் இரசிகர்களின் அன்பளிப்பு.

படங்களில் அரிவாளுடன் தோன்றி கலக்கியதால், நெப்போலியனை காணவரும் இரசிகர்கள் கையில் அரிவாள் பரிசுடன்தான் ஆஜராகிறார்கள்.

கிழக்கும்-மேற்கும் படம் தற்போது நன்றாக ஓடிக் கொண்டிருக்கிறது. அப்படத்திலும் ஒரு காட்சியில் அரிவாளை ஏந்த வைத்துவிட்டார்கள்.

நெப்போலியன் அரிவாள் தூக்கினால்தான் அந்தப் படம் ஹிட்டாகும் என்று செண்டிமெண்ட் போலிருக்கிறது.



சாக்ஷி

...கு கலகலப்பாக

...ணி: நேரில் சந் ...லப் பேட்டையில் ... வந்தாய்' படப் ... நாட்டுக்கார ...ம் தமிழை நான்

...னைத்தேன் வந் ...ான் இவருடன் ...ன். பெரிய கதா ...ந்தாலும் எல் ...கஜமாகப் பேக

## ... தமிழ்

...ப் பாடல்களில் ...'டம்பெறச் செய் ... வைரமுத்து ...ல் ஏ.ஆர்.ரகுமா ...பாக உழைத்

...துக்கு ஒன்று. ...திருக்கும் கனிக் ...ம், வண்ணத்துப் ...ல் ஓவியங்கள் ...று அதிசயங்கள் பிரமாதமாக



லிவிங்ஸ்டன்-தேவயானி
படம்: உனக்கும் எனக்கும் கல்யாணம்

## ...காதலா
## ...வெடிகள்

... நகைச்சுவை ...துவும் இல்லை ...ரமாணம் செய்து ...பட்டுள்ள படம் ... வசனம் கிரேஸி

...ார் மாதிரி ஒரு ...த்து அம்பலப் ... நடக்க முடி ...ால கமல் நடிப் ...ார்வைபட்டதும் ...யாகிவிடுவார். ...குத்தறிவு செய்தி ...ற்காக கமலைப் ... வேண்டும். ...ராஜ் இருவரும் தான் துணிந்து இதுமாதிரியான காட்சிகளில் நடிக்கக்கூடிய பெரிய ஹீரோக்கள்.

படத்தில் பிரபுதேவாவுக்கு திக்குவாய். அவருக்கு ஜோடி ரம்பா. கமலுக்கு ஜோடி சௌந்தர்யா.

குபீர் சிரிப்பு வெடிகளில் இருந்து சில துளிகள்:

பிரபுதேவா: நிறைய அநாதைக் குழந்தைகளை வளர்க்கிறோம்.

சௌந்தர்யா:(கமலிடம்) ஐயோ நாமளும் கல்யாணம் பண்ணிக்கொண்டு நிறைய அநாதைக் குழந்தைகளைப் பெத்துக்கலாம்.

நீரில் முழ்கியபடி, 'எங்களுக்கு நீச்சல் தெரியாது' என்று குரல் கொடுப்பவர்களிடம் வெளியே நின்றபடி சோ: எங்களுக்கும்தான் நீச்சல் தெரியாது அதுக்காக நாங்க என்ன கத்திக்கிட்டா இருக்கோம்.

சாவு வீட்டில் போலியாக அழுதபடி கமல்: என்னங்க இது... விளக்கெல்லாம் ஏத்திவச்சு... எப்படிங்க ஆச்சு..?

இறந்தவரின் மகன்: திரிபோட்டு, எண்ணெய் ஊத்தி தீக்குச்சியால பத்த வைச்சேன்.

எம்.எஸ்.வி: (கமலிடம்) உங்க கையைக் காலா நினைக்கிறேன், நான் தப்பு பண்ணிட்டேன் மாப்பிள்ளை...

கமல்: கையைக் காலா நினைக்கிறது சின்னத் தப்புத்தான் மாமா. இதுக்கெல்லாம் மன்னிப்பு கேட்கணுமா என்ன?

## ஆகாச கோட்டை

'காதலா காதலா' படத்தைத் தயாரித்த தேனப்பன் அடுத்துத் தயாரிக்கும் படத்தில் நான்கு ஹீரோக்கள். அருண்குமார், ராஜு சுந்தரம். இவர் பிரபு தேவாவின் சகோதரர். மேலும் இரண்டு ஹீரோக்கள் யார் என்று தெரியவில்லை. படத்திற்கு 'ஆகாச கோட்டை' என்று பெயர் வைத்துள்ளனர். 'காதல் கோட்டை' பாதிப்போ?

## சிவாஜி மறுப்பு

சரத்குமாரை வைத்து கே.எஸ். ரவிக்குமார் இயக்கும் ஆறாவது படம் 'நட்புக்காக'. இப்படத்தில் சரத் இரட்டை வேடங்களில் நடிக்கிறார்.

கே.எஸ். ரவிக்குமாரும், சரத்குமாரும் சேர்ந்தே வருத்தப்படும் ஒரு விசயம் இருக்கிறது. இப்படத்தில் நடிப்பதற்கு முதலில் ஒப்புக்கொண்டு முற்பணமும் வாங்கினாராம் சிவாஜி கணேசன்.

பின்னர் திடீரென்று முற் பணத்தை திருப்பிக் கொடுத்து விட்டாராம். சிவாஜியை முதன் முதலில் இயக்கும் சந்தோசத்தில் ரவிக்குமாரும், சிவாஜியுடன் முதன் முதலில் நடிக்கும் சந்தோசத்தில் சரத்குமாரும் இருந்தனர். இறுதியில் மிஞ்சியது ஏமாற்றம்.

"இப்படத்தில் நடிக்காமல் சிவாஜியைத் தடுத்தவர் ஜெயலலிதா" என்பது சரத்தின் குற்றச்சாட்டு.

சிவாஜி நடிக்க இருந்த பாத்திரத்தை சற்று மாற்றி விஜயகுமாரை நடிக்க வைத்துள்ளனர். சரத் ஜோடி சிம்ரான். முதன் முதலாக இப்படத்தில்தான் சரத்துடன் ஒட்டிக் கொள்கிறார் சிம்ரான். இசை: தேவா.



படிப்பகம்

## வினா இல்லாத பரீட்சைப் பத்திரம்

வாழ்க்கைப் பரீட்சையில்
உன்னையும் ஒரு-
பாடமாக எழுதி
நொந்து விட்டேன்!
**
என்னால்
சித்தியெய்த முடியாத
பரீட்சைப் பத்திரம் நீதான்!
**
வாழ்க்கைப் பரீட்சை
ஆயுளில் ஒருதரம்தான்
எழுத முடியும்!
**
ஒவ்வொரு தடவையும்
உன் ஊர் வரும்போது,
அந்த முச்சந்தியில்
என் இதயம்-
வெடித்துச் சிதறும்!
**
பஸ்ஸில்
உன் ஊரின் பெயரில்
மணி இழுக்கப்பட்டதும்,
மனசு இடறிவிழும்
பின் அந்த 'கிறவல்' தெருவில்-
இழுபட்டு, தோல் கிழிந்து
தவித்து தண்ணீர் தெவிட்டும்!
**
அப்போது நீ வந்து
வெந்துபோன
நெருப்புத் தணலாக
உன் பார்வையை
கொட்டிவிட்டு போவாய்!
**
தீஞ்சு போகும்
இந்தப் பிஞ்சு மனசு!
**
"உன்னிடமும் மனசு
இருக்கிறதா?" என்ற
சந்தேகம் பெருமூச்சாக
வெளியேறும்!
**
உனக்கு இதயம்
இருக்கிறதோ-
உன் கண்களுக்கு
நான்தெரிகின்றேனோ-
எனக்குத் தெரியாது!
**
ஆனால்
உன் மூக்கு கண்ணாடியில்
எனது விம்பம்
பதிந்துள்ளது
என்பது மாத்திரம் உறுதி!
**
உன்னோடு வாழ்க்கையின்
முடிவுவரை செல்லவிருந்தேன்!
நீ பூச்சியத்தில்
முடித்துவிட்டாய்!
**
முன்பெல்லாம்
உன் ஊர் வரும்போது
இதயம் குளிர்ந்து
கண்களில் கவிதை வரும்!
**
இப்போது
உயிர் எரிகிறது
சுவாசம் நெருப்பு-
புகையாக வருகின்றது.
இதய அடுப்பில்
இதயம் வெந்து
நாடி நாளங்களில்
ஆவி வெளியாகி
உடல் காய்கிறது!
**
ஆயினும்--
ஒவ்வொரு தடவையும்
உனக்காக பிரார்த்தித்தே
உன் ஊரைவிட்டு
வெளியேறும் இந்த மனசு!

யெம்.யே. தஸ்ரிப்-
அக்கரைப்பற்று

## கொழும்பென்றால் எழும்பு

அன்புத் தலைவியே...!
இந்த
அற்ப நேரைகளுக்கு
உன்
கடும் பாறைகளின்
கீழே உறங்க
சுதந்திரம் எப்போது?
o-o
வண்ணத்துப் பூச்சிகளுக்கு மட்டும்
சுதந்திரமென்றால்,
நாங்கள்
மயிர்க்கொட்டிகளும்
கறிவேப்பிலைகளும் போல!
o-o
வண்டிகளில் ஏற்றப்படும்
கட்டாக்காலிகளை
வள் வள்ளென்று
நாயாக மாறி
அடக்கி ஒடுக்கும்
மனிதம்...
நாய்க்கும்
எமக்கும்
வித்தியாசமா?
o-o
வீமனின் படைப்புக்கள்
முடிந்துவிட்டதாலா
இங்கு
துச்சாதனர்களின்
தொடக்கங்கள்?
o-o
இரவு ஆடைகளை
கமெராக்கள் விழுங்கிக்கொள்ள
நாங்கள் மட்டும்தானா
ஆராய்ச்சி ஜடங்கள்?

'கல்வியூர்ச்சந்திரன்'
கோட்டைக்கல்லாறு.

## 'பொதி'கள்

'பொதி'கள்
பலவகைப்படும்.

அவற்றை
இரண்டாக வகைப்படுத்தலாம்!

ஒன்று: சாதாரணப் பொதி
மற்றது: தீர்வுப்பொதி

ஒரு-
பொதியைக் கண்டால்
பயம் வரும்;
மற்றப் 'பொதி'யைக் காணமுடியாது
என்றாலும் பயம் வரும்!

இரண்டும்
நிச்சயம் ஏமாற்றும்!

நாட்டிலுள்ள
எல்லாப் பொதிகளிலும்
கைவைவிட்டு
சோதித்துக் கொண்டிருப்பதால்
'தீர்வுப் பொதி'யிலுள்ள
ஓட்டைகளை அடைக்க-
நேரமில்லை!

'பொதி'களையிட்டு
எச்சரிக்கையாயிருங்களென்று
போதிக்கப்படுவது-
இரண்டுவகை பொதிகளுக்கும்
சேர்த்துத்தான்!!

எஸ். பிரபா.

## பொய் முகம்

உன்னுடன் பேசும்போது
ஆகாய வெளியில்
ஒரு நூறு பளிங்குக்
கிண்ணங்கள்
வெடித்துச் சிதறுகிறது!
••
உன் குரலிசையைக் காவி வரும்
கம்பிகளினூடே
தேனடை உறையக்கூடும்!
••
சில சமயம்
உன் சிணுங்கலுக்காகவே
ஒரு 'ரிஸீவ'ராய் பிறக்கவும்
ஆசை வருகிறது!
••
அர்த்தமற்றது எது கண்மணி-
என் நெஞ்சுக்குள் படிந்திருக்கும்
உன் பிம்பமா?
••
நீ பிளந்து காட்டிய
மனசுக்குள் செத்தநானா?
அன்றில்-
நிழல்களை யாசிக்கும்
நம் மாயக் கனவா?
••
எனினும்-
என்னை நோக்கியே
உன் சுட்டுவிரல்
நீள்கிறது!
••
மருத்துவத்தின் சவாலிது
வியாதியறியா இந்தப்
பிணியிலிருந்து
என் இளமையின் மதாப்பு
தினம் உதிர்கிறது!
••
தாகமாய் இருக்கிறேன் கண்மணி
மனசும்-- நினைவும்
விடாய்த்தவனாய்
எட்டாத மேகத்தினுள்
நீ-நீராய் இருக்கிறாய்!
••
சொல்லேன்...
என்னை நேசிப்பதாய் சொன்னதும்-
பொய்தானே?

என். சுஹா- கள்-எலிய.

## அபூர்வமான படங்கள்








மகாத்மா காந்தி பிறந்தது 1869 அக்டோபர் இரண்டாம் திகதி. பதினைந்து வயதில் காந்திக்கு திருமணம் நடத்தி வைத்தார்கள். இக் கல்யாணம் பற்றி காந்தி தன் சுயசரிதையில் குறிப்பிடும்போது, "அப்படிப்பட்ட அக்கிரமமான குழந்தைக் கல்யாணம் சரி என்று கூறுவதற்கு ஒழுக்கரீதியான வாதம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை." என்று கூறியிருந்தார்.

மகாத்மா காந்தியும், கஸ்தூரிபாயும் சிறுவயது தம்பதியினராக எடுத்துக்கொண்ட அபூர்வமான புகைப்படத்தைப் பாருங்கள். (1) பள்ளிப் பிள்ளைகளுக்கு நாடக வேடம் கட்டி விட்டதுபோன்று வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

இன்னொரு படம் மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் சட்டத்தரணியாக தொழில் பார்த்தபோது எடுக்கப்பட்டது. (2)

பொய் சொல்ல வேண்டிவரும், குற்றவாளிகளைக்கூட தம்மை அறியாமல் காப்பாற்ற நேரலாம் என்று கருதி சட்டத்தரணி தொழிலையே உதறியவர் காந்தி. நம் நாட்டில் காந்தியவாதிகள் என்று தம்மை அழைப்போரில் எவரும் சட்டத்தரணி தொழிலை துறந்ததில்லை என்பதும் குறிக்கப்பட வேண்டிய செய்தி.

காந்தியிடம் வெள்ளைக்கார அதிகாரிகளும் மரியாதை வைத்திருந்தனர். காந்தி இல்லையானால், இந்தியாவில் சாந்தி நிலவாது. தமக்கு எதிரான ஆயுதப் போராட்டமே வளரும் என்ற சுயநல நோக்கமும் அந்த மரியாதைக்கு ஒரு காரணம்.

## பேனா நண்பர்கள்



பெயர்:
என். முகுந்தன்,
வயது: 18
முகவரி: முருகன் கோவில் வீதி, நாவலடி, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்:
ஏ. ரொஷான்,
வயது: 17
முகவரி:
141/சி, விஸ்ட்வைக் வீதி, மட்டக்குளி, கொழும்பு-15.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்:
எஸ். அன்பரசி,
வயது: 20
முகவரி:
தியனகல, கிளன் அல்பின், பதுளை.
பொழுது போக்கு: வழமையானவை



பெயர்:
எம். பர்ஹான்,
வயது: 20
முகவரி:
அல்மினாபுரம், தில்லையடி, புத்தளம்.
பொழுது போக்கு: ரீ.வி., கிரிக்கெட்.

## இந்த வாரம் உங்கள் பலன்
(10.05.1998 தொடக்கம் 16.05.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

மேடம் - சூரியன்,செவ்வாய்.
சிம்மம் - இராகு.
கும்பம் - வியாழன். வெள்ளி. கேது.
மீனம் - புதன், சனி.

சந்திரன்- துலாம், விருட்சிகம், தனு, ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- முயற்சித்தடை, மனக்கலக்கம். | பகல் | 11 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, கௌரவம். | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | மு.ப. | 11 மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| வியாழன்- பெரியோர் சகாயம், மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், தொழில்விருத்தி. | பி.ப. | 1 மணி |
| சனி- பெரியோர் உதவி, பணவரவு. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்:
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், முன்னேற்றம். | பி.ப. | 1 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், வெளியிட வாழ்க்கை. | பி.ப | 2 மணி |
| புதன்- இனசன மகிழ்ச்சி, பணச்செலவு. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், கடன்படல் | பகல் | 11 மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், பெரியோர் பகை. | பகல் | 12 மணி |
| சனி- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப | 2 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்:
(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், முயற்சி பலிதம். | பி.ப | 2 மணி |
| திங்கள்- பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 11 மணி |
| புதன்- தொழில் உயர்ச்சி, பணவரவு. | மு.ப | 10 மணி |
| வியாழன்- இனசன நன்மை, மனக்கலக்கம். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், முயற்சித்தடை. | பி.ப | 1 மணி |
| சனி- பொருள் வரவு, கௌரவம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்:
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, உயர்ந்த நிலை. | மு.ப | 10 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 11 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, பலவித பேறு. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- கடன் சுமை, கௌரவக் குறைவு. | பி.ப. | 2 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-வியாழன். அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்:
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், வெளியிட வாழ்க்கை. | மு.ப. | 10 மணி |
| திங்கள்- மனக் கலக்கம், தேக சுகம் பாதிப்பு. | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. | 1 மணி |
| புதன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் | 12 மணி |
| வியாழன்- பலவித பேறு, பணவரவு. | பகல் | 11 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, வெளியிட வாழ்க்கை. | பகல் | 12 மணி |
| சனி- உறவினர் உதவி, கௌரவம். | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்:
(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- பெரியோர் சகாயம், உயர்ந்த நிலை. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, அந்நியர் நட்பு. | பி.ப. | 1 மணி |
| புதன்- இனசனப் பகை, கௌரவக் குறைவு. | பகல் | 12 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 11 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்:
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக்கஷ்டம். | பகல் | 11 மணி |
| திங்கள்- பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, செலவு மிகுதி | பி.ப. | 1 மணி |
| புதன்- எதிர்பார்த்த நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| வியாழன்- இனசன மகிழ்ச்சி, பணச் செலவு. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 12 மணி |
| சனி- பிரயாணக் கஷ்டம், மனக்கலக்கம். | பகல்- | 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6

### சிம்மம்:
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் சகாயம், மனமகிழ்ச்சி. | பகல் | 11 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| புதன்- பயனற்ற செயல், வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் | 12 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், தொழில் உயர்ச்சி. | பி.ப. | 2 மணி |
| சனி- முயற்சி பலிதம், விண்குறை கேட்டல். | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-வியாழன். அதிஷ்ட இலக்கம்-4

### தனு:
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பெரியோர் உதவி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பணவரவு. | பகல் | 11 மணி |
| புதன்- கடன் சுமை, கௌரவ மிகுதி. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- பலவிதபேறு, காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| சனி- அந்நியர் நட்பு, பண வரவு. | பி.ப | 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்:
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, மனக்குறையதிகம். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பணச் செலவு. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், பெரியோர் சகாயம். | பி.ப. | 1 மணி |
| புதன்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, காரியானுகூலம். | பி.ப. | 3 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவதிகம். | பகல் | 11 மணி |
| சனி- இனசன நன்மை, கௌரவக் குறைவு. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்:
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, பணக் கஷ்டம். | பகல் | 12 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவக் குறைவு. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், அந்நியர் பகை. | மு.ப. | 10 மணி |
| புதன்- பொருள் வரவு, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| வெள்ளி- முயற்சி ஊதம், கடன்சுமை. | மு.ப. | 10 மணி |
| சனி- இனசனப் பகை, காரியத்தடை. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி:
(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் சகாயம், கடன்படல். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பி.ப. | 2 மணி |
| புதன்- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பகல் | 12 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், மனக் கஷ்டம். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மனக்கலக்கம். | பகல் | 11 மணி |
| சனி- பெரியோர் பகை, தொழில் மந்தம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

# புடவை இரகசியம்



புடவைகள் தேர்ந்தெடுக்கும்போது கவனிக்க வேண்டியவை:

* புடவை தேர்ந்தெடுக்கும்போது, சூழ்நிலை, சௌகரியம், அழகு போன்றவைகளைக் கருத்தில் கொள்ளுங்கள்.
* குழந்தைகள் வேகமாக வளர்ந்தால், அவர்களுக்கு ஒரே தடவையில் அதிக துணிகளை வாங்கக்கூடாது.
* புடவைகளில் நிறத்துக்கு அதிக முக்கியத்துவம் உண்டு. நீலம் வாழ்க்கையில் அதிக சுபீட்சத்தை ஏற்படுத்தும் என்கிறார்கள். மஞ்சள் சாந்தியையும், வாழ்க்கையில் வசந்தத்தையும் ஏற்படுத்துமாம்.
* சிவந்த நிறம் கொண்டவர்களுக்கு கடுமையான வர்ணமுள்ள புடவைகள் பொருத்தமாகும். கறுப்பு நிறம் கொண்டவர்கள் இளம் நிறத்திலான உடைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
* சருமத்தின் நிறத்தைப் போன்ற உடைகள் அணிவது பொருத்தமாக இருக்காது.
* திருமணம், விருந்து நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்போது, அதிக வண்ணங்கள் கொண்ட புடவைகள் பொருத்தமாக இருக்கும்.
* வேலைக்குச் செல்லும்போதும், பயணம் மேற்கொள்ளும் போதும் மங்கலான நிறம் கொண்ட உடைகளை அணிந்து செல்லுங்கள்.
* குளிர்காலத்தில் செம்மஞ்சள், மஞ்சள் நிறங்கள் பொருத்தமாக இருக்கும். கோடை காலத்தில் வெள்ளையும், நீலமும் பொருந்தும்.
* இரவு நேரத்தில் மின்சார விளக்கு வெளிச்சங்களில் புடவைகளின் நிறங்களைச் சரியாகத் தேர்ந்தெடுக்க முடியாது. இரவு நேரங்களில் துணிமணி வாங்குவதைத் தவிருங்கள்.

# எப்படி, எப்படி?

## இறைச்சி வாங்குவது எப்படி?



★ தாவர வகை உணவுப் பதார்த்தங்களான காய்கறிகள், சற்று வாடி வதங்கி இருந்தால்கூட சமைத்த பிறகு சற்று சுவை குறையலாமே தவிர முழுவதுமாகக் கெட்டுவிடாது.

★ இறைச்சி, முட்டை, மீன் புத்தம் புதியனவாக இருந்தால்தான் சமைத்த பிறகு ருசிகரமாக இருக்கும். இல்லாவிட்டால் சாப்பிடவே முடியாத அளவுக்குக் கெட்டுப் போய்விடும். அதனால் அசைவ உணவுப் பதார்த்தங்களை வாங்கும்போது மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். குறிப்பாக இறைச்சி விஷயத்தில் நல்ல கவனம் இருந்தாக வேண்டியது அவசியம்.

★ ஆட்டு இறைச்சியில் செம்மறியாட்டு இறைச்சி அவ்வளவு நல்லதல்ல. அது சுவைகுறைவாக இருப்பதுடன், சமைத்த பிறகு கூட இலேசாக ஒருவகை வாடை வீசக்கூடும்.

★ வெள்ளாட்டு இறைச்சியாக இருந்தாலும், பெண் ஆட்டை விட கடா ஆட்டின் இறைச்சி நன்றாக இருக்கும். என்றாலும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் பெண் ஆட்டு இறைச்சியை பயன்படுத்த வேண்டியிருக்கும்.

★ நாம் வாங்கும் இறைச்சி கிழட்டு ஆடாக இருக்கக்கூடாது. கிழட்டு ஆட்டின் இறைச்சி சற்று மங்கிய சிவப்பு நிறமாகக் காணப்படும்.

★ இளம் ஆட்டு இறைச்சியாக இருந்தால் லேசான வண்மை நிறம் கொண்டதாக இருக்கும்.

★ பழைய ஆட்டு இறைச்சியாக இல்லாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். பழைய இறைச்சியாக இருந்தால் நீர் வற்றி நல்ல சிவந்த நிறத்துடன் இருக்கும்.

★ தரமான இறைச்சியைத் தேர்ந்தெடுத்து வாங்குவது சற்று சிரமம்தான். என்றாலும் அனுபவத்தின் மூலம் நல்லது கெட்டதைப் புரிந்துகொள்ள முடியும்.

★ நமக்கு மிகவும் அறிமுகமானவரும் நன்கு பழக்கமுள்ளவருமான கடைக்காரரிடமே தொடர்ந்து இறைச்சி வாங்கும் வழக்கத்தைக் கொள்ள வேண்டும். ■

## எலுமிச்சம் பழச்சாறு

ஆரோக்கியத்துக்கு மட்டுமல்ல, அழகுக்கும் எலுமிச்சம்பழத்தைப் பயன்படுத்தலாம்.

◗ ஒரு கப் சுடுநீரை எடுத்து லேசாக ஆறியதும் அதில் பாதி எலுமிச்சம்பழத்தைப் பிழிந்துவிட்டு, அதற்குள் கைவிரல்களை நனையுங்கள். நகங்கள் 'பளிச்' ஆகும்.

◗ முகப்பரு இருக்கும் இடத்தில் எலுமிச்சம் பழச்சாறு போடுங்கள்.

◗ அப்பிளை நறுக்கி அதிக நேரம் வைப்பதாக இருந்தால் அதில் சிறிதளவு எலுமிச்சம் பழச்சாற்றை புரட்டி வைத்து விடுங்கள். அப்பிள் நிறம் மாறாது அப்படியே இருக்கும்.

◗ மீன் வெட்டிய கைகளில் இருக்கும் வாடையைப் போக்கவும் எலுமிச்சம் பழச்சாறு பயன்படுத்தலாம். ■


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** DR

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 16-05-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.




# கண்ணீரில் கரைந்த இரவுகள்

அவுஸ்திரேலியப் பெண்ணான டேல் ட்றையனுடன் சாள்ஸ் உறவு வைத்திருந்த தகவலை பத்திரிகைகள் வெளியிட்டன.

சாள்ஸும் டேல் ட்றையனும் கட்டியணைத்தபடி முத்தமிட்டுக் கொண்டிருந்த போது அதனை புகைப்படம் எடுத்துவிட்டார் ஒரு படப்பிடிப்பாளர்.

இருவரும் மிக நெருக்கமாகக் காட்சியளித்தனர். காற்று இடையறுத்து செல்ல முடியாத ளவுக்கு இறுக்கமான அணைப்பில் திளைத்தனர்.

பத்திரிகைகளில் வெளியான புகைப்படங்களை சலனமே இல்லாமல் பார்த்தார் டயானா.

"பரவாயில்லையே, இளவரசருக்கும் காதல் விளையாட்டு கைகூடுகிறதே!" என்று கூட டயானா புன்சிரித்தபடி தன் நண்பிகளிடம் கிண்டலடித்தாராம்.

டேல் ட்றையனை 'கங்கா' என்று சங்கேதப் பெயரிட்டிருந்தார் சாள்ஸ். அந்த விபரமும் டயானாவுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது.

ஒருமுறை சாள்ஸ் தன்னைக் கடந்து போகும் போது, தன் மகன் வில்லியம்ஸ்சிடம்: "உனக்கு கங்கா என்று தெரிந்தவர்கள் யாரும் இருக்கிறார்களா?" என்று டயானா கேட்டிருக்கிறார்.

சாள்ஸ் ஒரு நொடி திணறிப்போனார். பின்னர் சுதாகரித்துக்கொண்டு நடையைக் கட்டினார்.

டேல் ட்றையன் ஆடை வடிவமைப்பாளர். அவரது கணவர் ஒரு வங்கியாளர். இளவரசர் சாள்ஸுடன் தன் மனைவி நட்பாக இருப்பதை அவர் பெருமையாக நினைத்தார்.

டேல் ட்றையனும், இளவரசர் சாள்ஸும் அவுஸ்திரேலியாவில் உள்ள 'பல்மோரல்' மாளிகை ஒன்றில் தங்கள் இரகசிய சந்திப்புக்களை வைத்துக் கொண்டனர்.

எப்போதுமே உள்ளேயே காதல் செய்வதில் சலிப்பு ஏற்பட்டு வெளியே வந்து சுற்றியபோதுதான் கமராக்களிடம் வசமாகச் சிக்கிக்கொண்டனர்.

அதன்பின்னர் மாளிகையைவிட்டு வெளியே வருவதே கிடையாது.

டேல் ட்றையனுக்கும் சாள்ஸுக்கும் இருந்த உறவைப்பற்றி டயானா கவலைப் படாதபோதும், இன்னொருவர் கவலை கொண்டிருந்தார்.

டயானா முதலில் திகைத்துப் போனார். பின்னர்தான் அவர் மனதில் ஜேம்ஸ் ஹெவிற் பற்றிய சந்தேகம் மெல்ல அரும்பியது.

ஜேம்ஸ் ஹெவிற்றை தொடர்பு கொள்ள முயன்றார். ஆளைப் பிடிக்கவே முடியவில்லை. பல தகவல்கள் அனுப்பியும் ஜேம்ஸ் ஹெவிட் டயானாவுக்கு ஃபோன் செய்யவில்லை.

அப்போதுதான் உறுதியாக டயானாவுக்குத் தெரிந்தது; 'ஜேம்ஸ் ஹெவிற் ஒரு காதல் துரோகி.'

'எத்தனை தூரம் அவனை மலையாக நம்பினேன். என் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டுவிட்டான். பயன்படுத்தியது மட்டுமல்லாமல், பத்திரிகைகளுக்கும்... சே... அவன் மனிதனேயில்லை...!' டயானா தன் தோழி இங்கிரிட்டிடம் புலம்பினார்.

ஜேம்ஸ் ஹெவிற் ஒரு புத்தக வெளியீட்டு நிறுவனத்துடன் பேரம் பேசினான்.

"இளவரசியுடன் என் அனுபவங்களை விலாவாரியாக விபரிக்கிறேன்." என்றான். கணிசமான பணம் கைமாறியது.

"குதிரையேற்ற பயிற்சி மட்டுமா கொடுத்தார்; வேறென்ன பயிற்சி எல்லாமோ கொடுத்தார்!" என்று பத்திரிகைகள் விஷமமாகத் தலைப்புத் தீட்டின.

இளவரசர் சாள்ஸும் அவரது நெருங்கிய நண்பர்களும் அச் செய்திகளால் மகிழ்வுற்றனர்.

டயானாவை மக்கள் முன் அம்பலப் படுத்தவும், குற்றவாளிக் கூண்டில் நிற்கும் சாள்ஸை மீட்கவும் தக்க சந்தர்ப்பம் என்று நினைத்து ஆனந்தக் கூத்தாடினார்கள்.

பிரிட்டிஷ் மக்கள் அச் செய்திகளை படித்தார்களே தவிர, டயானாவை வெறுத்தார்கள் இல்லை.

"கப்ரன் ஜேம்ஸ் ஹெவிற் ஒரு மோசமான ஆசாமி. காதலையும், நம்பிக்கையையும் விலைகூறி விற்கும் கயவன்!" என்று பிரிட்டிஷ் இளம் பெண்கள் சீறினார்கள்.

ஒரு குறிப்பிட்ட வீதமானோர் மட்டுமே "டயானா வரம்பு மீறியவிட்ட"தாக குற்றம் சாட்டினர்.

சாள்ஸும் டேல் ட்றையனும் தழுவி மயங்கிய புகைப்படங்களைக் கண்டிருந்தவர்களுக்கு, இளவரசி டயானா கப்ரன் ஹெவிற்றை நாடியது மாபெரும் துரோகமாகத் தெரியவில்லை.



இளவயதில் டயானா


புவனா


## காதலை விலைபேசிய ஹெவிட்

"நாயகி இருக்க, நாடு தாண்டி சென்று மேய்கிறார் இளவரசர் சாள்ஸ். டயானாவை மட்டும் குற்றம் சொல்கிறீர்களே?" என்று சினந்தது டயானாவின் வட்டாரம்.

### அங்கும் கமீலா

கிரேக்க கோடீஸ்வரர் ஒருவர் சாள்ஸ்-டயானா தம்பதிக்கும், அவர்களது குழந்தைகளுக்கும் விருந்தளிக்க விரும்பினார்.

அழைப்பை ஏற்று புறப்பட்டனர். டயானா வேண்டா வெறுப்பாகத்தான் சென்றார்.

உல்லாசப் படகு ஒன்றை கோடீஸ்வரர் ஏற்பாடு செய்திருந்தார். அதில்தான் விடுமுறையைக் கழித்தனர்.

அந்தப் படகில் இருந்தபடியே இலண்டனில் இருந்த கமீலாவுடன் அடிக்கடி தொடர்புகொண்டு உரையாடினார் சாள்ஸ்.

அதன்பின்னர் மரண நிகழ்ச்சி ஒன்றிலும் கமீலா கலந்து கொண்டு டயானாவுக்கு வெறுப்பேற்றினார்.

ரோஸ்மே பிரபுவின் ஆறுவயது மகள் புற்றுநோயால் இறந்து போயிருந்தாள்.

அதற்கான அஞ்சலி ஆராதனை சென் ஜேம்ஸ் மாளிகையில் நடைபெற்றது. இது ஒரு குடும்ப நிகழ்ச்சியாக இருந்தது.

அப்படியிருந்தும் கமீலா அந்த நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டது எவ்வாறு என்பது டயானாவுக்குப் புதிராக இருந்தது.

கமீலா அங்கு வந்து டயானா முன்பாகவே சாள்ஸுடன் அன்னியோன்னியமாக நடந்து கொண்டார்.

டயானாவைவிட்டு விலகி நின்ற சாள்ஸ் அடிக்கடி கமீலாவுடன் குசுகுசுத்தார். இக் காட்சி அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவரது கண்களிலும் பட்டது.

டயானாவுக்கு பெருத்த அவமானமாகப் போய்விட்டது. நிகழ்ச்சி முடிந்து வீடு திரும்பும்போது டயானாவின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது.

எத்தனை முயன்றும் கண்ணீரை கட்டுப்படுத்த டயானாவால் முடியவில்லை.

கண்கொத்திப் பாம்பாக நின்ற பத்திரிகையாளர் ஒருவர் டயானாவின் கண்களில் இருந்து கண்ணீர் வடிவதைப் புகைப்படம் எடுத்துவிட்டார்.

மறுநாள் பத்திரிகையில் அப் புகைப்படம் வெளியானது.

நிகழ்ச்சி முடிந்து வீடு திரும்பும்போது சாள்ஸும், டயானாவும் ஒரே வண்டியில் தான் வீடு திரும்பினர். வண்டியிலேயே வாய்த்தர்க்கம் எற்பட்டுவிட்டது.

இருவரும் காரசாரமாக வார்த்தைகளைப் பரிமாறிக்கொண்டனர். வாகனச் சாரதிக்கு தர்மசங்கடமாகிவிட்டது. காதுகளைப் பொத்திக்கொள்ள வேண்டும் போல இருந்ததாம்.

அத்தனைதூரம் அந்தரங்க விஷயங்கள் இழுக்கப்பட்டு வார்த்தைகளில் ஆபாசம் பீறிட்டதாம்.

அன்று இரவு அரண்மனையில் கிறிஸ்மஸ் விழா நடைபெற்றது. அரண்மனை ஊழியர்களால் நடத்தப்பட்டது.

டயானா அறைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தார். விழாவில் கலந்து கொள்ளவில்லை.

அதனால் அரண்மனை ஊழியர்கள் டயானாவை வெறுப்பார்கள் என்று உள்ளூர சந்தோசப்பட்டார்கள் சாள்ஸும், எலிசபெத் மகாராணியும்.

"சாள்ஸுடன் என்னமோ பிரச்சனையாம். அதுதான் இளவரசி உடைந்துபோய் விட்டார். இல்லாவிட்டால் கலந்து கொண்டிருப்பார்!" என்று அரண்மனை ஊழியர்கள் சிலரே பேசிக்கொண்டனர்.



அவர் கமீலா

எங்கே தன்னை சாள்ஸ் உதாசீனம் செய்துவிடுவாரோ என்று பயந்தார் கமீலா. ஆனால் அப்படி எதுவும் நேரவில்லை.

### வெளியே கசிந்த கதை

இளவரசி டயானாவுக்கும் ஜேம்ஸ் ஹெவிற்றுக்கும் இடையே இருந்த நெருக்கமான உறவு பற்றிய தகவல்களும் பெரியளவில் வெளியாகத் தொடங்கின.

இருவருக்குமே தெரிந்த சில அந்தரங்கமான தகவல்கள்கூட பத்திரிகைகளில் வெளியாகின.



டேல் ட்றையனுடன் சாள்ஸ்

### கடிதங்கள்

டயானாவுக்கு தினமும் ஏராளமான கடிதங்கள் வருவதுண்டு.

தங்களுக்கு வரும் கடிதங்களில் முக்கியமானவற்றை மட்டுமே பார்வையிடுவதுதான் அரச குடும்பத்தாரின் பழக்கம்.

ஏனைய கடிதங்களை உதவியாளர்கள் தான் பார்வையிடுவார்கள். அவசியப்பட்டால் தாமே பதில் எழுதிப்போடுவார்கள்.

ஆனால் டயானா தனக்கு வரும் அத்தனை கடிதங்களையும் தானே பார்க்கும் பழக்கம் உள்ளவர்.

அரண்மனையில் தனிமையில் கிடந்த டயானாவுக்கு அந்தக் கடிதங்கள் தனிமையை போக்கவும் உதவின.

ஒருநாள் கடிதங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது உருக்கமான கடிதம் ஒன்று டயானாவின் கவனத்தை ஈர்த்தது.


(அடுத்த வாரமும் வரும்)



**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**கல்முனை வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி
இவர்தான் ☞ **ஆர். புவனேஸ்வரி,**
கந்தப்பர் வீதி, பாண்டிருப்பு, கல்முனை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

**அடுத்த வாரம் ஆரம்பம்**


**தங்க மாலை பரிசுப் போட்டி**

முதல் அதிஷ்டசாலிக்கு
தங்க மாலை.
இரண்டாவது அதிஷ்டசாலிக்கு
தங்க மோதிரம்.
மூன்றாவது அதிஷ்டசாலிக்கு
சமையல் அடுப்பு.
மேலும் 50 அதிஷ்டசாலிகளுக்கு
இல்ல உபயோகப் பொருட்கள்.

பரிசு மழையில் நனையத் தயாராகுங்கள்



மார்பில் அணிவதற்கே-
உன்னைப்போல்
வைர மணிகளுண்டோ?
சீர் பெற்று வாழ்வதற்கே-
உன்னைப்போல்
செல்வம் பிறிது முண்டோ?
-சுப்பிரமணிய பாரதியார்.



# பந்தயம்

## பாப்பா முரசு சிறுகதை

தெனாலிராமன் குறைந்த விலையில் ஒரு குதிரையை வாங்கி சவாரி செய்யப் பழகி வந்தான். அந்தக் குதிரை விரைவிலேயே இறந்து விடுவதுபோல் வத்தலும் தொத்தலுமாக இருந்தது.

ஒருநாள் அரசரும், தெனாலிராமனும் தத்தமது குதிரைகளில் ஏறி, நகர்வலம் வந்து கொண்டிருந்தனர்.

தெனாலிராமனுடைய குதிரையைப் பார்த்த அரசர்,

"ராமா! உன்னுடைய தொத்தல் குதிரையை என் குதிரைக்குச் சமமாக ஒட்டி வர நினைக்கிறாயா?" என்று ஏளனமாகக் கேட்டார்.

"அரசே! தாங்கள் நூறு பொற்காசுகள் பந்தயம் கட்டினால், தங்கள் குதிரையைக் கொண்டு, தாங்கள் செய்ய முடியாத காரியத்தை, என் குதிரையைக் கொண்டு நான் செய்து காட்டுகிறேன்!" என்றான் தெனாலிராமன்.

அரசர் பந்தயத்துக்குச் சம்மதித்தார்.

ஆற்றுப் பாலத்தின் மீது இருவரும் சென்று கொண்டிருந்தனர். ஆற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

தெனாலிராமன் குதிரையை விட்டு கீழே இறங்கி, தன்னுடைய குதிரையை ஆற்று வெள்ளத்தில் தள்ளி விட்டான். குதிரையை ஆற்று வெள்ளம் அடித்துச் சென்று விட்டது.

தெனாலிராமன் அரசரின் பக்கம் வந்து,

"அரசே! பந்தயப்படி என் குதிரையை நான் செய்தது போல் நீங்களும் செய்து காட்டுங்கள்," என்றான்.

அரசருடைய குதிரை அரபு நாட்டிலிருந்து வாங்கி வரப்பட்டது. உயர்ந்த ரகக் குதிரை. அது ஆயிரம் பொற்காசுகள் பெறுமதியானது.

மேலும் தன்னுடைய ஆயிரம் பொற்காசுகள் பெறுமதியான குதிரையைப் பந்தயத்திற்காக இழப்பதைக் காட்டிலும், தெனாலிராமனுக்கு நூறு பொற்காசுகளைக் கொடுத்து விடுவதே மேல் என்று தீர்மானித்தார் அரசர்.

"ராமா! பந்தயத்தில் வெற்றி பெறுவதற்காக பாவம், உன் குதிரையை ஆற்று வெள்ளத்தில் தள்ளிக்கொன்று விட்டாயே!" என்றார் அரசர்.

"அரசே! எனது குதிரை விரைவில் இறந்துவிடும் என்று வைத்தியர் கூறி விட்டார். ஐம்பது பொற்காசுகள் கூட விலைபோகாத இந்தக் குதிரையை இனி மேல் விற்கவும் முடியாது. அது வெள்ளத்தில் மூழ்கி இறந்து போனதால் அதற்கு வேதனையும் தீர்ந்தது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, தாங்கள் இழக்க விரும்பாத குதிரையைக் காட்டிலும், நான் சுலபமாக இழந்து விட்ட என் குதிரையால் எனக்கு ஐம்பது பொற்காசுகள் இலாபம்!" என்றான் தெனாலிராமன்.

தெனாலிராமனின் சாமர்த்தியத்தைப் பாராட்டி பந்தயத் தொகையான நூறு பொற்காசுகளைக் கொடுத்தார் அரசர்.



## அதிசயம் - ஆனால் உண்மை!

### ஒபோஸம்:



↑ ஒபோஸம் எனப்படும் ஒரு வகை இறாலின் கண்கள் அதன் வாலில் அமைந்துள்ளன.

### அருத்ஸோ ஏரி:




↑ திபெத் நாட்டில் உள்ள இந்த ஏரி நீர் 12 ஆண்டுகள் நன்னீராக இருக்கும். அடுத்த 12 ஆண்டுகள் உப்பு நீராக இருக்கும்.

### வண்ணத்துப் பூச்சி நாணயம்:



→ முற்காலத்தில் வெள்ளியால் வண்ணத்துப்பூச்சி போன்று செய்யப்பட்ட நாணயம் சீனாவில் புழக்கத்தில் இருந்தது.

### புத்திசாலி மான்:




↑ கென்யாவில் காட்டில் இருந்த மான் ஒன்றின் கழுத்தில் முட்கம்பியுடன் கூடிய மரத்துண்டு ஒன்று மாட்டிக்கொண்டு அதற்கு தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தது. இந்த மான் உடனடியாக ஆஸ்பத்திரி ஒன்றுக்கு ஓடிச்சென்று ஆஸ்பத்திரி வாசலில் காத்திருந்தது. ஆஸ்பத்திரி திறந்ததும், நேராக டாக்டரிடம் சென்று பொறுமையாக நின்றது. டாக்டர் கம்பியை வெட்டி, மானின் காயத்திற்கு மருந்திட்டு அனுப்பி வைத்தார்.

## வாரம் ஒரு நாடு

### காம்பியா

தலைநகர்- பஞ்சுல்
பரப்பு- 11,295 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 11 இலட்சம்
மொழி- ஆங்கிலம், மந்திங்கா
எழுத்தறிவு- 30%
சமயம்- இஸ்லாம் (90%), கிறிஸ்தவம்
நாணயம்- தலாசி
தனிநபர் வருமானம்- 235 டொலர்.

அமைவிடம்:

தென் ஆபிரிக்காவில் உள்ள ஒரு குறுகிய நிலத்துண்டுதான் காம்பியா. இந்நிலப் பகுதி அட்லாண்டிக் கடலில் தொடங்கி, 30 மைல்களுக்கு காம்பியா ஆற்றுக்கு இரு கரையிலுமாக, மூன்று பக்கங்களிலும் செனிகல் நாட்டால் சூழப்பட்டு அமைந்துள்ளது.

வரலாறு:

பிரிட்டனிடமிருந்து 1965ல் சுதந்திரம் பெற்றது. 1970ல் குடியரசானது. மொத்த




மக்கள் தொகையில் பாதிப்பேர் மண்டின்கோ பழங்குடியினர். 1994 ஜூலையில் நடைபெற்ற இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யப்பட்டார். 1996ல் நடந்த தேர்தலில் ஜனநாயகத்திற்கு ஆதரவாக மக்கள் வாக்களித்தனர்.

பொருளாதாரம்:

நிலக்கடலை முக்கிய விளை பொருள். துணி மற்றும் உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 16.05.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 244
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 242

பரிசுக்குரியவர்:
ம. அமிர்தர்ஷினி,
தமிழ் மகளிர் வித்தியாலயம், பதுளை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ஜி. நதிஷன், துடுகெமுனு மாவத்தை, பேலியாகொடை. | ரி. துஷாந்தன், ஹெலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15. |
| என். சரீனா, ஹேனமுல்லை, பாணந்துறை. | எஸ். டெல்ஸா கவிதரிசினி, புனித கபிரியல் மகளிர் மகா வித்தியாலயம், அட்டன். |
| முகமட் நௌஸார், ஸாஹிரா கல்லூரி, புத்தளம். | கே. சர்மிளா, தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை. |
| எம். அர்சாத், தெமட்டகொடை வீதி, கொழும்பு-09. | செல்வி ரெஷ்மா கோமஸ், திருக்குடும்ப கன்னியர் மடம், பம்பலப்பிட்டி. |
| எஸ். சிறி கந்தராஜா, தமிழ் மகா வித்தியாலயம், தலவாக்கலை. | ச. யோகராஜினி, விவேகானந்த மேடு, கொழும்பு-13 |

## சுவாசிப்பது எப்படி?

நாம் மூக்கின் மூலம் காற்றில் உள்ள ஒட்சிசனை எடுத்து நுரையீரல்களுக்கு எடுத்துக் கொள்கிறோம். நம்மைப் போல் இவ்வாறு மூக்கின் மூலம் மீன்கள் சுவாசிப்பதில்லை. நம்மைப்போல் சுவாசிப்பதற்கு மீன்களுக்கு நுரையீரல்களும் இல்லை.



பின் எப்படித்தான் மீன்கள் சுவாசிக்கின்றன என்று கேட்கிறீர்களா? மீன்கள் அவற்றின் செவுள்கள் மூலம்தான் சுவாசிக்கின்றன. செவுள்கள் என்பவை மீன்களின் தொண்டைப் பகுதியின் இருமருங்கிலும் உள்ள பிளவுகள் ஆகும். இப்பிளவுகளின் மெல்லிய தோலில் நுண்ணிய இரத்தக் குழாய்கள் அமைந்துள்ளன.

நீரில் காற்று கலந்திருக்கிறது. மீன்கள், நீரை வாய்மூலம் எடுத்துச் செவுள்கள் மூலம் வெளியேற்றுகின்றன. செவுள்களிலுள்ள இரத்தக் குழாய்கள் மூலம், நீரிலுள்ள ஒட்சிசன் எடுத்துச் கொள்ளப்பட்டு, காபனீரொட்சைட்டு வாயு வெளியேற்றப் படுகிறது.

ஒட்சிசன் நிறைந்த சுத்தமான இரத்தம் இதயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உடலின் எல்லாப் பாகங்களுக்கும் அனுப்பப்படுகிறது. நுரையீரல் இல்லாமலே மீன்கள் இவ்வாறு சுவாசிக்கின்றன.

எனினும் மீன்களில் நம்மைப்போல் சுவாசிக்கும் மீன் இனமும் உண்டு. அதன் பெயர் 'நுரையீரல் மீன்' LUNG FISH இது உலகில் அருகிவரும் உயிர் இனங்களில் ஒன்றாகும்.

## சின்னச் சின்னச் செய்திகள்

* உலகிலேயே வேகமாகப் பேசக் கூடிய மொழி ஃபிரெஞ்ச் மொழியாகும். ஒரு நிமிடத்திற்கு சுமார் 350 வார்த்தைகள் பேச முடியுமாம். இதற்கடுத்து ஜப்பான் மொழி. இதற்கடுத்து ஜெர்மன் மொழி.

* விமானத்தில் உள்ள கறுப்புப் பெட்டி, விமானம் ஏதாவது விபத்தில் சிக்கி விட்டால் கடைசி நிகழ்ச்சியைப் பதிவு செய்து வைத்திருக்கும் என்பது தெரியும். உண்மையில் இதன் நிறம் கறுப்பு அல்ல. பளபளக்கும் செம்மஞ்சள் நிறமாகும்.

* தங்கத்தின் மதிப்பு இங்கிலாந்தின் தலைநகரான இலண்டனில் நிர்ணயிக்கப்படுகின்றது. அதேபோல் வைரத்தின் மதிப்பு ஹொலன்ட் நாட்டின் தலைநகரான ஆம்ஸ்டர்டாமில் நிர்ணயிக்கப்படுகிறது.

* உகண்டா நாட்டில் டோரோரோ என்ற இடத்தில்தான் உலகிலேயே மிக அதிக அளவில் இடி இடிக்கிறது. இங்கே வருடத்திற்கு 251 நாட்கள் இடி சத்தத்தைக் கேட்கலாம்.

## ஏன் தெரியுமா?

நள்ளிரவு 12 மணியில் இருந்து நண்பகல் 12 மணி வரையான நேரத்தைக் குறிக்கும்போது a.m என்றும், நண்பகல் 12 மணியில் இருந்து நள்ளிரவு 12 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தைக் குறிக்கும்போது p.m என்றும் எழுதுவார்கள்.

இப்படி எழுதுவது ஏன் என்று தெரியுமா?

நாம் ஒவ்வொருவரும் உலகில் எங்கு வாழ்ந்தாலும், நம் ஒவ்வொருவருக்கும் சூரியன் தலைக்கு நேராக உச்சியில் வரும் காலத்தை நண்பகல் என்று கூறுகிறோம். இதனை இலத்தீன் மொழியில் 'மெரிடிஸ்' (Meridies) என்று கூறுவார்கள். இது ஆங்கிலத்தில் 'மெரிடியன்' (Meridian) எனப்படுகிறது.

இதனால் நண்பகலுக்கு முந்திய நேரத்தை அதாவது நள்ளிரவு 12 மணி-நண்பகல் 12 மணிவரையான நேரத்தை



'அன்ரிமெரிடியன்' (Ante meridian) என்றும், நண்பகலுக்கு பிந்திய நேரத்தை அதாவது நண்பகல் 12 மணிக்கும் நள்ளிரவு 12 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தை போஸ்ட் 'மெரிடியன்' (Post meridian) என்றும் வழங்கினார்கள்.

இதுதான் பின்னர் a.m, p.m என சுருக்கமாக எழுதப்பட்டுவருகிறது.

## தாதாபாய் நௌரோஜி

நமது நாடான இலங்கையைப் போல் அயல் நாடான இந்தியாவும் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டிருந்து விடுதலை அடைந்ததுதான். ஆனால் இந்தியாவின் விடுதலைக்காக அந்நாட்டு மக்கள் சிந்திய இரத்தமும் செய்த தியாகமும் அளவிட முடியாதவை.

இந்தியாவின் சுதந்திரத்துக்காகப் போராடியவர்கள் என்ற வரிசையில் மகாத்மா காந்தி ஜவகர்லால் நேரு மற்றும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஷ் ஆகியவர்களையே நாம் கருத்தில் கொள்கிறோம். ஆனால் இவர்கள் சுதந்திரப் போரில் குதிப்பதற்கு முன்னரே அதற்கான வித்திட்டவர்கள் பலர். அவர்களில் ஒருவர்தான் தாதாபாய் நௌரோஜி. விடுதலைப் போரில் சாதனைகளை நாட்டிய இந்திய தேசியக் காங்கிரஸ் தோன்றுவதற்கும் நௌரோஜி அவர்களும் ஒரு காரணகர்த்தா ஆவார்.



வட இந்தியாவில் செல்வவளம் படைத்த ஒரு பார்சி குடும்பத்தில் 1825ம் ஆண்டு செப்டேம்பர் 4ம் திகதி பிறந்த இவர் 1845ல் கலைமாணிப் பட்டம் பெற்று இலண்டன் மாநகர் சென்றார். அங்கு வாழ்ந்த இந்தியர்களைச் சேர்த்து இந்தியர் சங்கத்தை நிறுவினார். பிரிட்டிஷ் பாராளுமன்றப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார். இந்தியா திரும்பியதும் ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை செய்வதற்கான ஒரு குழுவில்சேர்ந்தார். அந்நியருக்கு ஆலோசனை கூறுவதை விடுத்து சுதந்திரமாகவேநாட்டுக்கான தேவைகளைக் தேடிக் கொள்ள அந்நியர் ஆட்சி நீக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்த வேறு பலருடனும் இணைந்து தேசியக் காங்கிரசை உருவாக்கினார். சுயாட்சி வேண்டி முதன்முதலாக குரல் கொடுத்த தாதாபாய் நௌரோஜியை நீதிமன்றத்துக்கு அழைத்து மன்றம் அன்று முடியும் வரை அங்கேயே இருக்க வேண்டும் என்று தண்டனை வழங்கப்பட்டது

இவர் தனது 82வது வயதில் 1917ம் ஆண்டு காலமானார். □

www.padippakam.com

## திக் திக் திக் 10

# நந்தினி 440 வோல்ட்

கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

விடிகாலை ஐந்து மணி சூரியன் கண் விழிக்காத கிழக்குத் திசை இன்னமும் இருட்டாகவே இருந்தது. ஜெயில் காம்பெளண்டைச் சுற்றிலும் வளர்ந்திருந்த வேப்ப மரங்களில் பறவைகளின் அசைவுகள் ஆரம்பமாகிறது. செண்ட்ரியில் இருந்து ஜவான் விறைப்பாய் நடந்து போய்- தண்டவாளத்துண்டில்- இரும்புச் சுத்தியால் ஐந்து முறை அடித்த ஓசையில்- மாயாண்டி விழித்துக் கெண்டான்.

அதே விநாடி-

அவனுடைய செல்லின் கதவருகே- வார்டனின் பூட்ஸ் சத்தம்; தொடர்ந்து சாவி பூட்டில் பொருத்தப்பட்டு 'களங்' கென்று கழன்று கொள்ளும் சத்தம்.

"மாயாண்டி வெளியே வா...!"

மாயாண்டி கையில் கோர்த்திருந்த சங்கிலிகள் அசைய- வெளியே வந்தான்.

செல்லுக்கு வெளியே கொட்டியிருந்த மசமசப்பான இருட்டில்- ஜெயில் சூப்ரிண்டெண்ட் பாண்டுரங்கனும், வார்டனும் ஒரு டாக்டரும் நின்றிருந்தார்கள்.

மாயாண்டி சிரித்துக் கொண்டே வெளியே வந்தான். "அஞ்சு மணி எப்ப ஆகும்ன்னு பார்த்துட்டிருந்து வந்தீங்களாய்யா?"

பாண்டுரங்கன் அவனை நெருங்கினார்.

"மாயாண்டி உன்னோட கடைசி ஆசையை ஒரு பேப்பர்ல எழுதி- தூக்குக் கயித்துக்குப் போறதுக்கு முன்னாடி தர்றேன்னு சொன்னியே! அதுக்காகத்தான் நான் வந்திருக்கேன்... சீக்கிரம் எழுதிக் குடு...!"

மாயாண்டி தன் பெரிய உதடுகளால் சிரித்தான். "நேத்தைக்கு இராத்திரியே எழுதி வெச்சுட்டேன்யா... இந்தாங்க... படிச்சுப் பார்த்து என்னோட ஆசையை நிறைவேத்த முடிஞ்சா நிறைவேத்துங்க..."

அரை ட்ராயரின் இடுப்பில் செருகி வைத்திருந்த- அந்த கசங்கலான கடிதத்தை அலட்சியமாய் இடது கையில் உருவி நீட்டினான் மாயாண்டி.

அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தார் பாண்டுரங்கன். அங்கேயிருந்த வார்டன், டார்ச் வெளிச்சத்தை அந்த லெட்டரின் மேல் உமிழ்ந்தார்.

நான்கே வரிகள் ஓடியிருந்த அந்தக் கடிதத்தைப் பதினைந்து நொடிகளில் படித்து முடித்த பாண்டுரங்கன் ஆச்சரியத்தோடு நிமிர்ந்தார்.

"மாயாண்டி..."

"செய்வீங்களாய்யா...?"

"டாக்டர்ஸைக் கலந்துக்கிட்டு செய்யறேன்."

"ரொம்ப நன்றிய்யா."

கைவிலங்குகள் சப்திக்க- கை குவித்துவிட்டு வார்டனோடு நடந்து போவதையே நெகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தார் பாண்டுரங்கன்.

அவன் வராந்தாவுக்குப் பின் பக்கமாய் இருட்டில் மறைந்தபோதும் கூட கைவிலங்குகளின் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

★★

காலை எட்டுமணி.

டாக்டர் குணசீலனின் தனியறை. அவரைச் சுற்றிலும் கவலையான முகங்களில் வாகீசன், பரிமளம், பாரி, விமல், சொப்னா, பாண்டுரங்கன் எல்லோரும் நின்றிருந்தார்கள்.

பாரி மட்டும் நாக்குழற கேட்டான்: "ஏன் டாக்டர், நந்தினிக்கு கொஞ்சம் கூட பார்வையே இருக்காதா?"

"சான்ஸே இல்லை... நேத்தைக்கே உங்ககிட்டே சொல்லலாம்ன்னு நினைச்சேன். மிஸஸ் நந்தினிக்கு நினைவு திரும்பின மகிழ்ச்சியில நீங்க எல்லாரும் இருந்தீங்க... அந்தச் சமயத்துல சொல்லி உங்க மகிழ்ச்சியைக் கெடுக்க நான் விரும்பலை. இப்போ மிஸ்டர் பாண்டுரங்கன் எங்கிட்ட வந்து- அந்த தூக்குத் தண்டனை கைதி தன்னோட கண்களைத் தானமா கொடுத்திருக்கிறதா சொன்னதுனாலத்தான்- நான் உங்களையெல்லாம் கூப்பிட்டு



விஷயத்தைச் சொல்ல வேண்டியதாயிடுச்சு..."

"அந்தக் கைதியோட கண்களை நந்தினிக்கு எடுத்து வெச்சா... நிச்சயமா பார்வை கிடைக்குமா டாக்டர்..?"

வாகீசன் கேட்க- டாக்டர் புன்னகைத்தார்.

"எண்பது பர்செண்ட் நான் க்யாரண்டி தரமுடியும் ஸார். மிஸஸ் நந்தினிக்குப் பிறவியிலேயே பார்வை இல்லேன்னாத்தான் ஆபரேஷன் ரிஸ்க்... அவங்க பார்வையோடு இருந்தவங்க... ஸோ... எந்த ஒரு ஆரோக்கியமான கண்களைப் பொருத்தினாலும் அவங்களுக்குப் பார்வை வந்துடும்!"

எல்லோரும் மெளனித்தார்கள். ஒரு நிமிஷ நேர இறுக்கமான மெளனத்திற்குப் பிறகு பாண்டுரங்கன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார். "நந்தினிக்கு.. இந்த ஆக்ஸிடெண்டுல பார்வை போனது துரதிஷ்டவசமானதுதான். அதே சமயத்துல அவ பக்கம் கொஞ்சம் அதிஷ்டமும் இருக்கு... அவளுக்குப் பார்வைபோன நேரம்-தூக்குல தொங்கிட்ட கைதியோட ஒரு ஜோடி கண் அவெய்லபிளா இருக்கு... யாருக்கும் எந்த யோசிப்பும் வேண்டாம். டாக்டர் ஆபரேஷனுக்கான ஏற்பாடுகளை செய்யட்டும்..."

எல்லோரும் மெளனமாய்த் தலையாட்டினார்கள்.

"ஒரு விஷயம்" என்றார் டாக்டர்.

"என்ன டாக்டர்..?"

"ஒரு தூக்குத் தண்டனை அடைஞ்ச கைதியோட கண்களை நந்தினிக்குப் பொருத்தப் போற விஷயத்தைத் தயவு செய்து யாரும் அவங்ககிட்ட சொல்ல வேண்டாம். கண்ணுல ஒரு சின்ன ஆபரேஷன் பண்ணணும்னு நான் ஏற்கனவே சொல்லியிருக்கேன்.. நீங்களும் அதையே சொல்லணும்..."

எல்லோரும் தலையாட்டினார்கள். பாரி கேட்டான்:

"ஆபரேஷன்... என்னிக்கு டாக்டர் பண்ணப் போறீங்க..?"

"இன்னிக்கே... இன்னும் ஒரு மணி நேரத்துல ஆபரேஷன் ஆரம்பிக்கப் போறோம்... ஆபரேஷனைப் பண்ணப் போகிறவர் டாக்டர் மனோகர் டேவிட்... ஸிட்டியிலேயே இன்னிக்கு அவர் பெரிய சர்ஜன்... அவர் செஞ்ச அத்தனை ஆபரேஷனும் அற்புதம்... எல்லாருக்குமே பார்வை கிடைச்சிருக்கு..." சொல்லிக் கொண்டே டாக்டா குணசீலன் எழுந்தார்.

எல்லோரும் மெதுவாய் அறையை விட்டு நகர்ந்து- நந்தினி இருந்த ஐ.சி. யூனிட்டை நோக்கிப் போனார்கள்.

நந்தினி எழுந்து உட்கார்ந்து- நர்ஸ் நீட்டிய மாத்திரைகளை உள்ளங்கையில் வாங்கி- டம்ளர் தண்ணீரின் உதவியோடு விழுங்கிக் கொண்டிருந்தாள். இரண்டு கண்களிலும் அழுத்தமான பாண்டேஜ் தெரிந்தது. நர்ஸிடம் கேட்டுக்கொண்டிருந்தாள் நந்தினி.

"சிஸ்டர்... என்னோட கண்கட்டை என்னிக்கு அவிழ்ப்பாங்க...?"

"அதை டாக்டர்தான் முடிவு பண்ணணும்...!"

நந்தினி ஏதோ சொல்ல வாயைத் திறந்த நேரம்- பாரியும் மற்றவர்களும் உள்ளே நுழைந்தார்கள்.

"நந்தினி!"

பாரி கூப்பிட்டான். நிறைய காலடிச் சத்தம் கேட்டு-

நந்தினி மலர்ந்தாள்.

"வாங்க! எல்லோரும் ஒட்டு மொத்தமா... சொல்லி வெச்சமாதிரி எங்கே போயிட்டு வர்றீங்க?"

"டாக்டரைப் பார்த்துட்டு வர்றோம்.." பாரி மெல்லிய குரலில் சொன்னான்.

"என்னோட கண் ஆபரேஷன் என்னிக்குன்னு சொன்னார்?"

"இன்னிக்கே..."

"சீக்கிரமா பண்ணச் சொல்லுங்க. கண்ணு ரெண்டையும் கட்டிக்கிட்டு இருட்டையே பார்த்திட்டிருக்க செம போர் அடிக்குது."

"நந்தினி..."

"ம்..."

"ஆபரேஷன் மைனர்தான். நீ பயப்படாமே இருக்கணும்..."

"நான் பயப்படறதா உங்ககிட்டே சொன்னேனா..? என் இரண்டு கண்ணிலேயும் குத்தியிருக்கிற கிளாஸ் பீஸையெல்லாம் எடுத்துட்டு ஸ்டிச் பண்ணப் போறதா டாக்டர் சொன்னார்... அவ்வளவுதானே..?"

உதட்டைச் சுழித்துக்கொண்டு- யாருக்கோ ஆப்ரேஷன் என்பது போல் அலட்சியமாய்ச் சொன்ன நந்தினியை, அதிகப்பட்ட பிரமிப்போடு பார்த்தான் பாரி.

விரலில் குண்டூசியைக் குத்திக் கொண்டால் கூட அன்றைக்குப் பூராவும் அதையே சொல்லிக் கொண்டிருக்கும் நந்தினியா இவள்?

அவன் அதிர்ச்சியாய் யோசித்துக் கொண்டிருக்கும்போதே- டாக்டர் பிரதாப்பும் இன்னொரு ஸ்டாஃப் நர்ஸும் உள்ளே வந்தார்கள். கூடவே ஸ்ட்ரெச்சர் வண்டி.

பிரதாப் சொன்னார்: "டாக்டர் மனோகர் டேவிட் ஈஸ் ஆன் த வே... மிஸஸ் நந்தினியை ஆப்ரேஷன் தியேட்டருக்குக் கொண்டு போகணும்..."

எல்லோரும் வழிவிட்டு விலகி நின்றார்கள்.

(தொடர்ந்து வரும்)

---

## வல்வெட்டித்துறையில் இருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்.

வேட்டி கட்டிய இலங்கைத் தமிழர்களைப் பார்க்க அமெரிக்கர்கள் அன்று திரண்டிருந்தார்கள்!

# 'அன்ன பூரணி அம்மா'

புதிய தொடர்

அமெரிக்காவின் பிரசித்திவாய்ந்த 'குளோசெஸ்ரர்' துறைமுகத்தில் திரண்டிருந்த அமெரிக்க மக்கள், அவர்களை விசித்திரமாகப் பார்த்தார்கள்!

அமெரிக்கப் பத்திரிகை நிருபர்களுக்குச் 'சுடச்சுட' நல்ல செய்தி!

"அமெரிக்கா வந்துள்ள இலங்கையின் முதல் உத்தியோகப் பற்றற்ற தூதுவர்கள்!"

-இவ்வாறு நியூயோர்க்கிலிருந்து வெளியாகிக்கொண்டிருந்த, 'போஸ்ரன் குளோப்' என்ற தினசரி எழுதியது.

இத்தனைக்கும்-

அவர்கள் என்ன செய்தார்கள்?

நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை-

ஆழ்கடலில் சாகசப் பயணம் நிகழ்த்திய அந்த வரலாற்று நாயகர்களுடைய தீரக்கதையை, சரித்திரம் தான் சில சமயம் மறந்தாலும், ஆண்டாண்டு காலம் சென்றாலும், ஓயாது ஓலமிட்டுக் கொண்டிருக்கும் கடல் அன்னை மறக்க மாட்டாள்!

நெஞ்சு சிலிர்க்கிறது!

அமெரிக்காவில் அன்று ராஜாங்க மரியாதையுடன் வரவேற்கப்பட்டவர்கள், இலங்கையின் வடக்குக் கரையோரப் பகுதியான வல்வெட்டித்துறை என்ற சிற்றூரில் பிறந்தவர்களே!

சிற்றூரில் பிறந்தவர்களாயினும்-

பிறந்த ஊரின் பெருமையையும், பெற்ற நாட்டின் மதிப்பையும் உலகறியச் செய்துவிட்டார்கள்!

இன்று கூட,

வளர்ந்துவிட்ட விஞ்ஞானயுகத்திலும், வங்காள விரிகுடாவில்-

மிகச் சக்தி வாய்ந்த நவீன இராட்சதக் கப்பல்களும், நீர்மூழ்கிக் கப்பல்களும் பெரும் பெரும் அபாயங்களுக்குள்ளாகிக் கடலோடு சங்கமித்து விடுகின்றன.

கோடிக்கணக்கான ரூபா செலவில், நவீன இயந்திரங்களைக்கொண்டு உருவாக்கப்படுகின்றன- இப்போதைய கப்பல்கள்!

ஆனால்-

1930- ஆம் ஆண்டில், உள்ளூர் வேப்ப மரத்தில், வல்வெட்டித்துறை சுந்தர மேஸ்திரியாரினால் அழகுற அமைக்கப்பட்ட இரட்டைப் பாய்மரக் கப்பலில்,

அந்தப் பெருங்கடலினுள் கப்பல் விட்டு வெற்றிப் பயணம் நடாத்தியிருக்கிறார்கள்,

வல்வெட்டித்துறைச் சிங்கங்கள்!

அத்திலாந்திச் சமுத்திரத்தில் அடலேறுகளாகப் பவனி வந்த 'கதை' ஒரு வரலாறு!

ஆம்,



ஒரு சரித்திரம் என்று கூடச் சொல்லலாம்!

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தது ஒரு சரித்திரமென்றால்,

மனிதன் அம்புலித்தரையில் காலடி வைத்தது ஒரு சாதனையென்றால்,

இதுவும் ஒரு சரித்திரம்தான்!

**'டைட்டானிக்' கப்பல் கதை திரைப்படமாகி உலகெங்கும் வசூல் குவிக்கிறது! கப்பல் கதைகள் என்பவை மேலை நாட்டாருக்கு மட்டும் சொந்தமானவையல்ல. 'அன்னபூரணி அம்மா' கப்பல் வல்வெட்டித்துறையில் இருந்து அமெரிக்கா போன கதையும் சுவாரசியமானது. சுறுசுறுப்பானது! 15 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகி பரபரப்பாக வாசிக்கப்பட்டது. பழம் பெரும் எழுத்தாளர் ஈ.கே.ராஜகோபாலன் எழுத்து நடையும் பிரமாதப்படுகிறது.**

இன்று புதுப் புதுச் சாதனைகள்.

பத்திரிகைகளைத் திறந்ததும்,'சாதனை, சாதனை' என்ற செய்திகள், பாராட்டுக்கள்!

ஆனால்-

இவற்றையெல்லாம் தூக்கியடித்து விடுவது போல, 'சாதனைகளுக்கே சவால் விடும் சாதனைகளைச் செய்வோம்' என்று வல்வெட்டித்துறையின் கடந்த காலம் சொல்லாமல் சொல்லுகிறது!

மாலுமி சாஸ்திரத்தை முற்றுமுழுதாகக் கரைத்துக் குடித்தவர்கள்!

-வான சாஸ்திரத்தைக் கற்றுத் தெளிந்தவர்கள்!

ஆழ்கடலை வெற்றி கொண்டு கடலோடுவதில் 'தனிக் காட்டுராஜா'க்களாக வல்வெட்டித்துறைக் கடலோடிகள் திகழ்ந்தனர்!

இந்திய மன்னர்கள் வல்வைக் கப்பலோட்டிகளைக் கௌரவித்தனர்!

இன்று நேற்றல்ல-

எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் கௌரவத்தைப் பெற்றனர்!

அப்பொழுதே ஆழ்கடலில் தாம் கட்டிய கனமிகு கப்பல்களைக் கடலோடவிட்டார்கள்!

இந்திய மன்னர்கள் மட்டுமல்ல,
ஒல்லாந்தரும்
போர்த்துக்கீயரும்,
பிரித்தானியரும்,
வல்வெட்டித்துறைக் கடலோடிகளுக்குத் தனி மதிப்பளித்தார்கள்!

முதலாம் மகாயுத்தத்துக்கு முன்னர்-
இந்தியாவுக்கும்,
மலாயாவுக்கும்,
பர்மாவுக்கும்,
பாய்மரக் கப்பல்கள் வல்வெட்டித்துறை துறைமுகத்திலிருந்து படை படையாகச் சென்று வந்தன!

இரண்டாம் மகாயுத்தம் வரை இது தொடர்ந்தது.

அரிசியும், நெல்லும், முத்துச் சம்பாவும், கறிச் சரக்கும் அங்கெல்லாம் சென்று ஏற்றிக்கொண்டு வந்து நமது கஷ்டத்தைத் தீர்த்த பெருமை வல்வெட்டித்துறைக் கடலோடிகளைச் சாரும்.

அதிராம் பட்டினம்,
நாகபட்டினம்
காக்கி நாடா,
கல்கத்தா,
சிட்டகொங்,
ரங்கூன்,
பினாங்கு,
போன்ற இடங்களிலெல்லாம் வல்வெட்டித்துறைக் கப்பலோட்டிகள் கப்பல் செலுத்திய 'கதைகள்'
ஏராளம்! ஏராளம்!

(அடுத்த வாரமும்...)

www.padippakam.com




ஒலித்த ஃபோனை துர்க்கா எடுத்தாள்.

"ஹலோ துர்க்கா பேசறேன்."

"நான்தான் மதுமிதா பேசறேன்ம்மா," என்றாள் ஃபோனில் மதுமிதா. அவளின் வார்த்தைகள் கண்ணீரில் நனைந்திருந்தன.

"என்ன?" என்றாள் துர்க்கா உணர்ச்சியே இல்லாமல்.

"நீ செஞ்ச சதியால என் கனவெல்லாம் கலைஞ்சு போச்சும்மா. நான். உன்னை உடனே நேர்ல பார்க்கணும்மா... உன்கிட்ட மனசுவிட்டுப் பேசணும்மா... ப்ளீஸ்.. உடனே புறப்பட்டு ஆஸ்பத்திரிக்குவாம்மா...!" என்றாள் விம்மல்களினூடே.

"என்ன மதுமிதா, ஆச்சரியமா இருக்கு. நீ அழறதாவது?"

"அழ வெச்சவளே நீதானேம்மா... நேர்ல வாயேன்!"

"வர்றேன். நீ அழறதை கண்ணால பார்க்கறதுக்காவது வர்றேன்!" என்று ஃபோனை வைத்துவிட்டு எழுந்தாள் துர்க்கா.

பதினைந்து நிமிடத்தில் காரில் வந்திறங்கின துர்க்கா, அந்த ஆஸ்பத்திரியின் ஸ்பெஷல் வார்டில் மதுமிதா முன் வந்து அலட்சியமாக நின்றாள்.

"என்னடி எதுக்கு வரச் சொன்னே?"

கலங்கின கண்களுடனிருந்த மதுமிதா, "உன்னோட மோதினா நான்தான் தோத்துப் போவேன்னு நல்லாப் புரிஞ்சிடுச்சும்மா... நீ என்ன நினைச்சியோ, அதைச் சாதிச்சிட்டே!" என்றாள்.

"என்னடி புதிர் போடறே?"

"கொஞ்சம் முன்னாடி சந்திரசேகர் இங்க வந்திருந்தாரு. இந்த உலகமே என்னைச் சந்தேகப்பட்டாலும் என் சந்துரு என்னைச் சந்தேகப்பட மாட்டாருன்னு ரொம்ப நம்பிக்கையோட இருந்தேன்ம்மா... 'சினிமா புயல்' பத்திரிகையை என் மூஞ்சில விட்டெறிஞ்சு கோபமா பேசினாரு. நான் என்ன விளக்கம் சொல்லியும் அவர் நம்பலை. அதில வந்திருக்கிற ஒவ்வொரு பொய்யையும் அவர் உண்மைன்னு நினைச்சுட்டாரும்மா... நிஜமாவே நான் ஏற்கனவே இரகசியமா கல்யாணம் பண்ணிக்கிட்டு அதை மறைச்சி அவர்கிட்ட பழகிட்டதா குற்றம் சாட்டி திட்டினாரு. இனிமே என் முகத்திலேயே முழிக்கமாட்டேன்னு சொல்லிட்டுப் போயிட்டாரு. இப்ப உனக்கு திருப்திதானே?"

"ரொம்ப திருப்தி! இதுக்காக நான் எவ்வளவு மெனக்கெட்டேன்?"

"அம்மா உங்கிட்டே வீம்பு பேசி பிரயோஜனமில்லைன்னு நல்லா புரிஞ்சுக்கிட்டேன். நான் உன்னை எவ்வளவு தடவை அலட்சியப்படுத்திப் பேசியிருக்கேன். அதெல்லாம் மறந்துடும்மா. என்னை மனப்பூர்வமா மன்னிச்சிடும்மா... தயவு செஞ்சி என் காதலை மட்டும் முறிச்சிடாதேம்மா! நீ சந்திரசேகரை சந்திச்சு, எல்லாம் உன் சதின்னு உண்மையை ஒத்துக்கிட்டு அவருக்கு இருக்கிற சந்தேகத்தைப் போக்கும்மா... ப்ளீஸ்..."

அழுகை கலந்து பேசின மதுமிதாவை அலட்சியமாகப் பார்த்த துர்க்கா, "முடியாது!" என்றாள் அழுத்தமாக.

"அம்மா, ப்ளீஸ்..." என்றாள் மதுமிதா கலங்கின கண்களுடன்.

அவளை அலட்சியமாகப் பார்த்தாள் துர்க்கா.

"எவ்வளவு திமிர் பிடிச்சி தலைக்கனத்தோட தூக்கியெறிஞ்சி பேசிட்டிருந்தே! பாத்தியா, உன்னைக் கெஞ்ச வெச்சிட்டேன். கீடைசில நீ என் காலடில விழுந்துதாண்டி ஆகணும்னு சொன்னேன். இப்ப அதுதானே நடக்குது?"

"நமக்குள்ளே என்ன போட்டியாம்மா? அப்படியே போட்டின்னு வெச்சிக்கிட்டாலும் என் தோல்வியைத்தான் நான் இப்ப உங்கிட்ட பகிரங்கமா ஒத்துக்கறேனே... ப்ளீஸ்மா... கொஞ்சம் மனசு வைம்மா!"

"இப்ப நான் என்ன செய்யணும்னு சொல்றே?"

"இதெல்லாம் என்னோட சதிதான், என் பொண்ணுக்கு ரகசியமா கல்யாணம் எதுவும் நடக்கலைன்னு சந்திரசேகரைப் பார்த்து உண்மையைச் சொல்லணும்மா"

"அப்படிச் சொன்னா என்ன நடக்கும்?"

"என்னைத் தப்பா நினைச்சிட்டிருக்காரும்மா... அந்த நினைப்பை சரி செய்யணும்மா."

"சரி செஞ்சுட்டா உன்னைக் கல்யாணம் செய்துக்குவானே... போடி! அறிவு கெட்டவளே... என்னை என்ன முட்டாள்னு நினைச்சியா?"

"அம்மா, நானும் அவரும் கல்யாணம் பண்ணிக்கறதில உனக்கு என்னம்மா இடைஞ்சல்?"

"வெளிப்படையா சொல்லட்டுமா?"

"சொல்லு!"

"உனக்கு இளமையும், உடம்பும் இருக்கற வரைக்கும்தான் சினிமா வாய்ப்பு வந்துக்கிட்டிருக்கும். இப்ப உனக்கு இருக்கிற புகழுக்கும், வாய்ப்புக்கும் இன்னும் அஞ்சி வருஷத்துக்கு கண்டிப்பா நீ ஃபீல்டுல இருப்பே. அஞ்சி வருஷம்னா அம்பது படம்! அம்பது படம்னா எத்தனை கோடி! நினைச்சுப் பாரு! நானோ பெரிய பட்ஜெட்டுல படம் எடுத்துட்டு இருக்கேன். எக்கச்சக்கமான பணம் தேவைப்படுது. நீ பாட்டுக்கு கல்யாணம் பண்ணிக்கிட்டு நடிப்பை நிறுத்திட்டா உன் மூலமா இந்த அஞ்சி ஆறு வருஷம் வர்ற வருமானம் கட்டாயிடுமே... அதனாலதான் நீ கல்யாணம் பண்ணிக்கறது எனக்குப் பிடிக்கலை!"

"ஏம்மா, உனக்கு பணத்து மேல இவ்வளவு வெறி?"

"அது இன்னைய தேதிக்கு யாருக்கு இல்லை? அதுதாண்டி வாழ்க்கைக்கு ஒரே உந்து சக்தி!"

"சந்திரசேகரை நான் லவ் பண்றேம்மா... காதலை விட பணம் பெரிசாம்மா? என் கோணத்தில இருந்து யோசிச்சுப் பாரு!"

"சரி... இப்படி ஒரு நிபந்தனைக்கு நீ ஒத்துக்கறியா?"

"என்ன?"

"இன்னும் அஞ்சி வருஷம் நடிச்சுக் கொடுத்துடு. அதுக்கப்புறம் நீ யாரை வேணாலும் கல்யாணம் பண்ணிக்கோ. நான் தடுக்கலை. என்ன சொல்றே?"

"நீ சொல்றது கொஞ்சமாவது நியாயமா இருக்கா?"

"என்ன நியாயமில்லை? நிஜமான காதல்னா எத்தனை வருஷம் வேணும்னாலும் அது காத்திருக்கும்."

"ஆக உன்னைப் பொறுத்த வரைக்கும் என்னை நீ உன் பொண்ணாகப் பார்க்கத் தயாரா யில்லை. நான் சம்பாரிச்சுத் தர்ற ஒரு இயந்திரம். அவ்வளவு தானே!?"

"கண்ட புஸ்தகத்தையும் படிச்சிட்டு கேள்வி கேக்கறே நீ? ஆனா என்னோட எதிர்பார்ப்புல தப்பே இல்லை. ஒரு அப்பா தான் படிக்க வைச்ச பிள்ளை பிற்காலத்தில தனக்கு உதவணும்னு எதர்பார்க்கிறதில்லையா? அப்படி உன்னை இந்த இன்டஸ்ட்ரில் நான் தானே அறிமுகப்படுத்தினேன்? உனக்கு ஆரம்பகாலத்திலேயே சான்ஸ் பிடிக்கிறதுக்காக எவ்வளவு முயற்சிகள் பண்ணியிருக்கேன்னு உனக்கே தெரியும். நான் ஆளாக்கிவிட்ட ஒரு பொண்ணு எனக்கு உபயோகப் படலைன்னா எப்படி?"

மதுமிதா அமைதியானாள்.

துர்க்கா தன் வாட்சைப் பார்த்துக் கொண்டாள்.

"நான் புறப்படட்டுமா? சன் டி.வி.யிலேர்ந்து வர்றேன்னு சொல்லியிருக்காங்க. 'சினிமா புயல்' கட்டுரையைப் பத்தி பேட்டி எடுக்கறதுக்காகத்தான் வர்றாங்க. உனக்கும் வெங்கடரெட்டிக்கும் கல்யாணம் ஆயிடுச்சிங்கிற அதே பொய்யைத்தான் இப்ப என்னை நேர்லயும் ஃபோன்லயும் பேட்டி எடுக்கறவங்ககிட்ட சொல்லிட்டு இருக்கேன். டி.வி. காரங்ககிட்டேயும் அதைத்தான் சொல்லப்போறேன். என்னடி அப்படிப் பார்க்கறே? ஒரு நாடகத்தை கடைசி வரைக்கும் கரெக்டா நடத்த வேணாமா? இல்லைன்னா என் இமேஜ் கெட்டுடுமே... வரட்டுமா?"

அலட்சியமாய்ப் புன்னகைத்துவிட்டு வெளியேறினாள் துர்க்கா.

தனக்குள் சிரித்துக்கொண்டாள் மதுமிதா.

அந்த ஸ்பெஷல் வார்டை விட்டு துர்க்கா வெளியே வந்தபோது, வெளியே மூச்சிரைக்க வந்து நின்றான் அந்த வார்டு பாய்.

"இப்பதாம்மா நான் உங்களுக்கு ஃபோன் செஞ்சேன். நீங்க இல்லைன்னாங்க. நல்லவேளை இங்கேயே பார்த்துட்டேன்."

"வளவளன்னு பேசாதே ராமு. மேட்டர் என்ன, சொல்லு!"

"காட்டிலுள்ள அழகிய ரோஜா மலர் மக்கள் கையில் படாமல் அம்மலரின் வாசனையும் அழகும் பயனற்று வீணாக அழிந்துபோவது போல், ராஜகுமாரியும் கல்யாணமில்லாமலேயே தன் வாலிபப் பருவத்தை பயன்படுத்தாது கன்னியாகவே இருந்து வந்தால், பயனில்லை என்று நீங்களாவது எடுத்துச் சொல்லக்கூடாதா?"

*ஒரு கேள்வி– 'கலை' மே, 1949 இதழில்.*

"உங்க பொண்ணை அந்த சந்திரசேகர் சந்திக்க வந்தா அவங்க என்ன பேசிக்கிறாங்கன்னு கண்காணிச்சி அப்பப்ப தகவல் கொடுக்கச் சொல்லியிருந்தீங்களே!"

"ஆமாம்."

"காலைல அவரு வந்திருந்தாரும்மா"

அந்த வராந்தாவில் நடமாட்டம் அதிகமாய் இருந்ததால் சைகை காட்டி, அவனை சற்று ஒதுக்குப்புறமாக அழைத்து வந்த துர்க்கா, "சொல்லு, என்ன பேசிக்கிட்டாங்க?"

"கதவை லேசா திறந்து வெச்சி ஒட்டுக் கேட்டேம்மா."

"அந்த சந்திரசேகர் இவளை கன்னாபின்னான்னு திட்டிப்பேசி, கத்திக் கலாட்டா செஞ்சானா?"

"அவர் எங்க திட்டினாரு! உங்க பொண்ணுதான் உங்களைத் திட்டினமாதிரி இருந்திச்சி. ரெண்டு பேரும் சிரிச்சிதான் பேசினாங்க."

"சிரிச்சிப் பேசினாங்களா?"

"ஆமாம்மா... இதே ஆஸ்பத்திரியில இதே வார்டு ரூமில வெச்சி அவங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கப் போறதாப் பேசினாங்கம்மா. எங்க டாக்டரே அதுக்கு ஒரு சாட்சியாம்."

துர்க்காவின் முகம் சிவந்தது.

"எனக்கு எதிர் நடவடிக்கை காட்டுறாளா அவ? எப்போ பண்ணிக்கப் போறாங்களாம்?"

"ஞாயித்துக்கிழமைன்னு ஏதோ பேசிக்கிட்டாங்கம்மா. ஞாயித்துக்கிழமை பத்திரிகைக்காரங்களைக் கூப்பிடணும்னு பேசிக்கிட்டாங்க."

"அப்படியா? ரொம்ப தேங்க்ஸ் ராமு."

தன் கைப்பையிலிருந்து நூறுரூபாய் நோட்டொன்றை எடுத்துக் கொடுத்து விட்டு வேகமாக நடந்தாள்.

★★

**வீ**ட்டின் வாசலில் தன் காரை சத்தமாக பிரேக் அடித்து நிறுத்தி, அவள் இறங்கியதிலேயே அவள் பயங்கரமான கோபத்தில் இருப்பதைப் புரிந்துகொண்ட ஈஸ்வர், வாயில் போடப்போன பீடாவை போடாமல் நிறுத்தி, சோபாவிலிருந்து எழுந்து கொண்டார்.

"என்ன துர்க்கா, ரொம்ப டென்ஷனா இருக்கே? எங்கே போய்ட்டு வர்றே?"

"என் ரூமுக்கு வாங்க!"

விருட்டென்று படிகளில் ஏறி அறைக்குச் சென்று ஹேண்ட் பேக்கை கட்டிலின்மேல் விசிறிவிட்டு அமர்ந்தாள்.

ஏர்கண்டிஷன் ஸ்பீடை அதிகரித்து வைத்துவிட்டு வந்து அவள் அருகில் அமர்ந்தார் ஈஸ்வர்.

"என்னம்மா ஆச்சு?"

"நாம மெனக்கெட்டதெல்லாம் வேஸ்ட்!"

"என்ன சொல்றே?"

"அந்த சந்திரசேகர் அவளைத் தப்பா நினைச்சி விலகணும், அவ கல்யாணத் திட்டம் தவிடுபொடியாகணும்னு பிளான் பண்ணித்தானே இரகசிய கல்யாணம் நடந்ததா ஒருத்தனை பிடிச்சி சாமர்த்தியமா செட்டப் செஞ்சோம்?"

"ஆமாம்!"

"அந்த சந்திரசேகர் அதெல்லாம் நம்பினதாகத் தெரியலைங்க. அவனுக்கு மதுமிதா மேல அசைக்க முடியாத நம்பிக்கை போலிருக்கு. ரெண்டு பேரும் அந்த ஆஸ்பத்திரியிலேயே ரகசியமா கல்யாணம் செஞ்சுக்கப் போறாங்களாம்."

"எப்போ?"

"வர்ற ஞாயிற்றுக்கிழமை. இவ எவ்வளவு திமிர் பிடிச்சவ பாருங்க! என்னைக் கூப்புட்டு, சந்திரசேகர் எல்லாத்தையும் நம்பி என்னைத் திட்டிட்டு, இனிமே முகத்திலேயே முழிக்கமாட்டேன்னு சொல்லிட்டுப் போயிட்டாருன்னு ஆக்ட் கொடுக்கிறா!"

"அவ ஏன் அப்படி செய்யணும்?"



பட்டுக்கோட்டை பிரபாகர்

"ஞாயித்துக்கிழமை அவளோட இரகசிய கல்யாணம் நடந்து முடியற வரைக்கும் நான் வேற எந்த எதிர் நடவடிக்கையிலேயும் இறங்காம இருக்கறதுக்காக."

"உன் பொண்ணு இல்லையா? உன்னைவிட ஸ்பீடா யோசிக்கிறா!"

"ஆனா அவளைப் பெத்தவளே நான்!"

"சரி இப்ப என்ன செய்யப் போறோம்?"

"அவ நினைச்சபடி இந்தக் கல்யாணம் கண்டிப்பா நடக்கக்கூடாதுங்க"

"அதுக்கு என்ன செய்றது?"

"கச்சிதமான ஒருபிளான் யோசிங்க" என்ற துர்க்கா, பத்து நிமிட அமைதியான சிந்தனைக்கு பிறகு சொடக்குப்போட்டு, "இதான் திட்டம்!" என்றாள் பிரகாசமாக...!

**(தொடரும்)**

# நில்–கவனி–முன்னேறு

**திரையுலக நடிகைகளுடன் கவியரசருக்கு பரிச்சயம் அதிகம்! காதலோடு பழகியவர்களும் உண்டு! சகோதர வாஞ்சையோடு பழகியவர்களும் உண்டு! நடிகை புஷ்பலதா பற்றி கவியரசர் எழுதியது இது.**



கவியரசு கண்ணதாசன்

**1955** என்று ஞாபகம். மவுண்ட்ரோடில் இருந்த எனது 'தென்றல்' அலுவலகத்தில் நான் உட்கார்ந்திருந்தேன். ஒரு பதினான்கு வயதுப் பெண்ணும், அவளது தந்தையும் உள்ளே நுழைந்தார்கள். விசாரித்தேன்.

"இந்தப் பெண் சினிமாவில் நடிக்க நீங்கள் உதவி செய்ய வேண்டும்." என்று கேட்டுக்கொண்டார் அந்தத் தந்தை.

உற்றுக் கவனித்தேன். அந்தப் பெண் 'பேபி'யாகவும் இல்லை. 'குமாரி'யாகவும் இல்லை. அதைச் சொன்னேன்.

"வயது பதினாலு ஆகிறதே?" என்றார் அவர்.

அப்பொழுதெல்லாம் அந்த வயதில் சினிமாவில் நடிக்க முடியாதே!

பெண் அழகாக, திருத்தமாக, குடும்பப் பெண் பாங்காக இருந்தாள். அந்தத் தந்தைக்கு நான் அறிவுரைகள் சொன்னேன். "நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்துக் கட்டிக்கொடுங்களேன்," என்றேன்.

"இது எல்லோரும் பாடுகிற பல்லவி தான்," என்றாள் அவள்.

அந்த வயதில் அவளது துடுக்குத்தனமான பேச்சு என்னைத் திகைக்க வைத்தது..

"உங்களால் முடிந்தால் உதவி செய்யுங்கள்," என்றாள் அவள்.

நான் இரண்டொரு கம்பெனிகளுக்குச் சொன்னேன். கடைசியில் எம்.ஜி.ஆர். நாடகக் கம்பெனியில் இடம் கிடைத்தது.

அங்கிருந்து சினிமாத் துறையில் புகுந்து படிப்படியாக முன்னேறினவள் புஷ்பலதா.

கொங்கு நாட்டில் பிறந்த புஷ்பலதா அந்த மண்ணுக்கே உரிய குணமுடையவள். எதையுமே நேரிடையாகச் சொல்லி விடுவாள். ஒளிவு மறைவு கிடையாது. சில சினிமா நடிகைகளைப்போல் சரஸம், சாகஸம் எல்லாம் அவளுக்குத் தெரியாது.

ஏ.வி.எம். ராஜன்-புஷ்பலதா காதல் விவகாரம் நடந்துகொண்டிருந்தபோது, ஊட்டியில் எனது ஷூட்டிங்கிற்காக வந்திருந்த புஷ்பலதா, என்னிடம்தான் அந்த ரகசியத்தை முதன்முதலில் வெளியிட்டாள்.

தான் ராஜனைத் திருமணம் செய்து கொள்ளப்போவதாகக் கூறினாள்.

"திருமணம் ஆகிவிட்டால், சினிமாவில் மார்க்கெட் குறையுமே," என்று சொல்லிப் பார்த்தேன்.

ஆனால் அவள் நின்ற இடத்திலேயே உறுதியாக நின்றாள்.

ஊட்டியில் ஒரு சம்பவம்.

ஒருநாள் ஷூட்டிங் இல்லை. அன்று ஊட்டியின் எவரெஸ்ட்டான தொட்டப்பெட்டாவுக்குப் போகலாமா? என்று கேட்டாள் புஷ்பலதா.

போகலாம் என்று புறப்பட்டோம்.

என்னுடைய டிரைவர் பாபுராவ் ஒரு முரடன் ஆந்திராவைச் சேர்ந்தவன். இப்போது ஹைதராபாத்தில் இருக்கிறான். அவன்தான் காரோட்டி வந்தான்.

தொட்டபெட்டா போகும்வழி மிகவும் குறுகலானது. ஒரு குறிப்பிட்ட எல்லை கடந்ததும் பயங்கரமான சரிவுகள் தென்படும். இன்னொரு காருக்கு வழிவிடுவதானால், ஜாக்கிரதையாக ஒதுங்கி வழிவிட வேண்டியிருக்கும்.

எங்கள் காருக்குப் பின்னால் ஒரு திறந்த கார், அதில் ஆண்களும் பெண்களுமாகப் பத்து இளைஞர்கள் எங்கள் காருக்குப் பின்னால் வந்தபடி எங்களைக் கேலி செய்து கொண்டே வந்தார்கள்.

என் டிரைவருக்குக் கோபம் வந்தது. அவர்களுக்கு வழி விடுவது போல் வழி விட்டான். அந்தக் கார் பக்கத்தில் வந்த போது படாரென்று வலப்புறமாக வளைத்தான். அந்தக் கார் பாறையில் மோதி எல்லோரும் படபடவென்று விழுந்தார்கள். நாங்கள் பாட்டுக்கு மேலே போய்விட்டோம்.

அந்த இளைஞர்கள் தொட்ட பெட்டாவுக்கும் வந்து என் டிரைவரை ஜாடையாகக் கேலிசெய்தார்கள். உடனே புஷ்பலதா தன் காலில் கிடந்த தைக் கழற்றிக் கொண்டாள்.

அந்தக் கண்ணகியின் ருத்ரத்தைக் கண்டு தொட்டபெட்டாவுக்கு வந் திருந்த அனைவருமே பயந்து விட்டார்கள்.

பிறகு அங்கு வந்திருந்த 'சன் தியேட்டர்' வேணு கோபால், புஷ்பலதாவைச் சமாதானப் படுத்தினார்.

எனது முப்பத்திரெண்டு ஆண்டு சினிமா வரலாற்றில் புஷ்பலதா வைப் போல்- எதையுமே நேரடியாகப் பேசிவிடும் நடிகையை நான் பார்த்ததில்லை.

புஷ்பலதாவும், ராஜனும் இப்போது சிவாஜியை வைத்து ஒரு படம் எடுக்கிறார்கள். அதற்குப் பாடல் எழுதுவதற்காக இந்த வாரம் என்னைச் சந்தித்தார்கள். விஸ்வநாதன் இசையமைப்பு.

பாடலில் ஓரிடத்தில் எனக்கு வார்த்தைத் தயக்கம் வந்தது. உடனே பளிச்சென்று ஒரு வார்த்தையைக் கூறினாள் புஷ்பலதா.

"அற்புதம்!" என்று நான் கை தட்டினேன்.

"உங்கள் தயாரிப்பல்லவா?" என்றார் ராஜன்.

இவ்வளவு பெரிய தமிழ்ப்பட உலகில் எண்ணிப் பத்துப் பெண்கள்தான் தமிழ்ப் பெண்களாக இருக்கிறார்கள். அவர்களிலே புஷ்பலதா ஒருத்தி!

மற்றும் சில நடிகைகளைப்போல் சாகஸம் தெரிந்தவளாகப் புஷ்பலதா இருந்திருந்தால், இன்னும்கூட அவள் கதாநாயகியாக நடிக்க முடியும்.

அந்தக் குடும்பப் பாங்கும், இளமைப் பொலிவும் இன்னும் அவளிடம் இருக்கின்றன.

என்னுடைய படங்களில் எனக்குத் தொல்லை கொடுக்காமல் ஒத்துழைத்த நடிகைகளில் ஒருத்தி, புஷ்பலதா.

பத்துப் படங்களை எடுத்து அவதிப்பட்ட நான், நன்றி செலுத்த வேண்டிய மூன்று நடிகைகள் தேவிகா. மனோரமா, புஷ்பலதா.

www.padippakam.com

# கூட்டுச் சுகம்



தாயிடம் விடை பெற்றுக் கொண்டு, சங்கர் வாசலுக்கு வந்தபோது, காலைச் சூரியன் நன்றாக எழுந்து, நடக்கத் தொடங்கியிருந்தான்.

நிழலாய் அவனைப் பின் தொடர்ந்து, வெளியே வந்து நின்றாள்;- அவன் தாய் மரகதம்.

'மகனை மீண்டும் எப்பொழுது பார்க்கப் போகிறோமோ' என்ற ஏக்கம், அவர் விழிகளில் கூடுகட்டி நின்றது.

"அப்ப... நான் வரட்டுமா?"

"சரிப்பா! வந்து...!"

"என்னம்மா! சொல்லுங்கம்மா!"

விழிகளில் நீர்கோர்க்க மரகதம் மகனை ஏறிட, சங்கர் துடித்துப் போனான்.

மீண்டும், தாயை அழைத்துக்கொண்டு வீட்டிற்குள் வந்தான்.

"என்னம்மா? ஏதும் சொல்லணுமா? ஏன் ஒரு மாதிரியா தயங்குறீங்க...? ம்.. சொல்லுங்கம்மா! என்ன வேணும்...?"

மரகதம், மெல்ல தன் மனசைத் திறந்தாள்.

"சங்கர்! நானும் உன் கூடவே வந்திடுறேனே! நான் உன் மனைவியையும், குழந்தைகளையும் அனுசரித்துப் போகிறேன். அவங்க என்னை எப்படிக் கீழ்த்தரமா, மட்டமா நினைச்சாலும் தாங்கிக்கிறேன்! உன் மனைவிக்கும் எனக்கும் சரிப்படாதுன்னு, இத்தனை வருஷமா என்னை இந்த ஊர்ல தனிக்குடித்தனம் வச்சது போதும்! எனக்கு- இந்தத் தனிமை, நரக வேதனையா ஏதோ ஒரு தண்டனை மாதிரி தெரியுதுப்பா.தயவு செய்து என்னையும் உன் கூடவே கூட்டிக்கிட்டு போயிடு!"

சங்கர் நிதானமாய் அவன் தாயை ஏறிட்டான்.

"இதோ... பாருங்கம்மா! உங்க குணத்துக்கும், என் சாந்தா குணத்துக்கும் ஒத்து வராதுன்னுதானே உங்களை இங்க கௌரவமா தனியா வச்சிருக்கேன்! உங்களுக்கு, இங்க என்னம்மா குறை? கலர் டி.வி., மிக்ஸி, பீரோ, வேண்டிய அளவு புதுபுதுத் துணிமணி! வங்கியில் ஆயிரக் கணக்கில பணம். இந்த வசதி இங்க யாருக்கிட்டம்மா இருக்கு? எந்த மகன் எந்தத் தாய்க்குச் செய்து குடுத்திருக்கான்? சொல்லுங்க! பேசாம பிடிவாதம் பிடிக்காம, இங்கேயே இருங்கம்மா!"

வறட்சியாய் சிரித்தாள் மரகதம்!

"சங்கர்! யாரும் நம்ப வீட்டுக்குள்ள வந்து, கலர் டி.வி.யையும், மிக்ஸியையும் பார்த்து வாயப் பிளக்குறதில்லே! மகனுக்குக் கல்யாணம் பண்ணினீங்களே.. மருமகள் உங்களோட இல்லையான்னுதான் கேட்குறாங்க! சாகுற வரையிலும் தனியா சமைச்சி சாப்பிடணும் என்றதுதான உங்க தலையெழுத்தான்னு கேட்குறாங்க! எல்லாருக்கும், மரச்சாமான்களைவிட மருமகள் முக்கியமாத் தெரியுது. ஆனால் உனக்குத்தான் தெரியலே! மனுஷருக்கு மதிப்பு மனுஷர் தான் சங்கர்; மரச்சாமான்கள் இல்லே! இங்கே என்னைத் தனிமை சுடுற சூட்டிற்கு, என் மருமகளோட உபசரிப்பு அப்படி ஒன்றும் எனக்குப் பெரிசில்லே! எனக்கு என் மகன், மருமகள், பேரன், பேத்திதான் வேணும்! இந்த ஒரு கூட்டுக் குடும்பச் சுகத்துக்காக நான் எதையும் விட்டுக் குடுக்கத் தயாரா இருக்கேன். எதையும் யோசிக்காது, என்னையும் உன் கூடவே அழைச்சிட்டு போ... சங்கர்!"

தாயின் வார்த்தைகளில் ஏகமாய் அடிபட்டு நொறுங்கிப் போனான் சங்கர்.

அனிச்சையாய் உதிர்ந்தன வார்த்தைகள்.

"சரிம்மா! நீங்களும் என் கூடவே கிளம்புங்க! உங்க மனத் திருப்திதான் எனக்கு வேணும்!"

உற்சாக ஊற்றாய் மகனோடு ஊருக்குக் கிளம்பத் தயாரானாள் மரகதம். ●

**மனோ**

# அவர்கள் காத்திருக்கிறார்கள்

"என்ன யோசனை.....? தற்கொலை செய்துக்கிறது கோழைத்தனம் என்று நினைக்கிறீர்களா?"



**ஜெயந்திகுமார்**

வானம் இருண்டிருந்தது காற்று கைவீசி அலசிக் கொண்டிருக்க, சுடு காட்டில் அங்கங்கே அணைந்த நெருப்பின் புகை அல்லாடிக் கொண்டிருந்தது.

பட்டுப்போன மரம் ஒன்றின் மீது அமர்ந்து காத்துக்கொண்டிருந்தான் ஷியாம். ஆவலோடு அவன் கண்கள் சுடுகாட்டின் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தன. அவனோடு கூடவே இங்கே வந்திருக்க வேண்டிய கவிதா... இரண்டு நாளாகியும் இன்னும் வராததால் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தான். அவன் அவளுக்காக காத்திருந்த இடத்திலிருந்து சற்று தள்ளி பூமியை திறந்து கொண்டிருந்தார்கள். இது கவிதாவுக்கான ஏற்பாடாக இருக்குமா? ஏற்பாடுகளை கவனிப்பவன் அவளுக்கு சொந்தக்காரனாக இருக்குமா? இல்லையென்றால், இன்றும் இங்கே வராமல் அவளை தடுத்துவிட்டார்களா? எப்படியிருந்தாலும், நிச்சயம் அவள் வருவாள். என்னை மட்டும் அனுப்பிவிட்டு அவளால் அங்கே நிம்மதியாக இருக்க முடியாது. இந்தத் தற்கொலை திட்டத்திற்கு உயிர் கொடுத்ததே அவள்தானே? ஆரம்பத்திலிருந்து தங்கள் காதல் நிறைவேறாது என்று பயந்து கொண்டிருந்தாள். கடைசியில் அவள் நினைத்ததுப் போலவே ஆகிவிட்டது.

"எனக்கு தெரியும். எங்க வீட்டுலே நம்ம காதலுக்கு சம்மதிக்கமாட்டாங்கன்னு சொன்னா நீங்கதான் கேட்கலை. சொல்லச் சொன்னீங்க. சொன்னேன். கடைசியா நாம சந்திக்கிறதுக்கும் இப்ப தடை வந்துட்டுது. என்னை கல்லூரியை விட்டு நிறுத்திட்டாங்க!" என்றாள், கண்ணீரோடு கவிதா.

"இப்போ என்ன செய்யலாம்?" என்றான் ஷியாம்.

"கடைசிவரை வீட்டுலே போராடிப் பார்க்கிறேன்!" என்றாள். அது போலவே போராடினாள். உண்ணா விரதமும் இருந்தாள். யாரும் அவளை மதிப்பதாக இல்லை. அவள் போராட்டத்திற்கு தரும் தக்க பதிலாக... அவள் அண்ணன் இரண்டு ரவுடிகளோடு வீடேறி வந்து இவனை அடித்து உதைத்து துவைத்து போட்டு விட்டுப் போனான்.

அதை கேள்விப்பட்ட கவிதா துடிதுடித்துப் போனாள். எப்படியாவது அவனைப் பார்த்துவிட வேண்டுமென்று தவியாய்த் தவித்தாள். ஒரு மத்தியான வேளையில் யாருக்கும் தெரியாமல் ஷியாமை சந்தித்தாள்.

"ஐயோ ஷியாம்... என்னால் தானே இவ்வளவும்! ரொம்ப அடிச்சிட்டாங்களா ஷியாம்... இங்கேயா... ரொம்ப வலிக்குதா...?" என்று பதறினாள்.

"இப்ப ஏன் வந்தே கவிதா..? யாராச்சும் பார்த்துடப் போறாங்க.. போ... வீட்டுக்கு!"

"இனி மேலே வீட்டுக்கு போறதா இல்லே..!"

"என்ன சொல்றே...?"

"சேர்ந்து வாழ முடியாத வாழ்க்கையை... இரண்டு பேரும் ஒன்றாய் சேர்ந்து செத்து ஜெயித்துக் காட்டுவோம். காதலைப் பற்றி புரிஞ்சிக்க முடியாத அவங்களுக்கு புரிய வைக்கலாம் வாங்க!" என்று உணர்ச்சிவசப்பட்டு கண்கள் கலங்க, உதடுகள் நடுங்கப் பேசிய அவளுடைய வார்த்தைகளிலுள்ள ஆழம், அவள் இவன் மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள் என்பதைப் புரிய வைத்தது.

"என்ன யோசனை? தற்கொலை செய்துக்கிறது கோழைத்தனமாய் நினைக்கிறீங்களா?" என்று கேட்டாள் கவிதா.

"அப்படி நினைக்கலே கவிதா! தற்கொலை செய்துக்கிறதுக்கும் வீரம் வேண்டும். வா... இந்த நிமிஷமே அதை செயல்படுத்தி சொர்க்கத்திலாவது ஒன்று சேர்வோம்!" என்று அவள் கையைப் பிடித்தான். அவனோடு அவள் நடந்தாள். இரயில்வே கேட் காத்திருந்தது. உள்ளே நுழைந்தார்கள்.

எங்கேயோ "சிக்கு புக்கு சிக்கு புக்கு இரயில்லே!" பாட்டு கூப்பிட, வந்து கொண்டிருந்தது இரயில்.

"யோவ்- இப்படி தள்ளி வாய்யா... ஏம்பா உன்னைத்தான் ஹலோ- சார்... ஏம்மா...!" என்று அங்கு சுற்றியிருந்தவர்கள் கத்தி- சத்தம் போட அவன் காதில் விழுந்தது- கடைசி நேரத்தில் இவனிடமிருந்து யாராலோ இழுக்கப்பட்டுவிட்ட அவளின் அலறல்தான்!

இன்றோடு ஷியாம் வந்து இருபது வருஷமாகிவிட்டது. இருந்தும் அவனுக்கு அவள்மேல் நம்பிக்கை இருந்தது. எனக்காகவே வாழ்ந்த கவிதா. என்னைப் பார்க்க நிச்சயம் வருவாளென்று காத்திருந்தான். வீட்டில் இருப்பவர்களால் சிறைப்படுத்தப்பட்டு, அவளால் வந்து சேர முடியாமல் போய் இருக்கலாமென்று நம்பினான்.

அப்போதுதான் அந்தப் பரிதாபமான கெஞ்சல் குரல் கேட்டது. சமீப ஒரு வாரமாக அடிக்கடி கேட்கும் குரல்..

"ப்ளீஸ் சார்... என் பிருந்தாவை பார்த்தீர்களா...? நில்லுங்க சார்... உங்களைத்தான்... நிற்க மாட்டீர்களா...? எனக்கு பதில் சொல்ல மாட்டீர்களா...?"

இருபது வருஷத்திற்கு முன்பு ஷியாம் எப்படி இங்கே வருவோர் போவோரைப் பார்த்து தவியாய்த் தவித்து, துடியாய் துடித்து, அழுது புலம்பினானோ அது மாதிரியே அவன் செய்து கொண்டிருந்தான். ஷியாம் பரிதாபத்துடன் அவனை நெருங்கி, பரிவோடு தோள் தொட்டான்.

"தம்பி... நாம பேசறது அவங்களுக்குக் கேட்காது. இருந்தாலும், நம்மளோட தேடலை அவங்களிடம் கேட்டுத் தெரிஞ்சிக்காமல் நம்மளாலே இருக்க முடியாது!"

என்ற ஷியாமை உற்றுப் பார்த்தான் அவன்.

"என்ன பார்க்கிறே..? நானும் உன் வயசுலேதான் இங்கே வந்தேன். நீ அதிர்ஷ்டக்காரன்! உனக்கு நான் இருக்கேன். இருபது வருஷமாச்சு நான் இங்கே வந்து. இப்போதுதான் நீ வந்திருக்கே. ஒரு வாரமாய் உன்னைக் கவனிச்சேன். என்னைப் போலவே காதல் தோல்வின்னு புரிஞ்சுக்கிட்டேன்!" என்ற ஷியாமைப் பார்த்த அவன் விழிகளில் ஆச்சரியக் குறி தெரிந்தது. "உன் காதலி பிருந்தாவும், நீயும் சேர்ந்து வாழ முடியாமல் தற்கொலை செய்ய முடிவு பண்ணீங்க. நீ செத்துட்டே... உன் காதலியை தடுத்துட்டாங்க. இப்ப ஆவியா... நீ என்னைப்போல் உன் காதலியை இங்கே தேடிட்டு இருக்கே... சரியா?"

"ஆமாம்...சார்! சாவில் கூட ஒன்று சேரவிடாமல் எங்களைப் பிரிச்சுட்டாங்க. அவளை எப்படியோ காப்பாற்றிட்டாங்க!"

"பாவம் உன் காதலி ஒவ்வொரு நாளும் உன் நினைவாலேயே உருகி, கரைந்து உன்னோடு கூட வர முடியலையே என்ற துக்கத்தில் அங்கே உயிரோடு செத்துக்கொண்டிருப்பாள்!"

"இருந்தாலும் அவங்க வீட்டில் அவளை விடமாட்டாங்க. ஏற்கனவே அவளுக்கு பார்த்த மாப்பிள்ளைக்கு அவளை கட்டி வைத்துவிடுவார்கள்!"

"அப்படி அவ மனசுக்கு பிடிக்காம கல்யாணம் செஞ்சுவைச்சா.. ரொம்ப சீக்கிரம் நீ அவளை இங்கே பார்க்கலாம். நிச்சயம் வந்துவிடுவாள் உன் இடத்தை தேடி!"

"நீங்க சொல்றதை நம்பி நான் ஆறுதலடையலாமா?"

"நிச்சயமாக நம்பு. எனக்கு உன்னைவிட அனுபவம் அதிகம். உன்னிடம் நான் பேசிய இந்த வார்த்தைகள் அத்தனையும் எனக்கு நானே சொல்லிப் பார்த்து ஆறுதலடைந்தவைகள்தான். என்னயிருந்தாலும் இந்த உலகமே காதலுக்கு எதிரிதான்!"

"ஆனால், எங்களோட காதல்ல என் அப்பாகூட பச்சை கொடி காட்டிட்டா. என் அம்மாதான்...!"

"என்ன சொன்னார்கள்...?"

"காதலாவது, சுத்தரிக்காயாவது... அதெல்லாம் ஒரு மாயைன்னு அலட்சியப் படுத்திட்டாங்க!"

"அவர்கள் காதலிக்கத் தெரியாதவர்கள்!"

"சரியாச் சொன்னீங்க. என் அப்பாகூட அம்மாகிட்ட எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். வேண்டாம்மா... கவிதா... சின்னஞ் சிறுசுகளை பிரிக்காதே!" என்றவனின் பேச்சிற்கு சட்டென்று பிரேக் போட்டான் ஷியாம்.

"என்ன பெயர் சொன்னே...?" என்று கேட்டான்.

"பிருந்தா....!"

"உன் காதலி பெயரை கேட்கலே. இப்ப சொன்னியே... உன் அம்மா பெயர்?"

"கவிதா..!"

"நம்பர் 23, கோயில் தெருவில் குடியிருந்த கவிதாவா...?"

"ஆமாம். எங்க அம்மா வீட்டு அட்ரஸ் உங்களுக்கு எப்படி தெரியும்?" ●

# முதன் முதலாக...



**ஷீலா ராகவன்**

இன்றுதான் முதன் முதலாக அந்தக் காரியத்தை செய்யப் போகிறேன். இதுவரை பழக்கமில்லை.

என்ன செய்வது-

பழகிக்கொள்ள வேண்டியதுதான்.

எனது மன தைரியத்திற்கு ஏற்றாற் போல் அதிகமாக கூட்டமில்லாத நகைக் கடை ஒன்றினுள் நுழைந்தேன்.

"வாங்க சார் வாங்க!"- ஒரு இளசு வரவேற்றது.

"வளையல் பார்க்கணும்."

"இப்படி உட்காருங்க.." கௌண்டரின் முன்னால் உட்கார்ந்தேன்.

"இதைப் பாருங்க லேட்டஸ்ட் டிஸைன்!" வாங்கிப் பார்த்தேன்.

"என்ன விலை?"

"இருங்க எடை போடுவோம்!" போட்டார்.

"24 கிராம்... கூலியோட பதினெட்டாயிரம் வரும்..."

"பேக் பண்ணுங்க..."

சுற்றும் முற்றும் பார்த்தேன்.

யாரும் கவனிக்கவில்லை.

காரியத்தை முடித்துவிட வேண்டியது தான்.


அதை எடுத்தேன்.

"ஒரு நிமிஷம்..."

வளையலை கலர் பேப்பருக்குள் 'பேக்' செய்து கொண்டிருந்தவர் நிமிர்ந்தார். அவர் முன்னால் நீட்டினேன்.

"க்ரெடிட் கார்டு" என்றேன். ●

# வெடிப்பு



**மு.கலை**

இலங்கை வானொலியின் விசேட செய்தியைக் கேட்டதிலிருந்து அனுவின் மனம் துடித்துக் கொண்டிருந்தது. கணவனின் வரவை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருந்தது.

கொழும்பு மாநகரில் சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் முப்பதுபேர் வரை இறந்துவிட்டதாகவும், இருநூறு பேர் வரை படுகாயம் அடைந்துள்ளதாகவும் அடிக்கடி வானொலி அறிவித்துக் கொண்டிருந்தது.

நேற்றுக் கொழும்புபோன கணவனின் நிலை தெரியாதவளின் மனம் இருப்புக் கொள்ளவில்லை. வாசலையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவன் வரவில்லை.

குண்டு வெடித்துப் பத்து மணித்தியாலங்கள் ஆகிவிட்டன. கணவன் தினேஷை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். தொலைபேசி மூலம் தனது நிலையை வெளிப்படுத்துவான் என அனு எதிர்பார்த்தாள். ஆனால் இன்னும் எதுவித தொடர்பும் தினேஷ் ஏற்படுத்தவில்லை. அதனால் மேலும் அனுவுக்கு பயம் ஏற்பட்டது.

தினேஷ் போன இடத்தில்தான் குண்டு வெடித்திருக்கிறது. அதுதான் அனுவின் பயத்துக்குக் காரணமாயிருந்தது.

"என்ன தங்கச்சி! அத்தான் வந்திட்டாரா?" என அவளது அண்ணன் சீலன் நான்காவது தடவையாக தினேஷை விசாரித்துக் கொண்டு வந்துவிட்டான்.

சீலனின் மனமும் கலவரப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் கணவனைக் காணாது தவித்துக் கொண்டிருக்கும் தங்கையிடம் தனது மனம் பயப்படுவதையும் காட்டினால் அனுவின் பயம் மேலும் அதிகரித்துவிடும் என உணர்ந்த சீலன், "நீ யோசிக்கின்ற மாதிரி ஒண்டும் நடவாது. வீணாக மனசைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே. அவர் ஒரு பிரச்சனையு மில்லாமல் வந்துவிடுவார்!" என தங்கையின் மனதைத் தேற்றிக் கொண்டிருந்தபோது-

வாசலில் வேன் வந்து நின்றது.

கணவனைக் காணாது தவித்துக் கொண்டிருந்ததனால் ஏற்பட்ட மனவெப்பம் தணிந்தது. வெளியே வந்து கணவனை வரவேற்றாள்.

"இண்டைக்கு அனு எனக்கு நல்ல காலம். மயிரிழையிலை தப்பிட்டன்!" என தினேஷ் சொன்னதும் குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் அவன் இருந்திருக்கிறான் என்பது தெளிவானது.

திருமலையில் புடவைக்கடை ஒன்றின் உரிமையாளர் தினேஷ். அவன் தனது கடைக்கு புடவைகள் கொள்வனவு செய்ய நேற்றுக் கொழும்பு சென்றிருந்தான்.

"நான் நின்ற கடைக்குப் பக்கத்திலை தான் குண்டு வெடிச்சது. நான் நின்ற கடையின் ஓடுகள்கூட சிதறி விழுந்தன. எனக்கு ஏதோ நல்ல காலம், சிறு காயங்கள்கூட இல்லாமல் அந்த இடத்திலிருந்து ஓடி எங் கடை வேனுக்கு வந்து குறுக்குப் பாதையாலை கொழும்புக்கு வெளியே வந்திட்டன்!" என நடந்து முடிந்த சம்பவத்தை தினேஷ் விபரித்துக் கொண்டிருந்தான்.

"அனு! ஒடி வந்து வேனிலை ஏறும் போதே என்னவோ என்ரை அடையாள அட்டை எங்கேயோ விழுந்து போச்சு!"

"அது தொலைஞ்சால் திருப்பி எடுக்கலாம். உங்களுக்கு ஒண்டும் இல்லாம வந்ததே பெரிய விசயம். அதுக்கே நாங்கள் கடவுளுக்கு நன்றி சொல்ல வேணும்!" என்றாள் அனு.

"ஐ.சி. இல்லாம வரேக்கை பிரச்சனை ஒண்டுமில்லையா?" என தனது சந்தேகத்தை சீலன் வெளியிட்டான்.

"அடிக்கடி கொழும்பு போயிட்டு எங் கடை வேனிலை வாறதாலை சென்ரியிலை நிக்கிற பொலிஸ்காரருக்கு என்னைத் தெரியும். அதனாலை ஐ.சி. ஒரு இடமும் கேக்கல்லை!"

"இங்கை சந்திக்கு சந்தி நின்று ஐ.சி. பாக்கிறாங்கள். ஐ.சி. இல்லாமத் திரியிறது சரியான கஷ்டம். நாளைக்கே போய் பொலிஸிலை என்றி போட்டுட்டு. ஐ.சி. எடுக்கிற அலுவலை முதலிலை பாருங்க!" என சீலன் சொன்னான்.

அடையாள அட்டை இன்றி இலங்கையின் எந்தப்பாகத்துக்கு செல்வதும் ஆபத்தான விடயமாக இன்றைய நிலை விளங்குகின்றது.

மனிதனின் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளாக அடையாள அட்டை மாறிவிட்டது.

"அனு! நீ போய் ஏதாவது குடிக்கக் கொண்டுவா!" என சீலன் சொன்னபோது அழைப்பு மணி அழைக்கிறது...

இரவு எட்டு மணியை சுவர்க்கடிகார மணிக் கம்பி நெருங்கிக் கொண்டிருக்கிறது.

அனு கதவைத் திறந்தாள்.

புதியவர்கள் மூவர் நின்று கொண்டிருந்தனர்.

"இங்கை தினேஷ் யார்?" என வந்தவர்களில் ஒருத்தன் கொச்சைத் தமிழில் கேட்டான்.

"நான்தான்" என்றவாறு தினேஷ் முன்னுக்கு வர; அனுவும் சீலனும் கலவரத்துடன் தினேஷைப் பார்த்தனர்.

"நீங்க எங்களோட பொலிஸ் கெட்குவாட்டஸுக்கு வரவேணும்!" சாதாரண உடையில் நின்ற புலனாய்வுத்துறையினர் சொன்னார்கள்.

"ஏன்? என்ன விசயம்?" என சீலன் காரணத்தைக் கேட்டான்.

"கொழும்புக் குண்டு வெடிப்பு நடந்த இடத்திலை இவருடைய ஐ.சி. கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவருக்கும் அந்தக் குண்டு வெடிப்புக்கும் சம்பந்தம் இருக்குது என்ற சந்தேகத்தின் பெயரில் இவரைக் கைது செய்கிறோம்!" என நிலைமையை விளக்கினார்கள்.

தினேஷ் அவர்களின் பின்னால் எந்தவித பேச்சுமின்றி நடந்தான்.

"அவருக்கும் இதுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. அவர் கடைக்குச் சாமான் எடுக்கத்தான் போனவர். அவரை விட்டுடுங்க" அனு கெஞ்சினாள்.

அவள் கெஞ்சலுக்குப் பயன்கிட்டவில்லை.

வெடிப்பு கொழும்பில் மட்டுமல்ல, அவர்களது இன்பமான வாழ்க்கையிலும் ஏற்பட்டது. ■


படிப்பகம்

www.padippakam.com

# வளைந்த கோல்



அரசவை முன்னால்
அபலை ஒருத்தி!

கொற்றவன் விழிகள்
அவளைக் கொத்தின.

கற்றவர் என்போரும்
குற்றம் சாட்டினர்!

உற்றவர் என்று
யாருமே இல்லை!

தனிமரமாய்
சபை நடுவே நின்றாள்!

கனிமரம் என்று
அவளிடம்
இரவினில் வந்தவர்
பலபேர்!

அவர்களில் பலபேர்
அச் சபையிலும்
இருந்தனர்!

யாருமறியாமல் வந்து
அவளையறிந்தவர்களின்
பேரும் புகழும்
அவளுக்கும் தெரியும்!
மீசை முறுக்கெல்லாம்
வெளி வேஷம்!
ஆசை முறுக்கேறினால்
தெரியும் உள் வீரம்!

அவள் அறிவாள்
இவர் பலர் வீரம்!
போர் தொடுக்க தெரியாமல்
புறமுதுகிட்டோர்
'இராட்சசி' என்றனர்!

போர் தொடுக்க முடிந்தோர்
காரியம் முடிந்ததும்
'இராசாத்தி' என்றனர்!

உறைவிட்டு வாளை
உருவ முடியாமல்
அறைவிட்டு ஓடியவர்களும்
இங்கே உள்ளனர்!

ஆணவமும்-செருக்கும்
போலி மிடுக்கும்
அவளின் கட்டிலில்
வாலைச் சுருட்டித்தான்
அடங்கிக் கிடந்தன!

இருளோடு இருளாய்
அவளிடம் வந்துபோனோர்
அருளே இல்லாத
பார்வை பார்த்தனர்.

மன்னன் மட்டும்
என்ன
மாசற்ற மேனியனோ?

"வா!" என்றான்
"வந்து சாய்" என்றான்.
"சிந்து பாடு" என்றான்
"நெஞ்சில் பந்து தான்" என்றான்.

"அந்தப்புரத்தில்
எனக்கு சொந்தமாய் இரு"
என்றான்.

"மொத்த குத்தகைக்கு
கேட்கிறீர்கள்.
அன்றாட வாடகையே
எனக்குப் போதும்!"
என்றாள்.

"இந்த கண்ணாடி மேனியில்
முகம் பார்க்கலாம்!
பல முகம் பார்த்தால்
கண்ணாடி உடைந்திடாதோ?"
என்றான் மன்னன்.

"இது பொதுநலக்
கண்ணாடி!
தினம் ஒருவருக்கு
முகம் காட்டும்!"
என்றாள்.

"போ, ஆனால்
வந்து விழுவாய்!

நானாகப் பெறுவதில்
சுகமில்லை எனக்கு!
நீயாக வரவேண்டும்
சுகம் வரும் எனக்கு!"

மன்னன் விட்ட
சவாலின் அர்த்தம்
இன்று தெரிந்தது!

"அரசனைக் கொல்ல
சதி செய்த
தளபதியுடன் கூட்டு!

மேனியை விற்றவளுக்கு
பூமியை ஆள ஆசை!

எதிரி நாட்டுடனும்
இரகசிய ஒப்பந்தம்!

கொடுப்பது சுகம்
கறப்பது இரகசியம்!

நம் நாட்டு தகவல்களை
எதிரிநாட்டு மன்னனின்
படுக்கையறையில்
பாடமாகச் சொல்கிறாள்!"

அடுக்கடுக்கான
குற்றச்சாட்டுக்கள்!

அத்தனையும்
கடைந்தெடுத்த பொய்கள்!

"என்ன சொல்கிறாய்
ஒப்புக் கொள்கிறாயா?"
மன்னனுக்கு அவசரம்!

"அந்தரங்க கட்டிலில் மட்டுமல்ல
அரசவைக் கட்டிலிலும்
அவசரம்தான் உமக்கு"
என்று சொல்ல நினைத்தாள்,
சொல்லவில்லை.

"ஒப்புக் கொள்ள
மறுத்ததால்தானே
இங்கு நிற்கிறேன்!"
என்றாள் இடக்காக!

"புரியவில்லை"
என்றார் கிழ அமைச்சர்.

"உமக்கு எதுதான்
புரிந்திருக்கிறது?"
என்றாள் விஷமமாக.
அமைச்சர் அடங்கினார்.

"நாவை அடக்கு"
என்றான்
சபையிலிருந்த கவிஞன்.

"நாவை அடக்கினால்
உமக்குப் பிடிக்காதே!"
என்றாள் அர்த்தத்தோடு.
கவிஞன் மடங்கினான்.

"தளபதியுடன்
உனக்கென்ன உறவு?"
மன்னன் கேட்டான்.

"வாடிக்கையாளர்,
வருவார்-போவார்!
பெறுவார்-தருவார்!"

"வேடிக்கையான உறவு"
என்றார் ஒருத்தர்.

"வேடிக்கையான
வாடிக்கையாளர் பலர்
இங்கும் உள்ளனர்
அவர்களைவிட அவர்
வீரியமுள்ளவர்தான்!"
கேட்டவன் வாயடைத்தான்.

"உனக்குத் திமிர்
அதிகம்!"

"ஆமாம்! தங்கள்
திமிரை பலர்
இறக்கி வைப்பது
என்மேல்தானே!"

பட்டுத் துணியால்
மன்னன் முகத்தை
துடைத்துக் கொண்டான்.

"மரியாதை இன்றி
பேசுகிறாய்?"

"'டேய்' என்றழைத்தாலும்
இனிக்குமே உமக்கு!
நீரோ கூறுகிறீர் வழக்கு!"

ஏன் வாயைக் கொடுத்தோம்
என வருந்தினான்
உப தளபதி.

மன்னன் பொறுமை
இழந்தான்.
விசாரித்தால் அவன்
விவகாரமும்
வெளிச்சமாகிவிடுமே!

"வாயை மூடு!"
கத்தினான்.

"வாயை மூடினால்
பிடிக்காதே உங்களுக்கு!"
மன்னன் குறுகிப் போனான்.

"யாரங்கே- இந்த
தேசத்துரோகியை
தனியறைச் சிறையில்
போட்டுப் பூட்டுங்கள்!
ஆறு வருடக்
கடுங்காவல் தண்டனை!"

## இலக்கிய நயம்

தருவது ரசிகன்



"வளைந்தது செங்கோல்
இனி விளைவது
விபரீதம்தான்!

"உன் புகழ் வீழும்
உன் பெயர் வீழும்
கடுமையான சொல்லும்
முறை கடந்த தண்டனையும்
உன் வெற்றிகளை
அரமாக நின்று தேய்க்கும்!
வீழ்வாய் நீ ஒருநாள்
வேரற்ற மரமாக!"

அவள் உரைத்தது சாபமல்ல
அரசுக்குரிய அறம்!
திருவள்ளுவரும் கூறுகிறார் பாரீர்;
"கடு மொழியும் கையிகந்த தண்டமும்-
வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்."

குறள்-567, அதிகாரம்-57.

## ஸ்போர்ட்ஸ்

# 22 கிரிக்கெட் வீரர்கள்

கார் விபத்தில் மரணமடைந்த வேல்ஸ் இளவரசி டயானாவின் நினைவாக இங்கிலாந்தில் நடத்தப்படவுள்ள கிரிக்கெட் போட்டிக்காக உலகின் மிகச் சிறந்த 22 கிரிக்கெட் வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்த 22 வீரர்களை இரண்டாகப் பிரித்து எம்.சி.சி., ரெஸ்ட் ஒஃப் த வேர்ல்ட் என இரு அணிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 22 பேரில் இலங்கை வீரர்களான அரவிந்த டி சில்வா, சனத் ஜெயசூரிய ஆகியோரும் இந்திய வீரர்களான சச்சின் டெண்டுல்கர், முகமட் அஸாருதீன், சௌரவ் கங்குலி, ஜவகர் ஸ்ரீநாத், அனில் கும்ப்ளே ஆகியோரும், பாகிஸ்தான் வீரர்களான அமீர் சொஹைல், சயிட் அன்வர், வாஸிம் அக்ரம், முஷ்டாக் அகமட் ஆகியோரும் அடங்குவர். இரு அணிகள் பற்றிய விபரங்கள் வருமாறு:

### எம்.சி.சி:

மைக் ஆதர்ட்டன் (இங்கிலாந்து), அமீர் சொஹைல் (பாகிஸ்தான்), அலன் டொனால்ட், பிரையன் மக்மிலன் (தென்னாபிரிக்கா), இயன் ஹீலி, ஷேன் வோர்ண், கிளென் மக்கிராத் (அவுஸ்திரேலியா), அஸாருதீன், கங்குலி, ஸ்ரீநாத், கும்ப்ளே (இந்தியா)

### ரெஸ்ட் ஒஃப் த வேர்ல்ட்:

டெண்டுல்கர் (இந்தியா), கிரஹாம் இக் (இங்கிலாந்து), டொம் மூடி (அவுஸ்திரேலியா) அன்டி பிளவர் (ஸிம்பாப்வே), கிறிஸ் கெய்ன்ஸ் (நியூஸிலாந்து), இயன் பிஷப் (மேற்கிந்தியத்தீவு) அரவிந்த டி சில்வா, சனத் ஜயசூரிய (இலங்கை), சயிட் அன்வர், வாசிம் அக்ரம், முஷ்டாக் அகமட் (பாகிஸ்தான்).

## சுற்றுப் பயணம்


ஸ்டுவர்ட்

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இம் மாதம் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் செய்து டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இப்போட்டிக்கான இங்கிலாந்து அணியின் கேப்டனாக அலெக் ஸ்டுவர்ட் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். மேற்கிந்தியத்தீவுக்கு மைக் ஆதர்ட்டன் தலைமையில் சென்ற இங்கிலாந்து அணி டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் தொடரை இழந்தது.

இதைத் தொடர்ந்து கேப்டன் பதவியில் இருந்து மைக் ஆதர்ட்டன் விலகி இருந்தார். எனவே அலெக் ஸ்டுவர்ட் புதிய கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## பொன்விழாப் போட்டிகள்

இலங்கையின் சுதந்திரப் பொன்விழா ஆண்டை முன்னிட்டு நடைபெறவிருக்கும் 3 நாடுகள் கிரிக்கெட் போட்டியில் இலங்கையுடன் இந்தியா, நியூஸிலாந்து அணிகள் பங்கேற்கின்றன.

இப்போட்டிகள் ஜூன் 19 முதல் ஜூலை 7ம் திகதி வரை நடைபெறுகின்றன. இப்போட்டிக்கு முன்பாக இம்மாதம் 15ம் திகதி இலங்கை வரும் நியூஸிலாந்து அணியுடன் இலங்கை அணி 3 டெஸ்ட் போட்டிகள் விளையாடுகிறது.

இலங்கை-நியூஸிலாந்து அணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி மே 27ம் திகதி பிரேமதாசா விளையாட்டரங்கிலும், 2வது டெஸ்ட் போட்டி ஜூன் 3ம் திகதி காலியிலும், 3வது டெஸ்ட் போட்டி ஜூன் 10ம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

இலங்கை, இந்தியா, நியூஸிலாந்து ஆகிய 3 நாடுகள் கலந்து கொள்ளும் சுதந்திரக் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டிகள் பற்றிய விபரங்கள் இதோ:

ஜூன் 19 இலங்கை எதிர் இந்தியா-பிரேமதாசா விளையாட்டரங்கு (பகலிரவு)
ஜூன் 21 இலங்கை எதிர் நியூஸிலாந்து-பிரேமதாசா விளையாட்டரங்கு (பகலிரவு)
ஜூன் 23 இலங்கை எதிர் நியூஸிலாந்து-பிரேமதாசா விளையாட்டரங்கு (பகலிரவு)
ஜூன் 25 இலங்கை எதிர் இந்தியா-காலி (பகல்)
ஜூன் 27 இலங்கை எதிர் நியூஸிலாந்து-காலி (பகல்)
ஜூன் 29 இந்தியா எதிர் நியூஸிலாந்து-காலி (பகல்)
ஜூலை 01 இலங்கை எதிர் இந்தியா-எஸ்.எஸ்.சி. (பகல்)
ஜூலை 03 இந்தியா எதிர் நியூஸிலாந்து-எஸ்.எஸ்.சி. (பகல்)
ஜூலை 05 இலங்கை எதிர் நியூஸிலாந்து-எஸ்.எஸ்.சி. (பகல்)
ஜூலை 07 இறுதிப் போட்டி-பிரேமதாசா விளையாட்டரங்கு (பகலிரவு)

## சிந்தியா பதில்கள்

* வேலை நிறுத்தம் செய்பவர்களை "தேசத்துரோகிகள்" என்று கூறியுள்ளாரே ஜனாதிபதி?

ஆர். ரவி, கொழும்பு-12.

அதில் ஒரு பொருத்தம் என்ன தெரியுமா? சிக்காக்கோவில் தங்கள் உரிமைக்காக வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களை, அமெரிக்க ஆளும் வர்க்கம் நாட்டுக்கு உதவாதவர்கள் என்று கருதித்தான் சுட்டுத் தள்ளியது. அந்தச் சிவப்பு நாளை நினைவு கூரும் தினத்தில் நின்றுதான் ஜனாதிபதி உரையாற்றியிருக்கிறார். செஞ்சட்டை வீரர்களும் அதனைக் கேட்டபடி மேடையில் அமர்ந்திருந்தனர்.

* சிந்தியா! தபால் தந்தி ஊழியர் பிரச்சனையில் நியாயம் யார் பக்கம்?

மா. அன்புராஜ், கல்முனை.

பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா செய்த ஒப்பந்தத்தை மீறியது அரசாங்கம்! ஆரம்பத்திலேயே நிதானமாக கையாளாமல் பொலிசை விட்டு பொதிகளைத் தூக்கி மிரட்டி பிரச்சனையை ஊதிப் பெரிதாக்கியதும் அரசாங்கம்தான்! தமது வெகுஜன தொடர்பு சாதனங்கள் ஊடாக 'வேலை நிறுத்தம் முடிந்தது' என்று பல முறை மக்களுக்கே தப்பான தகவல் தந்ததும் அரசாங்கம்தான்! சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என்ற அணுகுமுறைதான் தப்புக்கு மேல் தப்பாகிக் கொண்டிருக்கிறது!

* சச்சின் டெண்டுல்கரின் தற்போதைய ஆட்டம் பற்றி?

மா. இந்திரா, கொழும்பு-09.

விசுவரூபம்!

* இந்தியாவின் புதிய ஆட்சி எப்படிப் போகிறது?

சி.என். இதயராசா, வவுனியா.

'ஜெய' பேரிகையின் இரைச்சல் தாங்காமல், இந்தியப் பிரதமர் வாஜ்பேயி காதைப் பொத்திக்கொண்டிருக்கிறார்!

* சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமர் பதவியை யாருக்குக் கொடுப்பார்?

இ. ரகுமான்கான், மட்டக்களப்பு.

அத்தனை சுலபமாக ஆசனத்தை விட்டுக் கொடுப்பார் என்று நான் நினைக்கவில்லை! வயதால் தளர்ந்தாலும், நாற்காலியை மட்டும் கெட்டியாகத்தான் பிடித்திருக்கிறார்!

* வட அயர்லாந்து ஒப்பந்தத்தை ஜனாதிபதி புகழ்ந்துள்ளாரே?

மு. விஸ்வலிங்கம், திருமலை.

இன்றைய ஆட்சியில் செயற்கரிய செயல்களுக்கு பஞ்சம் என்றாலும், சொக்கவைக்கும் சொற்களுக்குப் பஞ்சம் இல்லை என்று உமக்குத் தெரியாதா?!

* 'அல்வா' கொடுப்பதற்கு ஓர் உதாரணம் கூறுங்கள்?

கா. ரகுபதி, கொழும்பு-06.

"விசாரணைக் கமிஷன் வைக்கப்படும்!" என்றெல்லாம் தமிழ்க் கட்சிகளின் வாயை சாத்திவிட்டு, 'யாழ் குடாநாட்டில் கைதானோரில் 16 பேர் மட்டுமே பலியாகினார்கள்' என்று முன்னாள் படை அதிகாரிகள் கையளித்த அறிக்கையை புன்னகையுடன் அம்மையார் வாங்கிய புகைப்படம் கண்டீர்களா? அந்தப் புன்னகையில் 'அல்வா' கொடுத்த பெருமிதமும் அடக்கம். ஈ.பி.டி.பி.க்கும் பெப்பே. கூட்டணிக்கும் பெப்பே. மொத்தத்தில் காணாமல்போனோரின் உறவினர்களுக்கு மொட்டையோ மொட்டை!

* மரியாதை கொடுத்து மரியாதை வாங்க சிலருக்குத் தெரியவில்லையே?

கே. பூபாலசிங்கம், மட்டக்களப்பு.

லேனா தமிழ்வாணன் கூறிய ஒரு உதாரணத்தை உருவித் தருகிறேன்:

முதலாமவர்: நீங்க செய்தது மறக்க முடியாத உதவி.

இரண்டாமவர்: என்ன பெரிய உதவி போங்க. இதெல்லாம் சாதாரண விஷயம்.

அதேமுதல் நபர்: நீங்க செய்தது சாதாரண உதவிதானுங்களே!

அதே இரண்டாம் நபர்: யோவ்! இதுவா சாதாரண உதவி? காரியம் முடிஞ்சதும் நன்றி கெட்டுப்போய் பேசுறியே இப்படி?

எப்படிக்கொடுத்தால் எப்படி வருகிறது பார்த்தீர்களா?


'ஜானகிராமன்' படத்தில் சரத்குமார்-நக்மா

* தன் மகள் ப்ரீதா விஜயகுமார் அதிக படங்களில் வாய்ப்புப் பெறும் விதமாக மஞ்சுளா என்னதான் சொல்லிக் கொடுத்திருப்பார்?

எஸ். மணிவண்ணன், ஏறாவூர்.

அது தொழில் இரகசியம்!

* முதல் முத்தம், கடைசி முத்தம்-என்ன வித்தியாசம்?

என். தனேந்திரன், கந்தப்பளை.

முன்னது கருவறையால் வந்ததும் கொடுப்பது. பின்னது கல்லறைக்குச் செல்கையில் கொடுப்பது.

என்ன தனேந்திரன்! முன்னது இனிக்கும், பின்னது வலிக்கும் எனப் பதில் வரும் என்று எதிர்பார்த்தீர்களாக்கும்!

* சிந்தியா! 'ஜீன்ஸ்' பார்த்தீரா?

சி. ரம்யா, கொழும்பு-10.

தினம் எத்தனையோ ஜீன்ஸ் பார்க்கிறோமே! நீங்கள் எந்த ஜீன்ஸ்ஸை... ஓ...அதுவா.... வீடியோ கொப்பியையே கண்ணில் காணமுடியவில்லையே!

* "நீர் ஒரு ஆம்பிளையா?" என்று கேட்கிறாள் என் காதலி? என்ன செய்யலாம்?

கே. பாலேந்திரன், மொரட்டுவ.

சீதனம் வாங்காமல் கல்யாணம் செய்யலாம்!

* தமிழ் நாட்டிலும் குண்டுகள் வெடிக்கிறதே. அங்கும் கடும் சட்டங்கள் தீட்டப்படும் போலுள்ளதே?

எல். உஷ்மான், மருதானை.

தமிழக பிரபல சஞ்சிகை ஒன்று தீட்டியுள்ள ஆசிரியர் தலையங்கம் இது: "உலகில் எந்தத் தீவிரவாதத்தையும் கடுமையான சட்டங்களை துணையாகக் கொண்டு ஒடுக்க முடிந்ததில்லை என்பதை வரலாறு பல முறை எடுத்துக் காட்டியிருக்கிறது!"

* நட்பை பாதுகாப்பது எப்படி?

எம்.ஏ.கபூர், அக்கரைப்பற்று.

இப்படிப் புரிந்துணர்வு இருந்தால்கூட பாதுகாக்கலாம். எப்படி?

இரண்டு நண்பர்கள் பேசிக் கொண்டிருந்தனர். முதல் நண்பன் கேட்டான்: "நாங்கள் இரண்டு பேரும் கடற்கரைக்குப் போகிறோம். அங்கே மணலில் ஒரு தங்க மோதிரம் கிடக்குது. அதை நான் பார்க்கிறேன். அந்த மோதிரம் எமது நட்பை பிரித்து விடும் என்று நினைக்கிறாயா?"

மற்ற நண்பன்: "பிரிக்கிற அளவுக்கு நீ நடக்கமாட்டாய்!" என்றான்.

"எப்படி?" என்றான் முதல் நண்பன்.

"உன் கண்ணிலே அது பட்டால், அதன் பின்னர் என்னிடம் வாயைத் திறந்து சொல்லவே மாட்டாயே! பின்னர் எப்படி நமக்குள் சண்டை வரும்?"


'ரட்சகன்' படத்தில் நாகார்ஜுன்-சுஷ்மிதாசென்


'ஜீன்ஸ்' படத்தில் பிரசாந்த்-ஐஸ்வர்யா ராய்

* தமிழ் சினிமாவின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

இ. மகேஸ்வரன், கற்பிட்டி.

'காதல் கோட்டை', 'காதலுக்கு மரியாதை' போன்ற படங்களில் கட்டிக்கொள்ளாமலேயே, தொட்டுக் கொள்ளாமலேயே, முட்டிக் கொள்ளாமலேயே காதல் வளர்ந்தது. இரசிகர்களிடம் மகா வரவேற்புக் கிடைத்தது! இத்தகைய நிகழ்காலம் எதிர்காலம் பிரகாசமாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கையைத் தருகிறது.


படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 8

சிப்து நாட்டின் ஆளுநரான யோசேப்பு எவ்வளவோ முயன்றும் அவருடைய உணர்ச்சிகளை அடக்க முடியவில்லை. அவருடைய சகோதரர்களுள் ஒருவரான யூதா அவர்களுடைய தந்தையாரான யாக்கோபு உயிருடன் இருக்கிறார் என்பதை தனது உரையாடல்களின்போது வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து தனது சகோதரர்களிடம் தன்னை யார் என்று வெளிப்படுத்த முடியாமல் இருப்பது கடினம் என்பதை உணர்ந்தார். கண்களில் கண்ணீர் வழிவதையும் கட்டுப்படுத்த அவரால் முடியவில்லை. 'ஓ'வென்று வாய்விட்டு அழுதால்தான் தனது நெஞ்சு துயரம் தாங்காமல் வெடிப்பதைத் தவிர்க்கலாம் என்பதை உணர்ந்தார்.

சகோதரர்களுடன் அந்த மண்டபத்தில் நின்று கொண்டிருந்த எகிப்து அரச காவலர்களின் தலைவன் பெயரை உச்சரித்தார். இடி ஓசை போலெழுந்த அந்த ஓசை கேட்டு அனைவரும் அதிர்ந்தனர். "கானான் தேசத்திலிருந்து வந்தவர்களை விட்டுவிட்டு நீங்கள் எல்லோரும் வெளியேறுங்கள்!" என்று பலத்த சப்தத்துடன் கட்டளையிட்டார். அவர்



## இராஜகுமாரன்

கள் விரைவாக வெளியேறியதும் யோசேப்பு விம்மி விம்மி அழலானார். அங்கு நின்ற சகோதரர்கள் எதுவுமே புரியாமல் திகைத்து நின்றனர். அவர்கள் பக்கம் திரும்பிய யோசேப்பு தனது தம்பியாகிய பென்யமினின் வலது தோளைப் பிடித்து அவன் முன்னே முட்டுக்காலில் அமர்ந்தார். "என் அருமைத் தம்பி! நான் யார் என்று தெரியுமா? நான்தான் உன் அண்ணன் யோசேப்பு. நமது தந்தையாரான யாக்கோபு எனும் இஸ்ரயேலுக்கும் தாயார் ராகேலுக்கும் நாம் இருவரும் பிறந்தவர்கள்..." இவ்வாறு கூறிய வண்ணம் பென்யமினை இறுக அணைத்துக் கொண்டு கோவெனக் கேவிக் கேவி அழுதார்.

இக்காட்சியும் ஏனைய சகோதரர்களைச் சிலைகளாக ஆக்கியது. அவர்கள் பக்கம் திரும்பிய யோசேப்பு, தனது சகோதரர்களின் பெயர்களை வயது வரிசைப்படி அழைத்தார். விபரிக்க முடியாத உணர்வுகளால் ஆட்கொள்ளப்பட்ட அவர்கள் ஒவ்வொருவராக யோசேப்பின் முன் சென்று முட்டுக்காலிட்டிருந்தனர். ஏற்கனவே யோசேப்புக்கு அவர்கள் இழைத்த கொடுமைகளை எண்ணி குற்ற உணர்வால் கூனிக் குறுகி நின்றனர். 'சிறுவனாக இருந்தபோது எமதுசகோதரனுக்கு விளைவித்த கொடுமைகளுக்கு இன்று பழி வாங்கப்படப்போகிறோம்,' என்று அவர்கள் மனம் சுட்டிக்காட்டியது.

### ஆண்டவரின் ஆணை

யோசேப்பு அவர் சகோதரர் ஒவ்வொருவரிடமும் வந்தார். அவர்கள் தோள்களைத் தொட்டுத் தூக்கி நிறுத்தி ஒவ்வொருவரையும் கட்டி அணைத்து அழுதார். அவர்களும் அழுதனர். அப்போது யோசேப்பு,

"சகோதரர்களே! எகிப்து நோக்கி வந்து கொண்டிருந்த வர்த்தகர்களுடன் என்னை அனுப்பி வைத்தது கொடுமையான செயல் என்று எவரும் கருத வேண்டாம். அன்று அவ்வாறு என்னை நீங்கள் அனுப்பியதற்காக மகிழ்ச்சி அடையுங்கள். அது ஆண்டவரின் ஆணை.எகிப்துக்கு என்னை அழைத்து என் மூலமாக எண்ணற்ற மக்களின் பசிப்பிணியைத் தீர்க்க வேண்டும் என்று ஆண்டவர் கருதியமையினால்தான் உங்கள் மூலமாக நான் இங்கு அனுப்பட்டேன். இன்று இந்த நாட்டின் மிக உயர்ந்த பதவியில் அமர்ந்துள்ளேன். ஆகவே அன்றைய செயலை நினைத்து நீங்கள் அதற்காகத் துக்கப்பட வேண்டியதில்லை. சந்தோஷப்படுங்கள்!"

இவ்வாறு யோசேப்பு கூறியதும் சகோதரர்கள் அனைவரும் கவலை மறந்து ஆனந்தக் கண்ணீர்விட்டனர். யோசேப்பும் சகோதரர்களும் மிக மகிழ்ச்சியாக அன்றையப் பொழுதைக் கழித்தனர். யோசேப்பு தனது தந்தையாரின் நலன்களை விசாரித்தறிந்தார். தனக்குத் தெரிந்த உறவினர்களைப் பற்றியெல்லாம் கேட்டறிந்து கொண்டார்.

## மாண்ட மகன் மீண்ட கதை

தனது மகன் யோசேப்பு உயிருடன் இருப்பதை தந்தையாரான யாக்கோபு அறிந்தால் எவ்வளவு ஆனந்தமடைவார் என்று அவர்கள் கூறிக் கொண்டே இருந்தனர். தங்களுடன் கானான்தேசம் வந்து தந்தையார் யாக்கோபைப் பார்த்துவிட்டு வரலாம் எனவும் யோசேப்பிடம் கூறினர். உடனடியாகவே தன் தந்தையைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அவரிடம் எழவே செய்தது. ஆனால் அவருக்கு ஆண்டவரால் கொடுக்கப்பட்ட கட்டளையை விட்டுவிட்டு எங்குமே செல்ல முடியாதிருந்தது. இதனால் மன்னர் பார்வோனிடம்- தன் தந்தையார், சகோதரர்கள் ஆகியோரின் நிலையை எடுத்துக் கூறி அவர்கள் அனைவரையும் எகிப்து நாட்டுக்கு அழைத்து வர ஏற்பாடு செய்யலாம் என நினைத்தார்.

மன்னர் பார்வோனிடம் இதனை யோசேப்பு கூறியதும், மகிழ்ச்சியடைந்த அவரும் அவ்வாறே செய்யுமாறு அனுமதியளித்தார்.

இதன்படி தன் தந்தையாரையும் ஏனையோரையும் அழைத்துக்கொண்டு, கால்நடைகள் மற்றுமுண்டான பொருட்களையும் எடுத்துக்கொண்டு வருமாறு யோசேப்பு தன் சகோதரர்களிடம் கூறினார். இதற்குத் தேவையான பொருட்களையும், பொதிகளைச் சுமந்து வரக் கழுதைகளையும் யோசேப்பு தனது சகோதரர்களுக்கு அளித்தார். சகோதரர்களுக்குப் புத்தாடைகளும் பணமும் கொடுத்து வழியனுப்பி வைத்தார்.

கானான் தேசத்தில் பெயேர்சேபாவில் தங்கியிருந்த யாக்கோபு எனும் இஸ்ரயேல் ஆகிய தங்கள் தந்தையிடம் ஓடிச்சென்ற புதல்வர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். தனது பிள்ளைகள் இத்தனை மகிழ்ச்சியாக காணப்படுவதற்கான காரணத்தை அவரால் உணர முடியவில்லை. யாக்கோபுவின் கண்பார்வை அப்போது சற்றுக்குறைவாகவே இருந்தது. தனது பிள்ளைகள் திரும்பி வந்து விட்டார்களே என்ற ஆனந்தம் அவருடைய முகத்தில் அரும்பியது. அவருடைய இருகைகளும் விரிந்தன. எதிர்பார்த்தாற்போல் அக்கைகளுக்குள் அவர் தம் இளைய மகனான பென்யமின் போய்ப் புகுந்து கொண்டான். அவனை இறுக அணைத்துக்கொண்டு கண்ணீர் சொரிந்தார். அவருடைய கண்ணீரைத் தன் கைவிரல்களால் துடைத்துவிட்ட பென்யமின், "அப்பா! உங்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்று கூறப்போகிறேன். நீங்கள் என் அண்ணன் யோசேப்பு சின்ன வயதிலேயே இறந்துபோய் விட்டார் என்று சொல்லிச் சொல்லி அழுது கொண்டிருப்பீர்களே! அப்பா! யோசேப்பு அண்ணா சாகவேயில்லை. உயிரோடுதான் இருக்கிறார்!" என்றான்.

### தந்தையின் மகிழ்ச்சி

இதைக் கேட்ட இஸ்ரயேலின் முகம் மேலும் வாட்டமடைந்தது. அவர் கண்கள் கலங்கின. பின்னர் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "ஏன் மகனே அவன் பெயரை நினைவூட்டி என்னைத் துயரப்படவைக்கிறாய்? அவனை மறக்க முயன்றும் முடியாமல் தவிக்கிறேன். இனிமேல் அவன் கதையை என்னிடம் எப்போதும் கூறவேண்டாம்!" என்று கூறி தன் கண்களைத் துடைத்துக்கொண்டார்.

அப்பொழுது ரூபன் தன் தந்தையின் தாள் தொட்டு, "அப்பா! தம்பி பென்யமின் சொல்வது பொய்யல்ல; நாங்கள் எல்லோரும் எமது சகோதரன் யோசேப்பைக் கண்ணாரக் கண்டோம். அவர் உயிருடன்தான் இருக்கிறார். எகிப்து நாட்டின் பார்வோன் மன்னனின் அன்புக்கும் மரியாதைக்கும் உரியவராக- அந்த நாட்டின் சர்வ வல்லமை பொருந்திய ஆளுநராகப் பதவி வகிக்கிறார். தங்களையும் நம் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரையும் ஆடுமாடுகளையும் ஏனைய பண்டங்களையும் எடுத்துக்கொண்டு உடனடியாகப் புறப்பட்டு வருமாறு கூறி அனுப்பியிருக்கிறார். இதோ ஏராளமான பொருட்களையும் கழுதைகளையும் வண்டிகளையும் அனுப்பியிருக்கிறார்!" என்று தெரிவித்தார். ஏனைய சகோதரர்களும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதையாகக் கூறியதும் யாக்கோபு உண்மையை உணர்ந்தார். அவர் உள்ளம் குதுகலத்தால் கூத்தாடியது.

"என் மகன் உயிரோடு இருக்கிறான். ஆண்டவர் என் மகனை மிக மிக உயர்ந்த நிலையில் வைத்திருக்கிறார். அதுவே எனக் குப் பெரும் நிம்மதியைத் தந்துவிட்டது. நான் என் மகனைக் கண்ணால் கண்டால் போதும், அவனை இக்கண்கள் கண்டபின் தான் மூடும்...!"

### எகிப்து நோக்கிப் பயணம்

இவ்வாறு யாக்கோபு கூறி எகிப்து, நோக்கிப் புறப்பட துரிதமான ஆயத்தங்களைச் செய்யுமாறு தன் மக்களைக் கேட்டுக் கொண்டார். இஸ்ரயேல், அவர் தம் மக்கள், அவர்களின் மனைவி, பிள்ளைகள் ஆகியோருடன் அவரவர்களுக்குச் சொந்தமான கால்நடைகள் மற்றும் பணியாட்கள், தட்டு முட்டுச் சாமான்கள் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு எகிப்து நோக்கிப் புறப்பட்டனர்.

எகிப்தில் கோசேன் என்ற பகுதியை யாக்கோபும் அவர் வழி மரபினரும் வந்தடைந்ததும், யூதாவை யோசேப்பிடம் யாக்கோபு அனுப்பி வைத்தார். அவர் போய் தந்தையாரும் ஏனையோரும் வந்துவிட்டனர் என்று கூறியதும் உடனடியாகத் தனது இரதத்தில் ஏறி கோசேனை நோக்கிப் புறப்பட்டார் யோசேப்பு.

'இறந்து போய் விட்டான்' என்று பல ஆண்டுகள் நம்பியிருந்த தன் மகன் உயிருடன் தான்- தன் முன்னே நிற்கிறான் என்றால் அந்தத் தந்தை உள்ளம் எப்படி இருக்கும்? யாக்கோபு தள்ளாடியபடி நடந்து வந்த அதேவேளை தனது இரதத்திலிருந்து கீழே குதித்த தனயன் யோசேப்பு ஓடோடிச்சென்று தன் தந்தை முன் மண்டியிட்டு அழுதார். அவரைத் தொட்டுத் தூக்கிய தந்தையார் தன் மகனை ஆரத்தழுவி அரவணைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

மன்னர் பார்வோன், யோசேப்பின் தந்தையாரும் குடும்பத்தவர்களும் வந்து சேர்ந்து விட்டதை அறிந்து மகிழ்ச்சியடைந்தார். யோசேப்பு தன் சகோதரர்கள் ஐவரை மன்னரிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார். அவர்கள் மந்தை மேய்ப்பதில் தேர்ச்சி பெற்றிருந்தமையினால் மன்னருக்குரிய கால்நடைகளையும் மேய்க்கும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தார். எகிப்தில் மிகச் செழிப்பான இராம்சேசு, என்ற இடத்தில் யாக்கோபும் குடும்பத்தவரும் தங்கி இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் செய்து கொடுக்கப்பட்டன. யோசேப்பும் தனது உறவினர்களின் தேவைகளைக் கண்டறிந்து அதற்கேற்ப வசதிகள் யாவற்றையும் செய்து கொடுத்தார்.

யாக்கோபுவுக்கு வயதானமையினால் கண்பார்வை குன்றி விட்டது. யோசேப்பு தன் இரு மகன்களான மனாசே மற்றும் எப்ராயிம் ஆகிய இருவரையும் தன் தந்தை இஸ்ரயேலிடம் அழைத்துச் சென்றார். தனது மூத்த மகனான மனாசேயை இஸ்ரயேலின் வலது புறமும் இளைய மகனான எப்ராயிமை அவருடைய இடது புறமும் அமரச் செய்தார். அவர்களை ஆசீர்வதிக்கும்படி தந்தையை யோசேப்பு கேட்டுக்கொண்டார். யாக்கோபு தனது வலது கையை இடது புறமிருந்து எப்ராயிமின் தலைமீதும் தனது இடது கையை மனாசேயின் தலைமீதும் வைத்தார். இதனைக் கண்ட யோசேப்பு தன் தந்தையின் கைகள் மாறாக வைக்கப்பட்டதை விரும்பவில்லை.

"தந்தையே! எனது மூத்த மகனான மனாசேயின் தலை மீதல்லவா தங்கள் வலக்கையை வைக்க வேண்டும். தங்கள் இடக்கைதான் எப்ராயிமின் தலைமீது இருக்க வேண்டும்!" என்று சுட்டிக்காட்டினார். ஆனால் யாக்கோபு, "தெரியும் மகனே! ஆண்டவன் அருளால் எனது வலப்புறமிருப்பவன் நிச்சயம் பல சிறப்புக்களையும் பெற்று வாழ்வான். அதைவிட மேலான சிறப்புக்களை எனது இடது புறமிருக்கும் உனது இளைய மகன் பெறுவான். நீங்கள் எல்லோருமே சிறப்புடன் வாழ்ந்து சந்ததியைப் பல்கிப் பெருகச் செய்வீர்கள்!" என்றார்

(தொடர்ந்து வரும்)

**திருமறை ⑥ விடை:**
(1) பானம் பரிமாறுவோன்
(2) உணவு தயாரிப்போரின் தலைவன்

**பரிசு பெறுவோர்:**

1. செல்வி. கிஷாந்தினி பஞ்சலிங்கம், 10, ஒளி ஹவுஸ், லிங்கநகர், திருகோணமலை.
2. திலக் கிளிபட், 74, ஷூ வீதி, கொழும்பு-13.
3. யு.கே. ரபீக், 164, கே.கே.பி. வீதி, கல்முனை-03
4. கிறிஸ்துகனி எம். ஜேசுதாசன், 317, தரவளை வீதி, டிக்கோயா.
5. எஸ். செபஸ்டியன் ராஜ், டிரைட்டன், கே.ஒ. பிரிவு, கொட்டகலை.

**திருமறை 08 வினா:-** யோசேப்பின் புதல்வர்களின் பெயர்களைத் தருக?

மே. 16க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 08 – தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# கொழும்பில் தங்க சொகுசு விடுதி



கொழும்பு வரும் தமிழர்களுக்கு ஒரு நற்செய்தி.

இனிமேல் நீங்கள் வெளியே எங்கும் தங்குவதற்கு, உங்கள் நலன் கருதி, எங்கள் அரசு அனுமதிக்காது!

உங்களுக்காக சூப்பர் டுப்பர் சொகுசு விடுதி அமைக்கப்பட உள்ளது.

இங்கு ஒருமுறை வந்தால் மீண்டும் சொந்த ஊர் திரும்பும் வரை வெளியே நடமாட நீங்கள் விரும்பவே மாட்டீர்கள். அப்படி நீங்கள் விரும்பினாலும் உங்கள் நலன் கருதி எங்கள் அரசு அனுமதிக்க மாட்டாது.

உள்ளேயே நல்ல காற்றோட்டம் ஏற்பாடு செய்யப்படும். காற்றாட நீங்கள் உள்ளேயே நடமாடலாம். வெளியே கால்வைக்க தேவையில்லை.

உள்ளேயே இருந்து சன்னல்கள் வழியாக தெருவை வேடிக்கை பார்க்க போதிய சன்னல்கள் ஏற்பாடு செய்யப்படும். அதனால் வெளியே செல்ல வேண்டிய அவசியமே இருக்காது.

கொழும்பு நகரின் அழகை கண்களால் பருக விரும்பினால், விடுதியின் மொட்டை மாடியில் நின்று பார்த்துக் கொள்ளலாம். அங்கிருந்து பார்த்தால் கொழும்பு நகரமே தெரியுமளவுக்கு உயரமான இடம் ஏற்பாடு செய்யப்படும்.

அதனால் கொழும்பை சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு எழவே எழாது. உள்ளேயே இருந்து வெளியே இரசிக்கும் அபூர்வமான வசதி இது.

இங்கு தங்குவதற்கு அனுமதி பெறுவது மிக மிகச் சுலபம்.

உங்கள் பகுதி பொலிஸ் நிலையத்திலோ, இராணுவ முகாமிலோ அத்தாட்சிக் கடிதம் ஒன்றே ஒன்று பெற்றுக் கொண்டால் போதும்.

அந்த அத்தாட்சிக் கடிதத்தை மூன்று மாதம் முன்பாக எமக்கு அனுப்பிவைத்தால் போதும்.

உங்கள் புகைப்படத்தில் 'இவர் பயங்கரவாதியல்ல' என்று கிராம சேவையாளரின் உத்தரவாதமும் தேவைப்படும்.

இப்படியான அத்தாட்சிகளை பெறுவது எத்தனை சுலபம் என்பதை ஏற்கனவே பெற்ற அனுபவங்கள் மூலம் நன்கு அறிந்திருப்பீர்கள்.

விடுதிக்குள் புகமுன்னர் உங்களை சந்தோசப்படுத்துவதற்காக விலாவாரியாக வீடியோ எடுக்கப்படும். இதற்கு நீங்கள் கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை.

விடுதியில் தங்கி இருக்கும்போது இடைக்கிடையே மட்டும், உங்களை பயங்கரவாதிகளிடம் இருந்து விடுவிப்பதற்கான தூய மற்றும் தூர நோக்கத்துடன் உங்கள் அறைகளை தலைகீழாக புரட்டி சோதனை நடத்தப்படும்.

தொலைபேசிகள், வங்கிகள் போன்றவற்றையும் உள்ளேயே ஏற்பாடு செய்து தந்துவிடுவோம். எனவே நீங்கள் வந்த காரியத்தை உள்ளேயே முடித்துக்கொண்டு வெற்றிகரமாக ஊர் திரும்பலாம்.

உங்களை வரவேற்று, சகல வசதிகளுடனும் பத்திரமாக பூட்டி வைத்து உபசரித்து, உங்கள் நலனுக்காக உங்களை ஒரே இடத்தில் வைத்து கண்காணித்து அனுப்பிவைப்பது பொறுப்புள்ள அரசின் கடமையாகும்.

**முக்கிய குறிப்பு:** சொகுசு விடுதிக்குள் வைத்து கைது செய்யப்படுவோருக்கு சொகுசு சிறை ஏற்பாடு செய்யப்படமாட்டாது.

**எச்சரிக்கை:** 'திறந்த வெளி சொகுசுச் சிறைச் சாலை' என்று விஷமிகள் கூறுவதை நம்ப வேண்டாம்!

# பட்டை நாமமும் வர்ணப் பூவும்

கொழும்புக்கு புதிதாக வரும் வடக்கு-கிழக்கு தமிழர்களையும், ஏற்கனவே கொழும்பில் உள்ள தமிழர்களையும் இனம் காண 'பட்டை நாமம்' போடும் திட்டம் அமுலுக்கு வரும்.



வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு நெற்றியில் வெள்ளைப் பட்டை நாமமும், கொழும்பில் வாழும் தமிழர்களுக்கு மஞ்சள் நிற பட்டை நாமமும் வழங்கப்படும். மொத்தத்தில் சகல தமிழர்களுக்கும் பட்டை நாமம் சாத்தப்படும்.

தமிழர்கள் படும் இன்னல்களை பயங்கரமான ஆவேசத்தோடு சுட்டிக் காட்டிய தமிழ் பா.உக்களிடம் மேற்கண்ட உத்தரவாதம் வழங்கப்பட்டது.

மிகத் திருப்தியோடு தலையசைத்து மேற்கண்ட உத்தரவாதத்தை அவர்கள் பெற்றுக் கொண்டனர்.

கொழும்பு வாழ் தமிழர்களுக்கு சிவப்பு, மலையகத் தமிழர்களுக்கு பச்சை, வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு மஞ்சள் ஆகிய வர்ணங்களில் பூ வழங்கினால், அவர்கள் காதில் வைத்துக்கொண்டு நடமாடலாம். எட்டத்தில் வைத்தே இனம் காணவும் பாதுகாப்பு தரப்பாருக்கு ரொம்ப வசதியாக இருக்கும் என்றும் ஒரு அபிப்பிராயம் உள்ளதாம்.

# ஐக்கிய 'மோ' தினம்

ஐக்கிய 'மே'தினம் கொண்டாடியதாக சில தமிழ்க் கட்சிகள் அறிவித்திருந்தன. இது ஆண்டுக்கொரு தடவை நடைபெறும் கொண்டாட்டமாகும்.

தமிழ்க் கட்சிகள் அடிக்கடி கொண்டாடும் தினம் ஐக்கிய 'மோ' தினமாகும்.

பதவிப் போட்டி, சலுகைப் போட்டி,தலைமைப் போட்டி, அதிகாரப் போட்டி போன்ற நோக்கங்களில் ஐக்கியத்துடன், அவற்றை அடைய தமக்குள் மோதும் நிகழ்ச்சிகளே ஐக்கிய மோ தினம் என்று அழைக்கப்படுகிறது. 'மோதல்' என்பதன் சுருக்கமே 'மோ'.

ஐக்கிய 'மோ'தினம் எப்போதெல்லாம் நடைபெறும்?

எப்போது வேண்டுமானாலும் நடைபெறலாம்.

குறிப்பாகவும், சிறப்பாகவும், தேர்தல் காலங்களிலும், குறுநிலப் பகுதிகளில் நீயா நானா? போட்டிகளிலும் ஐக்கிய 'மோ' தினம் சிறப்பாக, 'குண்டுவீச்சு', 'பொல்லடி', 'துப்பாக்கிச் சூடு' போன்ற கலை அம்சங்களுடன் கோலாகலமாக நடைபெறும்.

ஆண்டுக்கு ஒருதடவை வருவது ஐக்கிய 'மே' தினம்!

ஆண்டுக்கு பல தடவை வருவது ஐக்கிய 'மோ' தினம்!

# கருணாநிதியின் மத இணக்கம்

பேரறிஞர் அண்ணா ஒருமுறை, "நான் சிலுவை அணியாத கிறிஸ்தவன், தொப்பி போடாத முஸ்லிம், திருநீறு அணியாத இந்து" என்று கூறினார்.



நான் ஒரு படிமேலே போய் கூறுகிறேன்; நீங்கள் சிலுவை அணியச் சொன்னால் நான் சிலுவை அணிந்து கொள்வேன், நீங்கள் தொப்பி போடச் சொன்னால் நான் தொப்பியும் போட்டுக் கொள்வேன். நீங்கள் திருநீறு பூசச் சொன்னால் நான் திருநீறும் பூசிக்கொள்வேன்! நீங்கள் கேட்பதை எல்லாம் நான் செய்கின்ற காரணத்தால், நான் கேட்பதை நீங்கள் செய்திட வேண்டாமா! எப்போது தேர்தல் வந்தாலும் எங்களுக்கே வாக்கு போட்டுவிடுங்கள் என்றுதான் கேட்கிறேன்!

எம் மதமும் சம்மதம் எனக்கு! கஞ்சி கொடுத்தால் நோன்புக்குச் செல்லுவேன், கொளுக்கட்டை தந்தால் விநாயக சதுர்த்திக்கும் செல்லுவேன், அப்பம் தந்தால் சர்ச்சில் நடக்கும் பூசைக்கும் செல்லுவேன். அப்படிப்பட்ட நான் நீங்கள் தொடர்ந்து வாக்களித்தால்தான் தினமும் கோட்டைக்குச் செல்வேன்!

ஜெயலலிதாவை 'பர்தா' போட்ட முஸ்லிம் பெண் தீவிரவாதி சந்திக்கிறார் என்று நாம் சொன்னதற்காக, கருணாநிதியை 'குர்தா' போன்ற இந்து தீவிரவாதி சந்தித்திருக்கிறார்" என்று ஜெயலலிதா கூறுவது அரசியல் நாகரிகமற்ற அபாண்டமான குற்றச்சாட்டு.

தாடிவைத்த முஸ்லிம் தீவிரவாதி ஒருவர் அவரை சந்தித்ததாக நான் கூறினால், சடை வைத்த இந்து தீவிரவாதி என்னைச் சந்தித்ததாக கூறக்கூடியவர்தான் ஜெயலலிதா என்பதால், தாடிவைத்த தீவிரவாதியுடன் ஜெயலலிதாவை தொடர்புபடுத்த நான் விரும்பவில்லை.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு. கொழும்பு 11

436331


# புனிதப் பல்

→ இவ்வருடம் ஏப்ரல் மாதம் 3வது வாரத்தில் தைவான் நாட்டு பௌத்தர்களுக்கு பெரும் கொண்டாட்டம். 2500 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த கௌதம புத்தருடைய பல்லு அடங்கிய பேழை அங்குகொண்டுவரப்பட்டது.

தாய்லாந்திலிருந்துதான் இப்புனிதப் பேழை தைவானில் உள்ள தேசிய சீன பௌத்தர்களின் தரிசனத்துக்காக அனுப்பி வைக்கப் பட்டது. தலைநகரான தைப்பேயில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான பக்தர்கள் புனித பல்லைத் தரிசிக்கத் திரண்டனர். ஆனாலும் இதிலும் ஒரு சர்ச்சை கிளம்பியுள்ளது. புத்தரின் பல்லு ஒரிஜனலா, போலியா? என்பதுதான் சர்ச்சை.

சீன அரசுடன் நெருக்கமான உறவு கொண்டுள்ள 'சீன பௌத்தர்கள் சங்கம்' தாய்லாந்திலிருந்து அனுப்பப்பட்ட புனித புத்த பல்லு போலியானதாகும் என விமர்சித்தது. இருப்பினும் பக்தர்களின் மனோநிலையில் மாற்றம் ஏற்படவில்லை.

பல மணிநேரம் பயணம் செய்து வெகு தூரத்துக்கப்பாலிருந்து வந்த ஒருவர் "புத்த பகவானின் புனிதப் பல்லைத் தரிசித்தேன். என்னைத் துன்புறுத்திய முதுகுவலி போன இடம் தெரியவில்லை" என்கிறார்.

"புனித பல்லு" வைக்கப்பட்டிருக்கும் தங்கப் பேழை படத்திலுள்ளது.







ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


# அதிஷ்டம்




↑ அதிஷ்ட லாபச் சீட்டில் உலகிலேயே மிக அதிகமான பணப் பரிசு பெற்றவர்கள் இவர்கள்தான். லெஸ்லி ரொபின்ஸ் மற்றும் கொலின்டி விறின் ஆகிய இருவரும் அமெரிக்கா- விஸ்கொன்சின் மாநிலத்தை சேர்ந்தவர்கள்.

1993ம் ஆண்டு ஜூலை 7ம் திகதி இடம்பெற்ற 'பவர் போல்' குலுக்கலில் மொத்தம் 111,240,463 டொலர் 10 சதம் (74,353,689 பவுண்) வென்றனர். நம் நாட்டு மதிப்பில் எவ்வளவு என்று சொன்னால் மூர்ச்சையாகி விடாதீர்கள். அம்மாடியோவ் 765 கோடியே 84 இலட்சத்து 89 ஆயிரத்து 967 ரூபாய்கள்.

அதிக பணம் கிடைத்தது ஒரு பக்கம், உலக சாதனை மறு பக்கம், இருவருக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சிதான்.

# பெரிது

↗ எந்தக் கடையிலும் வைத்து விற்கமுடியாத பிஸ்கட் இது. காரணம், இந்த பிஸ்கட்டை வைத்திருக்கக்கூடிய இடவசதி கடைகளில் இருக்காது.

உலகிலேயே மிகப் பெரிய பிஸ்கட் இதுதான். நியூசிலாந்தில் உள்ள கிறைஸ்ட் சேர்ச் நகரில் 'குக்கி ரைம்' என்ற நிறுவனத்தால் 1996 ஏப்ரல் 2ம் திகதி இந்த உலக சாதனை பிஸ்கட் தயாரிக்கப்பட்டது.

இதன் எடை இரண்டரைத் தொன். 486.95 சதுர மீட்டர் (5 ஆயிரத்தி 241.5 சதுரஅடி) பரப்பளவு கொண்டது. இதனை இலண்டனில் உள்ள விம்பிள்டன் மைதானத்தில் வைத்தால் எவ்வளவு இடத்தைப் பிடிக்கும் என்பதையே படம் காட்டுகிறது.

இதனை ஒரேநாளில் சாப்பிட்டு முடிக்க எத்தனை பேர் தேவை என்கிறீர்கள்? 20 ஆயிரம்பேர் தேவை.



# தகர்ப்பு



→ எங்கே நடந்த குண்டுவெடிப்பு என்கிறீர்களா? தொடர்ந்து வாசியுங்கள்.

கோடிக் கணக்கில் பணம்செலவு செய்து கட்டப்பட்ட கட்டடங்கள் சிலவற்றை தேவைகளுக்காக இடித்துத்தள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதுமுண்டு.

அத்தகைய கால கட்டத்தில் உறுதியான கட்டங்களை வழமையான முறைப்படி இடித்தால் பலமாதங்களை சாப்பிட்டுவிடும். அதனால் இப்போதெல்லாம் எப்பேற்பட்ட பெரிய கட்டடமானாலும் சில நிமிடங்களில் இரக்கமே இல்லாமல் தகர்த்தெறிந்து விடுகிறார்கள். ஆனால் எவ்வாறு தகர்ப்பது என்பதைத் திட்டமிட்டுக் கணக்கெடுப்பதற்குத்தான் இரண்டொரு நாட்கள் செல்லும்.

கட்டடத்தின் உறுதி, அமைப்பு முறை, தளங்களின் செறிவு ஆகியவற்றை நிபுணர்கள் கணக்கிட்டு, சில இடங்களில் வெடிகுண்டுகளை வைத்துவிட்டு வெகு தொலைவிலிருந்து விசையை அழுத்தியவுடன் கட்டடம் தான் தானாகி கீழே அமிழ்ந்து தரைமட்டமாகிறது.

குண்டுவெடிப்பு ஏற்பட்டால் அயலில் உள்ள கட்டடங்கள் பாதிக்கப்படுமே என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. அந்தளவுக்கு கச்சிதமாக திட்டமிட்டு குண்டு பொருத்தப்படுகிறது. எனினும் ஒரு முன்ஜாக்கிரதைக்காக அயல் கட்டடங்களில் உள்ள மக்களை வெளியேற்றி விடுவார்கள். பாரிய மாடிக் கட்டடம் ஒன்று குண்டுவைத்து தகர்க்கப்படுவதையே படத்தில் காண்கிறீர்கள். இது ஆக்கத்திற்கான அழிப்பு.

# மூத்த விளையாட்டு



→ 'சதுரங்கம்' (செஸ்) என்னும் விளையாட்டு இன்று உலக அரங்கில் மிகப் பிரசித்தமாகிவிட்டது. ஆனால் இது மிக பூர்வீகமானது. பண்டைக் காலத்தில் இந்தியாவில் ஆட்சி புரிந்த மன்னர்களின் பொழுது போக்குகளில் ஒன்று சதுரங்கம்.

சதுரங்க ஆட்டத்தினால் பாண்டவர்களுக்கும் கவுரவர்களுக்கும் இடையில் பெரும் போரே மூண்டது என்பதை மகாபாரதம் காட்டுகிறது. இந்தியாவில் வர்த்தக நோக்கோடு வந்த ஐரோப்பியர்கள்தான் சதுரங்க விளையாட்டை இந்தியாவில் இருந்து கொண்டுபோய் உலகமெங்கும் பரவச் செய்தனர் என்று தெரிகிறது.

தற்கால சதுரங்க விளையாட்டில் தொடர்ந்து 27 வருடங்களாக தோற்கடிக்கப்படாத ஒப்பற்ற வீரனாகத் திகழ்ந்தவர் ஜேர்மன் நாட்டவரான எமானுவேல் லஸ்கர் என்பவர். 1894ம் ஆண்டு முதல் 1921 வரை லஸ்கர் கலந்துகொண்ட போட்டிகள் அனைத்திலும் வெற்றிவாகை சூடினார்.

செக்கோஸ்லவாக்கியாவில் பிறந்து பின்னர் பிரிட்டனில் குடியேறியவரான 'வேரா ஃபிரான் செஸ்னா ஸ்ரீவன்சன்' என்ற பெண்மணி 1927லிருந்து 1944-அவர் இறக்கும்வரை கலந்து கொண்ட ஏழு சர்வதேசப் போட்டிகளிலும் வெற்றியீட்டி சாதனை படைத்தார். 'செஸ்' விளையாட்டு கி.பி. 6ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்று கூறப்படுகிறது. அதாவது உலகில் மிகப் பழமையான விளையாட்டு இன்று வரை மவுசு கெடாத விளையாட்டும்கூட. படத்தில் இருப்பது மிக மிக சிறிய சதுரங்கப் பலகை உள்ளங்கை அளவும் இருக்காது. பெருப்பித்து பிரசுரமாகியுள்ளது.

# 1 வது பிறந்தநாள் வாழ்த்து



## துவாஹரணி (துயானா) 04.05.1998

துயாபரன்-குகநாயகி தம்பதியின் அன்புப் புதல்வி துவாஹரணி 04.05.1998 அன்று தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, அன்புத் தாத்தாமார், பாட்டிமார், சித்தப்பாமார், சின்னம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், நோர்வே மாமா, மாமி, அண்ணன்மார், அக்காமார், சுவிஸ் சித்தப்பா, சின்னம்மா, மற்றும் உற்றார், உறவினர்கள் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார்கள்.

தகவல்:- துயா(சுவிற்ஸர்லாந்து)

# சாதிப்பு




சச்சின் டெண்டுல்கர் தான் யாரென்பதை காட்டிக் கொண்டிருக்கும் நேரம் இது. அவரது துடுப்பு நன்றாகவே அவருடன் ஒத்துழைக்கிறது. சுழன்றாடுகிறது. சமீபத்திய ஷார்ஜா போட்டியில் ஐந்து ஆட்டங்களில் மொத்தம் 435 ரன்களைக் குவித்தார். அதில் இரண்டு சதங்களும், ஒரு அரைச்சதமும் அடக்கம்.

அவுஸ்திரேலிய அணி இந்திய சுற்றுப்பயணம் வந்தது முதல் ஷார்ஜா போட்டிவரை டெஸ்ட் போட்டி உட்பட சச்சின் குவித்த ரன்கள் 1130. ஷார்ஜாவில் இந்தியாவை வெற்றிப்பாதையில் அழைத்துச் சென்றவர் சச்சின்.

அவுஸ்திரேலிய அணி கப்டன் ஸ்டீவ் வோவ் டெண்டுல்கரை: "பிரட்மனுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் சச்சின்தான் சிறந்த ஆட்டக்காரரார். பந்து வீச்சாளர்களது பந்தை துல்லியமாக கவனித்து மட்டையை இலாவகமாக சுழற்றுவதில் கில்லாடி" என்று புகழ்ந்துள்ளார்.



www.padippakam.com படிப்பகம்